www.tamilarangam.net

# தமிழ்த் தொண்டாற்றிய சான்றோர்கள்

வரதராஜன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழ்த் தொண்டாற்றிய சான்றோர்கள்

(இலக்கியம்-இதழ்கள்-பதிப்பகம்)

**வரதராஜன்**

**தாமரை பப்ளிகேஷன்ஸ் (பி) லிட்.,**
41-பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்,
அம்பத்தூர், சென்னை- 600 098.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# THAMIZH THONDAATRIYA SAANTRORKAL

Edited by
*VARATHARAJAN*

முதல் பதிப்பு : பிப்ரவரி, 2001.

© பதிப்பகத்தாருக்கு

Code No : T009

**விலை : ரூ.48.00**

ஒளி அச்சு : NCBH கம்ப்யூட்டர்ஸ்

அச்சிட்டோர்:

**அய்யனார் ஆஃப்செட், சென்னை - 600 106. ✆ 620 6913**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பதிப்புரை

பிறந்த நாடும் பேசும் மொழியும் போற்றப்பட வேண்டியவை. மொழி விழிபோன்றது. பெற்றோரையும் பேசும் மொழியையும் பேணுவது நமது கடமை. உலகிலுள்ள ஆறாயிரம் மொழிகளில் தமிழ் மொழி பதினேழாவது இடத்தில் இருக்கிறது. தமிழர்கள் இல்லாத நாடே இல்லை. உலகில் எந்த இடத்திலும் தமிழன் தனது தனித்தன்மையை நிலை நிறுத்துகிறான். அறிவு, ஆற்றல் அத்தனையும் வெளிப்படுத்தி வெற்றிக் கொடி நாட்டுகிறான்.

முதல் குடி தமிழ்க்குடியே என்பார்கள். தமிழில் இலக்கியங்கள் பரந்து விரிந்து கிடக்கின்றன. இலக்கண வளம் செறிந்து கிடக்கிறது. தமிழ் மொழியில் எழுதப்பட்ட பல நூல்கள் உலக மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. திருக்குறள் உலகப் பொதுமறையாக விளங்குகின்றது. கணியன் பூங்குன்றனாரின் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற தெளிந்த பார்வை பிற நாட்டாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

தமிழ் மொழி வளர்ச்சிக்காக எழுத்து, கல்வி, இதழ்கள், பதிப்பகம் வாயிலாகத் தொண்டு செய்தவர்கள் காலத்தால் மறக்க முடியாதவர்கள். அவர்களின் வரலாறு பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவை. **தமிழ்த்தொண்டாற்றிய சான்றோர்கள்** என்ற சிறந்த நூலை எழுத்தாளர் திருமிகு. **வரதராஜன்** அவர்கள் நல்ல வண்ணமாகப் படைத்துத் தந்துள்ளார்கள். ஏடுகளைப் படிக்க வேண்டும். ஏடுகளை எழுதித் தந்த எழுத்தாணியை வணங்க வேண்டும். அதைப் போல் வேர்களாக இருந்து தமிழ்த் தொண்டாற்றி தமிழ்மொழி என்ற மரம் பூத்து, காய்த்து, கனிந்து பொலிவோடு விளங்குவதற்குக் காரணமாக இருந்த சான்றோர்களை நாம் வணங்க வேண்டும். அவர்களை வணங்குவதற்குக் கருத்து மலர்களை அள்ளி நம் கைகளில் தருகிறார் நூலாசிரியர்.

இந்நூல் வாசகர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமையும் எனக் கருதி எமது **தாமரை பப்ளிகேஷன்ஸ்** இதனை வெளியிடுகிறது. தமிழ்த் தொண்டாற்றிய சான்றோர்கள் காலவரிசையாக இந்நூலில் இடம்பெறுகிறார்கள். அவர்கள் பிறந்த அன்றே தமிழின் நறுமணம் அவர்களின் மீது வீசத் தொடங்கிவிட்டது என்பது இதன் மூலம் எடுத்துக்காட்டப்படுகிறது.

**–பதிப்பகத்தார்.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தமிழ் வளர்ச்சிக்குப் பங்கேற்றவர்கள்


| எண் | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | வீரமா முனிவர் | (8-11-1680) | 1 |
| 2. | கால்டுவெல் | (1814) | 7 |
| 3. | மீனாட்சி சுந்தரம்பிள்ளை | (6-4-1815) | 13 |
| 4. | ஈசுவர சந்திர வித்தியாசாகர் | (1820) | 20 |
| 5. | மாயூரம் வேதநாயகம் பிள்ளை | (11-10-1826) | 26 |
| 6. | கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை | (14-7-1878) | 32 |
| 7. | மறைமலை அடிகளார் | (15-7-1876) | 37 |
| 8. | பேராசிரியர் பி.என். சீனிவாசாச்சாரியார் | (18-7-1878) | 43 |
| 9. | நாவலர் சோமசுந்தர பாரதியார் | (27-7-1879) | 49 |
| 10. | பண்டிதமணி கதிரேசன் செட்டியார் | (16-10-1881) | 54 |
| 11. | திரு.வி.கலியாணசுந்தரனார் | (26-8-1883) | 60 |
| 12. | இ.மு. சுப்பிரமணியப்பிள்ளை | (6-6-1886) | 65 |
| 13. | மோசூர் கந்தசாமிமுதலியார் | (19-1-1887) | 71 |
| 14. | கா.சு. பிள்ளை | (5-11-1888) | 74 |
| 15. | வா. ராமசாமி | (17-9-1889) | 79 |
| 16. | தமிழவேள் பி.டி. ராசன் | (12-4-1892) | 85 |
| 17. | ரா.பி. சேதுபிள்ளை | (2-3-1896) | 92 |
| 18. | கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தி | (9-9-1899) | 98 |

www.tamilarangam.net




19. முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் (11-11-1899) 103

20. சாமிசிதம்பரனார் (1-12-1900) 108

21. தேவநேயப் பாவாணர் (7-2-1902) 113

22. சி.பா. ஆதித்தனார் (27-9-1905) 119

23. புதுமைப்பித்தன் (25-4-1906) 124

24. நாரண. துரைக்கண்ணன் (24-8-1906) 130

25. அறிவுச்சுரங்கம் அப்பாத்துரையார் (24-6-1907) 136

26. மு. வரதராசனார் (25-4-1912) 141

27. விந்தன் (22-9-1916) 147

28. இளங்குமரனார் (30-1-1930) 153

29. அரிராம்சேட் (9-4-1934) 158

30. 'அப்பா' நா. அருணாசலம் (12-5-1940) 165

31. மேகலிங்கம் சுப்பிரமணியன் (4-2-1943) 176

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

1

# வீரமா முனிவர்

(8–11–1680)

தமிழராகப் பிறந்தும் தமிழ் பேசத் தெரியாதவர்கள் நம்மிடையே அதிகம்பேர் வாழ்ந்து வருவதைப் பார்த்திருக்கிறோம். தமிழ் மொழிக்கே சம்பந்தம் இல்லாத அயல்நாடுகளில் பிறந்து, சமயத் தொண்டின் காரணமாகத் தமிழ் நாட்டுக்கு வந்து தமிழ் படித்து, தமிழர்களாகவே மாறித் தமிழ்த் தொண்டு செய்தவர்கள் பலர். அவர்களுள். 'பெஸ்கி அடிகளார்' என்னும் வீரமாமுனிவரும் ஒருவர்.

வீரமாமுனிவர் இத்தாலி நாட்டில் உள்ள 'காஸ்தில்யோனே' என்ற ஊரில் 8-11-1680ம் ஆண்டு பிறந்தவர். இவரது தந்தையார் கண்டல்போ பெஸ்கி. தாயார் எலிசபெத்தா. வீரமாமுனிவரின் இயற்பெயர் கான்ஸ்டன் டைன்யுசேபியுஸ் ஜோசப் பெஸ்கி என்பது.

பெற்றோரின் ஒரே பிள்ளையான இவர், சிறு வயதிலேயே இறைப்பணி செய்ய நாட்டம் கொண்டார். இவரது பெற்றோரும் இதற்குத் தடை சொல்லாததினால் தனது 18-ம் வயதிலேயே துறவு பூண்டு 1698-ம் ஆண்டு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஏசு சபையில் தொண்டராகச் சேர்ந்து போதகராகப் பயிற்சி பெற்றார். பிரெஞ்சு கிரேக்கம், எபிரேயம், போர்த்துக்கீசியம் ஆகிய மொழிகளைக் கற்றுத் தேர்ந்து குருபட்டம் பெற்றார்.

பெஸ்கி அடிகளார் தமிழ்நாட்டில் உள்ள மதுரைப் பகுதியில் சமயத் தொண்டு செய்ய விரும்பினார். 1710-ம் ஆண்டு பெற்றோர் மற்றும் ஏசு சபையினரின் சம்மதத்துடன் இந்தியாவுக்கு வந்து கோவா்வில் தரையிறங்கினார். அம்பலக்காடு என்ற இடத்தில் வந்து ஒரு மாதம் தங்கிய பின், காம நாயக்கன்பட்டி என்ற ஊருக்குச் சென்றடைந்தார். இது மதுரை மாவட்டத்தில் உள்ள ஊர். இந்த ஊரே அவர் சமயத் தொண்டு செய்யும் இடமாக அமைந்தது. தனது பெயரை உச்சரிப்பதற்குத் தமிழ் மக்கள் சிரமப்படுவதை அறிந்த பெஸ்கி அடிகள், 'தைரியநாத சுவாமி' என்று பெயர் மாற்றம் செய்து கொண்டார். அந்தப் பெயரே பிறகு வீரமாமுனிவர் என்று தூயத் தமிழில் அழைக்கப்படலாயிற்று.

வீரமாமுனிவரின் பெயர் மாற்றத்திற்கு இன்னொரு காரணம், அன்னிய பெயருடையவர்களை மக்கள் அன்னியர்களாகவே கருதியதோடு, அவர்களிடமிருந்து ஒதுங்கியும், அவர்களின் பணிக்கு இடையூறாக இருந்ததுவுமாகும். இதனால் வீரமாமுனிவர் தமிழ் கற்று, தமிழ்ப் பெயரைத் தனக்குச் சூட்டிக் கொண்டதோடு, தமிழரைப் போலவே உடை அணிய ஆரம்பித்தார். நெற்றியில் சந்தனம், காலில் பாதக் குறடு, காதுகளில் முத்துக்கடுக்கன், உடம்பில் காவி, இடையில் காவிக்கச்சை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அணிந்திருப்பார். அதோடு புலித்தோல் ஆசனத்தில் அமர்ந்தே இறைவனைத் தொழுதார்.

அயல் நாடுகளில் இருந்து வரும் கிறிஸ்தவத் துறவிகள் பெரும்பாலும் தூத்துக்குடி மணப்பாடு, புன்னக்காயல் ஆகிய ஊர்களில் தங்கியே தமிழ் பயில்வர். வீரமாமுனிவரும் அதனைப் பின்பற்றியே தூத்துக்குடியில் தமிழ் பயின்றதாகக் கூறுவர். தமிழ் இலக்கிய - இலக்கண நூல்களைக் குறைவறக் கற்றுக்கொண்டு ஐந்தாண்டுகளுக்குள்ளேயே பெரும் புலவரானார்.

வீரமாமுனிவர் ஏழைமக்களிடம் அன்பும், இரக்கமும் காட்டி அவர்களுக்கு எல்லாவிதமான உதவிகளையும் செய்து வந்தார். பணம் படைத்தவர்களும் கூட அவருடைய தன்னலமற்ற சேவையை நாடினர்.

கயத்தாறு பாளையத் தலைவர் மழவராயன் என்பவரின் உறவினர் ஒருவன் ஏமாற்றுக்காரன். வீரமாமுனிவரின் மீது பொறாமை கொண்டு, அவருக்குத் தீங்கு செய்தான். அதோடு ஆலங்குளம் என்ற ஊரில் பாசறை அமைத்துத் தங்கிய முகம்மதியப்படை வீரர்களிடம் முகமதியரைப் போல வேடமிட்டுச் சென்று, .முகமதியன் என்பதால் தைரியநாதன் என்னை அடித்து துன்பப்படுத்தினார். என்றெல்லாம் பொய்யுரை கூறியதோடு, "அவர் பெரும் புதையலை ஒளித்து வைத்திருக்கிறார். அந்தப் பணச் செருக்கால்தான் அவர் தன்னிடம் இவ்விதம் நடந்து கொண்டார்" என்றும் கூறினான்.

www.tamilarangam.net



இதை உண்மையென்று நம்பிய முகமதிய வீரர்கள் படையுடன் சென்று வீரமாமுனிவரைப் பிடித்து துன்பப்படுத்தினர். வீரமாமுனிவருக்கு மரண தண்டனை விதித்தனர். அதை அறிந்த குருக்கள்பட்டி கிறித்தவர்களும், செல்வர்களும் பெருஞ் சினம் கொண்டனர். அவர்களின் பரிந்துரையால் முனிவரைப் படைத்தலைவன் விடுதலை செய்தான். அதன் பின்பு முனிவர் ஒவ்வொரு ஊராகச் சென்று சமயப்பணி செய்து வந்தார்.

தஞ்சாவூரை ஆண்ட சரபோஜி மன்னரும், அவருடைய தந்தையார், பாட்டனார் அனைவரும் அக்காலத்தில் கிறிஸ்தவ மக்களுக்குத் தொல்லை கொடுத்தனர். கிறித்தவர்கள் கடவுளை வணங்கவே இடையூறு விளைவிக்கப்பட்டபோதுதான் 'ஏலாக்குறிச்சி' என்னும் ஊரில் அடைக்கலமாதா ஆலயம் என்னும் கோயிலை வீரமாமுனிவர் அமைத்தார். அக்கோயிலுக்கு தஞ்சையின் பல பகுதிகளில் இருந்தும் மக்கள் வந்து வணங்கிச் சென்றனர். அடைக்கல அன்னையின் மீது திருக்காவலூர்க் கலம்பகம், அடைக்கல நாயகி வெண்கலிப்பா, அடைக்கல மாலை, அன்னை அழுங்கல் அந்தாதி போன்ற கவிதை நூல்களைப் பாடினார்.

ஆலூர் என்ற ஊரில் முகமதியப் படைகள் தங்கியிருந்தன. அவர்களுக்குக்குரிய பசுக்களை அப்பகுதியைச் சேர்ந்த குறுநில மன்னர் ஒருவர் களவாடிச் சென்றுவிட்டார். இதை உணராத முகமதியர், அவ்வூர்

www.tamilarangam.net



மக்கள்தான் பசுக்களைத் திருடினர் என நினைத்து அவர்களைத் துன்புறுத்தினர். வீரமாமுனிவர் அவ்விடத்திற்கு வந்து மக்களின் அறியாமையை எடுத்துக் கூறி அவர்களைக் காப்பாற்றினார்.

சந்தா சாகிபு என்னும் முகமதிய மன்னரோடு மிகவும் அன்புடன் பழகினார் வீரமாமுனிவர். அம்மன்னருடன் பேசுவதற்காகவே இந்துஸ்தானி, பாரசீக மொழிகளை மூன்று மாதங்களில் கற்றுக்கொண்டார். அதனால் மேலும் முனிவர் மீது அன்பு கொண்ட சந்தா சாகிபு, கிறித்தவர்களுக்குப் பெரும் உதவி புரிந்தார். வீரமாமுனிவரைப் பாராட்டி 'இஸ்மாத்தி சந்நியாசி' என்ற பட்டத்தை வழங்கினார். இதற்குத் 'தூய துறவி' என்று பெயர்.

பாமர மக்களால் நிகண்டு என்ற அகராதிகளிலிருந்து பொருள் தெரிந்துகொள்ள முடியாது என்பதற்காக 1732-ம் ஆண்டு 'சதுரகராதி' என்னும் அகராதி (டிக்ஸ்னரி)யை வெளியிட்டார்.

இதுவே தமிழில் தோன்றிய முதல் அகராதியாகும். இது தவிர தமிழ் - லத்தீன் அகராதி போர்த்துக்கீசியம் - தமிழ் - இலத்தீன் அகராதி என்னும் அகராதிகளையும் எழுதினார்.

'தொன்னூல் விளக்கம்', 'கொடுந்தமிழ் இலக்கணம்', 'செந்தமிழ் இலக்கணம்' 'கிளாவிஸ்' என்னும் இலக்கண நூல்களையும், தேம்பாவணி, கித்தேரியம்மாள் அம்மானை, முதலிய இலக்கிய நூல்களையும், லூத்தேர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இனத்தார் இயல்பு, வேத விளக்கம், வேதியர் ஒழுக்கம், பேதகம் மறுத்தல் முதலிய உரைநடை நூல்களையும் எழுதினார். இதுதவிர பல சிறு கதைகளை எழுதியும், மொழி மாற்றம் செய்தும் தமிழுக்கு வழங்கினார். இப்போது நாம் பயன்படுத்தும் 'ஏ''ஓ' போன்ற எழுத்துகள் வீரமாமுனிவர் தந்தவை. இவ்வாறு பல விதங்களில் தமிழ் எழுத்துச் சீர்திருத்தங்களையும் செய்த முனிவரைத் தமிழறிஞருள் மிகச் சிறந்தவர் என்று போற்றுகிறார்கள். திருக்குறளில் அறத்துபால் பொருட்பாலை லத்தீனில் மொழிபெயர்த்துள்ளார்.

செந்தமிழ் தேசிகன், வீரஆரியன் போன்ற பெயர்களாலும் அழைக்கப்பட்ட வீரமாமுனிவர் அம்பலக்காடு என்னும் ஊரில் 4-2-1747-ம் ஆண்டு தனது 67-ம் வயதில் காலமானார். அவரது மறைவு கேட்டு அக்காலத்தைய தமிழ் உலகம் கண்ணீர் வடித்தது. வீரமாமுனிவரின் அறிவையும், ஆற்றலையும் பாராட்டும் விதத்தில் இத்தாலியில் அவர் பிறந்த ஊரில் அவருக்குச் சிலை வைக்கப்பட்டுள்ளது. தமிழக அரசும் பலவித சிறப்புகளைச் செய்துள்ளது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**2**

# கால்டுவெல்

(1814)

தமிழுடனே பிறந்திருந்தாலும் தமிழர்களாகிய நாம் சாதிக்காததை எல்லாம் வெளிநாட்டிலிருந்து வந்து நம்மோடு தங்கியவர்கள் சாதித்திருக்கிறார்கள். அவர்களில் ஒருவர் கால்டுவெல் என்னும் அறிஞர். இவர் தமிழ்தான் பழமையான மொழி என்றும், தமிழர்கள் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சிறந்து விளங்கியவர்கள் என்றும் ஆராய்ந்து கூறியவர். தமிழுக்கு ஒப்பிலக்கணம் படைத்தவர்.

அயர்லாந்து நாட்டில் கிளாடி என்னும் ஊரில் 1814-ம் ஆண்டு பிறந்த கால்டுவெல், சிறு வயதிலேயே இலக்கியம் மற்றும், ஓவியக் கலையில் மிகுந்த ஆர்வம் உள்ளவராக விளங்கினார். சமயப்பணி ஆற்றுவதற்காக கிளாஸ்கோ பல்கலைக்கழகத்தில் சேர்ந்து கிரேக்கம், லத்தீன் ஆகிய மொழிகளைப் பயின்று பி.ஏ. தேர்வில் முதலாவதாக வந்தார். அக்கல்லூரியில் படிக்கும்போதே அவருடைய கிரேக்க மொழி ஆராய்ச்சியைப் பேராசிரியர்கள் வியந்து பாராட்டினர்.

www.tamilarangam.net



சமயப்பணியின் பொருட்டு இந்தியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்ட கால்டுவெல், சென்னைக்குப் புறப்பட்ட கப்பலிலேயே தனது நண்பர் ஒருவர் மூலம் வடமொழியைப் பயின்றார். சென்னை வந்தபோது மேல் நாட்டிலிருந்து வந்து தமிழைப் படித்துப் புலமை பெற்றிருந்த துருவர் என்பவரின் இல்லத்தில் தங்கித் தமிழ் பயின்றார். பாண்டிய நாட்டுக்குச் சென்று சமயப்பணி ஆற்ற விரும்பிய கால்டுவெல், தமிழக மக்களின் வாழ்க்கை முறையை அறிந்து கொள்வதற்காகச் சென்னையிலிருந்து கால்நடையாகவே மாயூரம், தரங்கம்பாடி, கும்பகோணம் வழியாகத் தஞ்சை சென்றார். பின்பு அங்கிருந்து நீலகிரிநோக்கி நடந்தார். மதுரைக்கு வருவதன் பொருட்டு அவர் கோவை வழியாகப் புறப்பட்டார். வரும்வழியில் அவருக்கு உணவும் தங்க இருப்பிடமும்கூட கொடுக்க மக்கள் தயங்கினர். மாட்டுத் தொழுவத்தில் இரவு தங்க நேர்ந்த அனுபவமும் அவருக்கு உண்டு.

நெல்லைக்கு அருகில் நாசரேத் என்னும் ஊரில் முதன்முதலாகச் சொற்பொழிவாற்றிய கால்டுவெல், இடையன்குடி என்னும் ஊரைத் தனது நிரந்தர இருப்பிடமாகக் கொண்டார். அவ்வூர் மக்களுக்குச் சுகாதாரம் கல்வி போன்றவற்றைப் பயிற்றுவித்ததோடு, குடிநீர் கிணறுகளையு.ம் அமைத்தார். சிறுவர்களுக்காகப் பல பள்ளிகளைத் திறந்து தாமே ஆசிரியராகப் பணிபுரிந்தார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நாஞ்சில் நாட்டைச்சேர்ந்த எலீசா என்ற தமிழ்ப் பெண்ணை காதலித்துத் திருமணம் செய்துகொண்டார். அவ்வம்மையாரும் தன் கணவருக்குத் துணையாக ஆசிரியப்பணி புரிந்து வந்தார்.

புதுமைகளை ஆராயும் மனப்பாங்கு கொண்டவர் கால்டுவெல். இவர் இடையன்குடியில் இருந்து செம்மணல்களை மூட்டையாகக்கட்டி வியன்னாவில் நடந்தப் புதுவகைப்பொருள்கள் கண்காட்சிக்கு அனுப்பி, இத்தகைய மணல் உலகில் வேறு எந்தப் பகுதியிலும் இல்லை என்பதை உலகிற்குத் தெரியபடுத்தினார்.

திருக்குறளையும், சிந்தாமணியையும், பவணந்தி முனிவர் இயற்றிய நன்னூலையும் படித்துத் தமிழ்ச் சொற்களின் நுட்பம் உணர்ந்து புலவரானார். இடையன்குடிக்கு அருகில் உள்ள காயல் என்னும் இடத்தில் குடில் அமைத்துத் தமிழாய்ந்தார்.

சென்னையில் கிறிஸ்தவ சமயத் தலைவராக இருந்தவரின் வேண்டுகோளுக்கு இணங்கிக் கிறிஸ்தவ வழிபாட்டுக்காகத் தியான மாலை என்ற ஒப்பற்ற நூலையும், பதினோராண்டுகள் முயன்று 'பவர்' என்பவர் அமைத்த குழுவுடன் இணைந்து எளிய முறையில் தமிழ் மொழியில் பைபிள் மொழி பெயர்ப்பையும் வெளியிட்டார்.

பழந்தமிழ் நூல்களையும், பிறநாட்டு வணிகர்களின் குறிப்புகளையும் நுட்பமாகக் கற்றறிந்தபோது பழந்தமிழ்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நாட்டை ஆய்ந்து பார்க்க வேண்டும் என்ற எண்ணம் அவருக்கு உண்டானது. அதனால் தனக்குக்கிடைத்த பழமையான பொருட்களையும், காசுகளையும் சேகரித்து வைத்தார். பழந்தமிழகத்தில் பெரும்பகுதி கடலில் மூழ்கிவிட்டதை அந்தக் குறிப்புகளைக் கொண்டு அறிந்து தெரியப்படுத்தினார்.

மார்க்கோபோலோ என்ற பயணி மற்றும் கிரேக்கர்களின் குறிப்புகளிலிருந்து கொற்கைத் துறைமுகத்தைப்பற்றி அறிந்துகொண்ட கால்டுவெல், அரசின் உதவியுடன் அதை அகழ்வாராய்ச்சி செய்து, இப்போதுள்ள நில மட்டத்திற்கு எட்டு அடி கீழேதான் பழங்காலக் கொற்கைத் துறைமுகம் கடலில் புதையுண்டது. எஞ்சியவை தாமிரபரணி ஆற்றில் புதையுண்டு போயிருக்கக்கூடும் என்றும் கண்டறிந்தார். இவ்வாறே காயல் துறைமுகமும் மூழ்கிப்போனதாகத் தெரிவித்த கால்டுவெல், பழங்காலத்தில் புழங்கிய பழந்தமிழ்ச் சொற்களையும் கண்டறிந்தார்.

அந்தக் காலத்தில் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், துளுவம் போன்ற மொழிகள் ஆரிய மொழிகளின் ஒரு பகுதியே என்ற கருத்து நிலவிவந்தது. இதனைப் பொய் என்று நிரூபித்தும், திராவிட மொழிகள் தனித்தன்மை பெற்றவை என்றும், ஒரே குடும்பத்தைச் சார்ந்தவை என்றும், அவற்றிலும் மிகப்பழமையானது தமிழே என்றும் ஆதாரங்களுடன் நிறுவி 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' என்னும் புகழ்பெற்ற நூலை எழுதி தமிழை வானளாவ உயர்த்தியவர் கால்டுவெல்.

www.tamilarangam.net



இவர் செய்த மொழி ஆராய்ச்சி போல் அதற்கு முன்பு யாரும் செய்திருக்கமாட்டார்கள். கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன் தோன்றிய மூத்த மொழி என்று தமிழைச் சொன்னாலும், அதை ஆதாரத்தோடு நிரூபிக்க இயலாமல் தமிழர்கள் திண்டாடினார்கள். அதை ஆதாரத்துடன் நிறுவியவர் வெள்ளையரான கால்டுவெல்.

தமிழில் உள்ள 'ழ' என்ற சிறப்பெழுத்து எந்த மொழியிலும் இல்லையல்லவா? இந்த எழுத்துடன் கூடிய பல சொற்கள் திரிந்து பல மொழிகளில் இன்னும் வழங்கிவருவதை கால்டுவெல் கண்டுபிடித்து தெரியப்படுத்தினார். கோழிக்குச் சிந்து மொழியில் 'கோரி' என்ற பெயர் இருப்பதையும், கிரேக்க மொழியில் அரிசிக்கு 'அருசா' என்றிருப்பதையும், அதைப்போலவே கன்னடம், தெலுங்கு போன்ற மொழிச்சொற்கள் பெரும்பாலானவற்றின் இயற்சொற்கள் தமிழாக இருப்பதையும் கால்டுவெல் எடுத்துக்காட்டினார்.

பதினைந்து ஆண்டுகளுக்கு மேல் மொழி ஆராய்ச்சி செய்த கால்டுவெல் பழந்தமிழ்ப் புலவர்களின் வாழ்க்கையையும் ஆராய்ச்சி செய்தார். பாண்டி நாட்டில் ஏற்பட்ட கடுமையான பஞ்சத்தின்போது மக்களுக்கு உணவும், பொருளும் கொடுத்து உதவி செய்தார்.

கிறிஸ்தவ சமயத்தையும் தமிழகத்தில் கால்டுவெல் பரப்பினார். இவரது கிறிஸ்தவப் பணியைப் பாராட்டி இவரை அத்தியட்ச குருவாக்கி கிறிஸ்தவர்கள் மகிழ்ந்தனர். மக்களுக்குத் தாய் மொழிக்கல்வியையும்,

www.tamilarangam.net



ஆங்கிலக்கல்வியையும் அளிப்பதற்காகத் தானே முயன்று பெரு நிதிதிரட்டி பள்ளிகளைக் கட்டினார்.

சென்னைப் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவிலும் கலந்துகொண்டு மாணவர்களுக்கு அறிவுரை வழங்கி சொற்பொழிவாற்றினார். பிறநாட்டுப் புதிய கலைகளை விரைந்து பயில்வதோடு, மொழி ஆராய்ச்சிக்கு மாணவர்கள் பெரிதும் உதவ வேண்டும் என்பது அவரது அறிவுரையின் மையக் கருத்து.

ஐம்பதாண்டுகளுக்கு மேலாகத் தமிழ்ப்பணி புரிந்த அந்த அறிஞர், தாய் நாட்டுக்குச் செல்வதைத் தவிர்த்துவிட்டு தமிழர்களோடு ஒருவராய் வாழ்ந்து தமது எழுபத்தேழாம் வயதில் கொடைக்கானலில் காலமானார். அவரது சடலம் அவர் நேசித்த இடையன்குடிக்கு கொண்டுவரப்பட்டு அவர் கட்டிய தேவாலயத்தின் ஒரு பகுதியிலேயே அடக்கம் செய்யப்பட்டது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**3**

# மீனாட்சி சுந்தரம்பிள்ளை

[6–4–1815]

ஒரு கவிதை, இரண்டு கவிதைகளை ஏதாவது ஓர் இதழில் எழுதி, அவை வெளிவந்துவிட்டால், உடனே பெயருக்கு முன்பு, 'கவிஞர்' என்று 'அடை' மொழியை சேர்த்துக் கொள்கிறோம். ஆனால் இரண்டு லட்சம் கவிதைகளுக்கு மேல் எழுதியும், பழங்கால இலக்கியங்கள் அத்தனையும் மனப்பாடமாகச் சொல்லியும், பிறர் கேட்ட மாத்திரத்தில் இலக்கணப் பிழையில்லாமல் ஐந்து மணி நேரம் வரையிலும் கூடத் தொடர்ந்து கவி பாடிய தமிழர் ஒருவர் நம்மிடையே வாழ்ந்திருக்கிறார். அவரைப் பற்றி உங்களுக்கு தெரியுமா?

அவர் பெயர் மீனாட்சி சுந்தரம்பிள்ளை. அதவத்தூர் என்னும் ஊரில் 6-4-1815-ல் பிறந்தார். இவருடைய பெற்றோர் சிதம்பரம்பிள்ளை-அன்னத்தாச்சி அம்மையார். அச்சு வடிவிலான நூல்கள் அதிகமிராத அந்தக்காலத்தில் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் ஓலைச்சுவடியில் படித்தவர். நினைத்த மாத்திரத்தில் கவிதை எழுதும் திறமும், பழந்தமிழ் நூல்களை ஆராய்ச்சி செய்யும் ஆர்வமும் கொண்டவர். அதற்காக ஊர் ஊராகச்

www.tamilarangam.net



சென்று பெரும் புலவர்களையும், பிறரையும் யாசித்து அவர்களிடமிருந்து நூல்களை வாங்கிவந்து படியெடுத்த பிறகு திருப்பித்தந்துவிடுவார்.

படி எடுப்பது இப்போதைய 'ஜெராக்ஸ்' மாதிரி அல்ல. வாங்கி வந்த மூலநூலை ஓலைச்சுவடியில் திரும்ப எழுதுவது. ஒரு முறை படித்தாலே அந்த நூல்கள் அவருக்குப் பழக்கமாகிவிடும். அவற்றில் சந்தேகம் எழுந்துவிட்டால், அதை விளக்கும் புலவரை நாடி நடக்க ஆரம்பித்துவிடுவார். இலக்கணங்களையும், இலக்கியங்களையும் படிக்க ஆசிரியர்களைத் தேடிச் சென்று படித்து அறிவை வளர்த்துக் கொண்டார். இப்போது பள்ளிக்கூடத்திற்கு வந்து படிப்பதுபோல அல்லாமல் ஆசிரியர்களைத் தேடிச் சென்று அவர்கள் ஏவும் வேலைகளைச் செய்து, அவர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாகி, அதன்பிறகே தமிழ் படிக்க முடியும். இத்தகைய சிரமம் இருந்தபோதும் அவர் தமிழறிவை வளர்க்கத் தயங்கியதே இல்லை.

மீனாட்சி சுந்தரனார் பெரும் புலவராக மதிக்கப்பட்ட காலத்தில், 'தான் இன்னும் ஒரு மாணவன்தான்' என்ற எண்ணம் அவருக்கு இருந்து வந்தது. கீழ்வேளூர் சுப்பிரமணிய தேசிகர் என்பவரிடம் .இலக்கண விளக்கம். என்ற நூலைப் படிக்கச் சென்றார். ஆசிரியர் சார்பில் பல கண்டிப்புகள் சொல்லப்பட்டன. ஆசிரியர் குடும்பத்தைப் பாதுகாத்தல் உட்பட செய்து, அவருக்கு மாத சம்பளமாக தனியாக 20 ரூபாய் கொடுக்க வேண்டும் என்பது வரை அந்தக் கண்டிப்பு இருந்தது. அந்தக் காலத்தில் இருபது

www.tamilarangam.net



ரூபாய் என்பது பெரியதொகை. மூன்று மாத சம்பளத்தை ஆசிரியர் முன்பணமாகச் செலுத்த வேண்டும் என்று கேட்டபோது, தனது 'கடுக்கனை' விற்று ஆசிரியருக்குக் கட்டணம் செலுத்தியிருக்கிறார். இவ்வளவு தமிழார்வம் மிக்கவர் மீனாட்சிசுந்தரம்பிள்ளை. அவரை ஆதரித்த லட்சுமணப்பிள்ளை என்பவரின் வழக்கு சென்னை உயர் நீதிமன்றத்தில் நடந்து கொண்டிருந்தது. அதைப் பொறுப்புடன் கவனிக்க அனுப்பப்பட்ட மீனாட்சி சுந்தரனார், ஒவ்வொரு தமிழ்ப் புலவரையும், தேடிச்சென்று தமிழ் நூல்களில் ஏற்படும் சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்வதை வழக்கமாக வைத்திருந்தார்.

1842-ல் 'அகிலாண்ட நாயகி பிள்ளைத் தமிழ்' என்ற நூலை வெளியிட்டார். பெங்களூரில் வாழ்ந்த தேவராஜப்பிள்ளை என்பவருக்காக 'குசேலோ பாக்கியானம்', 'சூதசங்கிதை' ஆகிய நூல்களை எழுதியதோடு, தேவராஜபிள்ளையே அதை எழுதியதாக வெளியிடவும் செய்தார். 1854-ல் சென்னைக்கு வந்தபோது, மயிலாப்பூர் குளத்திற்கு அருகே அமைக்கப்பட்டிருந்த சத்திரத்தைப் பற்றி பாடினார். அதற்குச் 'சித்திரச் சத்திரப் புகழ்ச்சி மாலை' என்று பெயர்.

1854-ம் ஆண்டு திருவாவடு ஆதினத்து வித்துவானாக நியமிக்கப்பட்டார். அம்மடத்து தலைவர் அம்பலவாண தேசிகரைப்பற்றி ஒரு 'கலம்பகம்' எழுதினார். அவரது சிறப்புகளை உணர்ந்து அவருக்கு

www.tamilarangam.net



'மகாவித்துவான்' என்ற பட்டம் கொடுத்து மடத்தினர் பாராட்டினர். திருவாவடு ஆதீனத்தில் தனது மாணவர்களுக்குப் பாடம் நடத்தும்போது அதிக நேரம் ஆகிவிடும். அப்போதெல்லாம் ஆதீனத்தின் தலைவரும், மற்றவர்களும், மீனாட்சி சுந்தரனார் வரும்வரை காத்திருந்துதான் உணவு உண்டார்கள். உயரமான மீனாட்சி சுந்தரனார் உணவு உண்ணும் வாசல் தாழ்வாக இருந்ததால் குனிந்து சென்றதைப் பார்த்துவிட்ட ஆதீனத்தலைவர், 'தமிழ் குனியலாமா?' என்று கூறி வாயிலை உயர்த்திக் கட்டச் செய்தார்.

மீனாட்சி சுந்தரனார் மயிலாடுதுறையில் வாழ்ந்தபோது அவருடைய செலவை ஏற்றுக்கொள்ள அங்கு வாழ்ந்த பெருஞ்செல்வர்கள் முன்வந்தனர். அதன்படி ஒவ்வொருவரும் ஒவ்வொரு மாதம் ஒரு பெருந்தொகையை மீனாட்சி சுந்தரனாரின் செலவுக்குக் கொடுத்து வந்தார்கள். கொடுக்கப்பட்ட பெரிய தொகை எவ்வளவு தெரியுமா? பத்து ரூபாய் சிலர் நெல்லாகவும்கூட கொடுத்தார்கள்.

மீனாட்சி சுந்தரனார், கற்கக் கடினமான எந்த ஒரு நூலையும் மனப்பாடமாக வைத்திருப்பார். தனனைப் போலவே தனது மாணவர்கள் சிறந்து விளங்க வேண்டும் என்பதற்காக உடலை வருத்தி, தேடி படியெடுத்த அரிய நூல்களையெல்லாம் மாணவர்களுக்குக் கொடுத்து மகிழ்வார். மாணவர்களுக்காக ஊர் ஊராகச் சென்று பிறரிடம் உள்ள நூல்களை வாங்கித் தருவார். நடமாடும் புத்தக சாலையான அவரே தம்முடைய சொந்தச்

www.tamilarangam.net



செலவில் பிள்ளைகளைப் படிக்க வைத்தார். மாணவர்களுக்குத் திருமணம் செய்து வைப்பது, அவர்களுக்கு வீடுகட்டித் தருவது, பரிசுப் பொருள்களைத் தருவது என்று மாணவர்களுக்காகவே வாழ்ந்தார். அவரின் வருமானம் மாணவர்களின் மளிகை பாக்கிக்கே சரியாக இருந்தது. மாணவர்களை .அப்பா. என்று அன்புடன் அழைப்பார்.

கும்பகோணம் அரசினர்க் கல்லூரிக்கு ஒரு தமிழாசிரியர் தேவைப்பட்டபோது, மீனாட்சி சுந்தரனார் அதற்குத் தகுதியானவராகக் கருதப்பட்டார். மாதம் நூறு ரூபாய் சம்பளம், மற்றும் பல வசதிகள் செய்து தரப்படும் என்று நிர்வாகத்தினர் தரப்பில் சொல்லப்பட்டபோது, அதை தனது மாணவன் சாமிநாதனுக்குத் தரும்படிக் கேட்டுக் கொண்டார்.

'சீர்காழிக் கோவை', 'கும்பகோண புராணம்', 'திருநாகைக் காரோண புராணம்', 'திருப்பெருந்துறை புராணம்' போன்ற பல நூல்களை எழுதியுள்ளார். கும்பகோணப் புராணம் நூலை யானை மீதும், மீனாட்சி சுந்தரனாரைப் பல்லக்கிலும் வைத்து ஊர்வலமாகச் சுமந்து வந்தனர். தமிழ்நாட்டில் மட்டுமின்றி, வடநாடுகளிலும், கடல் கடந்த அயல் நாடுகளிலும் அவர் புகழ் பரவியிருந்தது. அவரை ஆதரிப்பதைப் பெருமையாகச் செல்வர்கள் கருதினார்கள். அவருக்கு நோய் ஏற்பட்டால், அதைத் தீர்க்கும் மருந்தாகத் தமிழ் நூல்களைத்தான் பயன்படுத்துவார். நோயுற்ற காலங்களில் பிறரைப் படிக்க வைத்து அதிலேயே லயித்துப் போவார். நோயும் பறந்து

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



போகும். நினைத்த மாத்திரத்திலேயே கவிதை பாடும் அவர், தொடர்ந்து ஐந்து மணி நேரத்திற்கும் மேலாகக் கவிதை பாடி, தனது மாணவரை அதைப் பின்தொடர்ந்து எழுதச்சொன்னார். மாணவர் எழுத முடியாமல் நிறுத்திய போதும்கூட மகாவித்துவான் கவிதையை நிறுத்தவில்லை.

கண்ணில்லாத அந்தகரான நாராயணன் என்பவருக்கும் பாடத்தைத் திறம்பட சொல்லிக் கொடுத்திருக்கிறார். அவரிடம் 17 வயதில் மாணவராகச் சேர்ந்தார் தமிழ்த்தாத்தா உ.வே. சாமிநாத ஐயர். தோட்டத்தில் உள்ள செடிகளில் புதிய தளிர்கள் தோன்றுகிறதா என்று தினந்தோறும் பார்த்து வருவது மீனாட்சி சுந்தரனாரின் வழக்கம். இதை அறிந்துகொண்டு, அவருக்கு முன்பாகவே எழுந்து தோட்டத்திற்குச் சென்று எந்தெந்தச் செடிகளில் புதிய தளிர்கள் தோன்றியுள்ளன என்பதைக் கண்டறிந்து ஆசிரியர் கேட்காமலேயே சொல்லி வந்தார். சிறுவனின் ஆர்வத்தைக் கண்டு பாடம் கற்பித்தார் மீனாட்சி சுந்தரனார்.

இவ்வாறு தமிழையும், தமிழ் மாணவர்களையும் வளர்ப்பதற்காகத் தன் வாழ் நாளைக் கழித்தவர் 1-2-1876-ல் உயிர் துறந்தார். வந்த பொருளையெல்லாம் வாரி வழங்கிவிட்ட அவருக்கு, இறக்கும்போது மூவாயிரம் ரூபாய் கடன் இருந்தது. அப்போதைய திருவாவடுதுறை ஆதீனத் தலைவர் சுப்பிரமணிய தேசிகர் தாம் அவர் கடனை அடைத்து, அவருடைய

www.tamilarangam.net



ஓலைச்சுவடிகளை நூலகத்தில் ஒப்படைத்தார். அவ்வளவு பெரிய அறிஞருக்கு 'கவிஞர்' பட்டம்கூட இல்லை. அவரும் தன்னைக் கவிஞர் என்று சொல்லிக் கொண்டதில்லை. அவர் எழுதிய சில நூல்களும், கவிதைகள் சில மட்டுமே கிடைத்துள்ளன. அதையும் அறிந்த கவிஞர்கள் அதிகம் பேரில்லை என்பதே உண்மை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

4

# ஈசுவர சந்திர வித்தியாசாகர்

(1820)

தமிழர்கள் மட்டுமே, அதிலும் தங்களைத் தமிழறிஞர்கள் என்று சொல்லிக் கொள்பவர்கள்கூடத் தமிழகத்தில் தாய் மொழியை வலியுறுத்தாதவர்களாக, மற்ற மொழியின்பால் மோகம் கொண்டவர்களாக இருக்கிறார்கள். ஆனால் மற்ற மொழியினரோ, தங்கள் தாய்மொழியை வளர்ப்பதற்காகவே தம் வாழ்நாளை அர்ப்பணிக்கிறார்கள். அவர்கள் சொல், செயல் எல்லாமே தாய்மொழி பற்றியதாகவே இருக்கிறது.

இந்நிலை நீடிக்குமானால் தமிழகத்தில் தமிழ் அழிந்து தாய்மொழிக்கல்வியின் பெருமைகளை அயல் மொழிகள் வாயிலாகப் படிக்க வேண்டிய நிலை ஏற்படும். இப்போதே தமிழ் நாட்டில் தமிழ் மொழிக்கென தனிப் பள்ளி இல்லாதது இதை உணர்த்துவதாக இருக்கிறது. இதை மாற்றி தாய் மொழிக்கல்விக்குப் பாடுபடுவது எப்படி என்று நினைப்பவர்கள் வங்க மொழிக் கல்விக்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட வித்தியாசாகர் என்ற அறிஞரைப் பற்றி தெரிந்து கொள்வது அவசியம்.

www.tamilarangam.net



வங்காளத்தில் ஹூக்ளி மாவட்டத்தில் உள்ள வளமாலிபுரம் என்ற சிற்றூரில் தாகுர்தாஸ்-பகவதி அம்மையார் தம்பதியினருக்கு வித்யாசாகர் 1820-ல் பிறந்தார்.

இவர் தாயின் வயிற்றிலிருக்கும் போதே இவரது தாயார் சித்தப் பிரமை நோய்க்கு ஆளாகியிருந்தார். குழந்தைப் பிறந்தபிறகுதான் அவ்வம்மையாருக்குப் பைத்தியம் நீங்கியது.

கிராமப்பள்ளியில் படித்த வித்தியாசாகர் ஆசிரியர் ஒரு முறை கூறும் செய்திகளையும் உடனே மனதில் பதியவைத்துக் கொள்வார். அதே போல எவ்வளவு கடுமையான செய்தியாக இருந்தாலும் அதைச் சுலபத்தில் புரிந்து கொள்ளும் திறன் பெற்றிருந்தார். வயதுக்கு மீறிய அறிவுத் திறன் பெற்றிருந்ததால் பள்ளியிலும், வெளியிலும் சிறப்புப் பெற்றிருந்தார்.

மிகவும் ஏழ்மை நிலையில் இருந்த வித்தியாசாகர் கல்கத்தாவில் சமஸ்கிருதம் படித்து அக்கல்வியில் புலமை பெற்ற பின்பு, 16-வது வயதிலேயே எட்டுவயது சிறுமியான .தாமையி. என்பவரைத் திருமணம் செய்துகொண்டார்.

பத்தொன்பதாம் வயதில் வேதாந்த வகுப்பில் சிறப்பாகத் தேர்வுபெற்று போர்ட் வில்லியம் என்ற கல்லூரியில் தலைமைப் பண்டிதர் (தாய்மொழி பயிற்றுனர்) பொறுப்பை ஏற்றிருந்தார்.

www.tamilarangam.net



அக்காலத்தில் இங்கிலாந்திலிருந்து இந்தியா வரும் வெள்ளையர்களுக்கு இந்தியில் தேர்வு நடத்துவார்கள். அவர்கள் அதில் தேர்ச்சியடையா விட்டால் தாயகத்திற்குத் திருப்பி அனுப்பப்படுவார்கள். இத்தகைய வெள்ளையர்களுக்கு மொழிப் பயிற்சி யளிக்கும் ஆசிரியர் பொறுப்பை வித்யாசாகர் ஏற்றிருந்தார். அதில் நேர்மையாளராக விளங்கியதால், அவருடைய சிறப்பு, கவர்னர் ஜெனரலாக இருந்த ஹார்ட்டிந்த் பிரபுவுக்கும் தெரிந்திருந்தது.

தன்னை நேரில் சந்தித்துப் பாராட்டுத் தெரிவித்த கவர்னர் ஜெனரலிடம் சமஸ்கிருதம்படிக்கும் மாணவர்களுக்கு அரசாங்கம் சரியாக ஆதரவு தருவதில்லை என்று எடுத்துக்கூறினார். இதன் விளைவாக வங்கத்தில் நூறு வங்காள மொழிப் பள்ளிகளுக்கு மேல் திறக்கப்பட்டன. அப்பள்ளிகளில் சமஸ்கிருதம் படித்தவர்களே ஆசிரியர்களாக நியமிக்கப் பட்டனர். ஆசிரியர்களை நியமிக்கும் பொறுப்பும், தேர்வுகள் நடத்தும் பொறுப்பும் கல்லூரி முதல்வர் மார்சல் என்பவரிடமும், வித்தியாசாகரிடமும் ஒப்படைக்கப்பட்டன.

கல்லூரி முதல்வரிடம் ஏற்பட்ட மனவருத்தத்தின் காரணமாக வேலையை விட்டொழித்தார். அதன் பின்பு 1851-ல் சமஸ்கிருதக் கல்லூரியின் செயலாளராகப் பணிபுரிந்தார். இவரது ஆலோசனைகளால் பல தொடக்கப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள்

www.tamilarangam.net



திறக்கப்பட்டன. அவற்றைக் கண்காணிக்கும் பொறுப்பையும் இவரே ஏற்றார்.

வித்தியாசாகர் மேல் நாட்டுப் பாணியில் உடை அணியாதவர். இதை மாற்றவிரும்பிய வங்காளத்தின் துணை கவர்னர் மேல் நாட்டு உடையை அணியும்படி வற்புறுத்தினார். இதை வெறுத்த வித்தியாசாகர், கவர்னரின் நட்பைத் துண்டித்துக் கொள்வதாகக் கூறினார். இதை சற்றும் எதிர்பார்க்காத கவர்னர் வித்தியாசாகரிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டார். ஆனாலும் கல்வித்துறை அதிகாரிகள் தம்மைச் சரியாக நடத்தவில்லை என்ற மனக்குறையினால் தாம் செய்துவந்த வேலையை விட்டு விலகினார்.

வங்காளத்தின் சட்ட அமைச்சர் பெத்தூன் பிரபு என்பவரின் ஆதரவைப் பெற்று பெண்களுக்கென தனிப்பள்ளியை ஆரம்பித்தார். பள்ளியின் முழுச் செலவையும் பெத்தூன் பிரபுவே ஏற்றார். பெண்கள் படிக்கப் பள்ளி மட்டுமல்லாது, பள்ளிக்கு அவர்களை அழைத்துவர வண்டியையும் வித்தியாசாகர் ஏற்பாடு செய்தார்.

பெத்தூன் பிரபுவுடன் வங்காளம் முழுவதும் சுற்றுப்பயணம் செய்து பெண்கல்வி பற்றிப் பிரச்சாரம் செய்தார். இதைக்கண்ட செல்வர்கள் நன்கொடை அளித்துப் பெண்களுக்கான கல்விச் சாலைகளை ஆங்காங்கே அமைக்க உதவினார்கள்.

பெத்தூன் பிரபுவின் அகால மரணத்திற்குப் பிறகும் அவரது சொத்துக்கள் பெண்கள் கல்விக்காக

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அளிக்கப்பட்டதால், அதை வைத்தும், அரசிடம் கேட்டும் ஐம்பதுக்கும்மேற்பட்ட பெண் பள்ளிகளை வித்தியாசாகர் நிறுவினார். அவற்றைத் தொடர்ந்து நடத்தமுடியாத நிலை ஏற்பட்டபோது, கடன்வாங்கித் தொடர்ந்து பெண்கள் பள்ளிக்கூடங்களை நடத்தினார்.

இளமைத் திருமணங்களால் ஏற்படும் துன்பங்களையும், விதவைகளின் பரிதாபமான நிலைகளையும் வித்யாசாகர் சிந்தித்து வந்தார். சிறுமிகளை எழுபது வயது தாத்தாக்கள் திருமணம் செய்து கொள்வதையும் சில வருடங்களுக்குப் பிறகு அவர்கள் இறந்துவிட சிறுமிகள் கைம் பெண்களாகி வாழ்நாள் முழுவதும் துன்பத்தை அனுபவிப்பதையும், உடன்கட்டை ஏறுதல் எனப் பெண்கள் உயிருடன் எரிக்கப்படுவதையும் தடுக்கப் பாடுபட்டார்.

ஏற்கெனவே ராசாராம் மோகன்ராயின் அரிய முயற்சியால் உடன்கட்டை ஏறும் கொடுமைகள் ஒழிக்கப்பட்டிருந்தாலும், விதவைகள் துன்பம் தொடர் கதையாகவே இருந்தது. இதனை மாற்றிட விதவைத் திருமணங்களை ஆதரித்து 'போதினி' என்ற பத்திரிகையில் கட்டுரைகள் எழுதினார். ஆரம்பத்தில் இதற்குப் பெருமளவில் எதிர்ப்பும், சிறிய அளவில் ஆதரவும் இருந்தது. நாளடைவில் இவரது அயராத உழைப்பினால் விதவைத் திருமணம் அதிகரித்தது.

இதேபோல் ஒரே ஆண் பல பெண்களைத் திருமணம் செய்து கொள்ளும் சர்வ சாதாரணமான நிலையை மாற்ற

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வாழ்வின் இறுதிவரை போராடினார். தன் லட்சியம் நிறைவேறுவதற்குள் 1891-ல் அவர் காலமானார்.

வங்காள மாநிலத்தில் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களின் கல்வி வளர்ச்சிக்காகவும், பெண்களின் முன்னேற்றத்திற்காகவும் பாடுபட்ட இவரைக் கல்விக்கடல் என்கிறார்கள். இவர் செய்த தொண்டில் சிறிதளவேனும் தமிழுக்குச் செய்ய வேண்டும் என்ற உணர்வு தமிழர்களுக்கு ஏற்படுமானால் தமிழ் வாழும்.

www.tamilarangam.net

5

# மாயூரம் வேதநாயகம் பிள்ளை

(11 10 1826)

இசைத் தமிழ் இருக்க இன்னொரு மொழியில் கீர்த்தனை ஏன்? நீதிமன்றங்கள் தமிழகத்தில் இருக்கின்றன. நீதிபதிகள், வக்கீல்கள், தமிழர்கள், சட்டம் மட்டும் ஏன் ஆங்கிலத்தில்? இவற்றை மாற்றவேண்டாமா? என்று சிந்தனை செய்தார் ஒரு நீதிபதி. அதன் விளைவாக அவரே சட்டத்தை தமிழில் மொழிபெயர்த்தார். இசைத்தமிழில் பாடல்கள் எழுதினார். பெண்ணடிமை விட்டொழிப்போம் என்று உரைநடையில் எழுதினார். பெண்ணடிமை ஒழிய பாடுபட்டார். இது மட்டுமா? நம்மைப்பெற்றதும் தமிழ், வளர்த்ததும் தமிழ், தாலாட்டித் தூங்க வைத்ததும் தமிழ்; எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்று அப்போதே முழங்கினார். யார் அவர்?

அவர்தான் மாயூரம் வேதநாயகம் பிள்ளை இவர். திருச்சிராப்பள்ளியருகே உள்ள குளத்தூர் என்னும் கிராமத்தில் சவரிமுத்துப்பிள்ளை-ஆரோக்கிய மரியம்மாள் என்னும் தம்பதியினருக்கு 11-10-1826-ம் ஆண்டு பிறந்தார்.

www.tamilarangam.net



திண்ணைப்பள்ளியில் படித்தே சிறப்பான அறிவைப்பெற்ற வேதநாயகர், தியாகப்பிள்ளை என்பவரிடம் மேற்கல்வி பயின்றார். ஆங்கிலத்திலும், தமிழிலும் சிறு வயதிலேயே புலமை மிக்கவராகத் திகழ்ந்த வேதநாயகர் தன் கண்ணில் காணும் பொருள்களில் மனம் லயித்துவிட்டால் அவற்றைப்பற்றி உடனே கவிதை எழுதிவிடும் அளவுக்குக் கவிதையில் ஆர்வம் கொண்டிருந்தார்.

திருச்சி நீதி மன்றத்தில் நீதிபதியாக இருந்த கார்டன் துரை என்பவரின் அலுவலகத்தில் பணிகிடைத்தது. அந்த பணியிலிருக்கும்போதே அரசாங்க அலுவல், ஆட்சி முறை பற்றியெல்லாம் அறிந்துகொண்டதோடு, அனைவரின் நன்மதிப்புக்கும் பாத்திரமாயிருந்தார்.

1850-ம் ஆண்டில் மாவட்ட நீதிமன்றத்திற்கு மொழிபெயர்ப்பாளர் ஒருவர் தேவைப்படவே வேதநாயகம் பிள்ளை அப்பதவிக்கு விண்ணப்பித்தார். மற்றவர்களைக்காட்டிலும் இவருடைய மொழிபெயர்ப்பு சிறப்பாக இருந்ததால் இவரே அப்பதவிக்குத் தேர்வு செய்யப்பட்டார்.

ஆங்கிலேயருக்கு மக்களின் குறைகள் போன்றவை தெரியவேண்டுமானால் அவை பற்றிய விவரங்கள் ஆங்கிலத்தில் இருந்தால்தானே தெரியும் என அவற்றை உடனுக்குடன் மொழிபெயர்த்துக் கொடுத்தார். வேதநாயகர் தனது அலுவலக நேரம்போக மற்ற நேரங்களில் உயர்நீதி மன்றத் தீர்ப்புக்களை மொழிபெயர்த்து நூலாக வெளியிட்டார். இது ஆங்கிலம் தெரியாத நீதிபதி வக்கீல்களுக்கு உதவிகரமாக இருந்தது.

www.tamilarangam.net



ஒரு சமயம், தமிழ்நாட்டில் சமயப்பூசல் காரணமாக வந்த வழக்கை மாவட்ட நீதிபதி மாநில கோர்ட்டுக்கு அனுப்பிவைத்தார். அந்த வழக்கு சம்பந்தமான அனைத்தையும் வேதநாயகரே மொழி பெயர்ப்புச் செய்து மாநில கோர்ட்டுக்கு அனுப்பினார். ஆனால் அந்தக் கோப்புகளை கொண்டுசென்ற நீதிபதி திடீரெனக் காலமாகிவிட்டதால் கோப்புகள் மேலிடத்திற்குச் சென்று சேரவில்லை. வேதநாயகர் மொழிபெயர்க்காததால்தான் அவற்றை அனுப்பமுடியவில்லை என்று புதிதாக வந்த நீதிபதி கருதி வேதநாயகரைப் பணிநீக்கம் செய்தார். இறுதியில் உண்மை தெரியவந்தது. வேதநாயகரைப் பணியில் சேர்த்துக் கொள்ளும்படி மேலிடத்திலிருந்து உத்தரவு வந்தது. ஆனால் புதிதாக வந்த நீதிபதிகள் இதைக் கருத்தில் கொள்ளாமல் அலட்சியம் செய்ததோடு வேதநாயகம்பிள்ளை ஒரு நோயாளி. அதனால் மொழிபெயர்ப்புப் பணியை வேறு ஒருவரைக்கொண்டு செய்வதாக மேலிடத்திற்குத் தெரியப்படுத்திவிட்டனர். இதை அறிந்த மேலதிகாரி வேதநாயகரை பதவியில் ஏற்றுக்கொள்ளாத நீதிபதியை லண்டனுக்கு அனுப்பி விட்டு வேறொருவரை நீதிபதியாக நியமித்தார். அதன்பின்பு வேதநாயகருக்கு அப்பணி மீண்டும் கிடைத்தது.

மாயூரத்தை அடுத்த தரங்கம்பாடியில் நீதிபதியாக நியமிக்கப்பட்டு பின் அங்கிருந்து - சீர்காழிக்கு மாற்றப்பட்டார். ஏழை எளியவர்களின் மீது போடப்படும் பொய்வழக்குகளைக்கண்டு மனம் குமுறுவார்.

www.tamilarangam.net



வழக்குமன்றத்தில் தான் கண்ட கொடுமைகள் எல்லாவற்றையும் கவிதையாக எழுதுவார்.

ஒரு சமயம் பொய் வழக்குத் தொடுத்த ஒருவன் வேதநாயகரை அணுகி ஒரு நூறு ரூபாயைக் கொடுத்து தன் சார்பாகத் தீர்ப்பு சொல்லும்படி கேட்டுக் கொண்டான். இதை நீதிமன்றத்தில் அறிவித்து நீதியை எதிரிக்கும், மன்னிப்பை வாதிக்கும் அளிக்கிறேன் என்று தீர்ப்பு சொல்லி தனக்கு லஞ்சம் கொடுத்தவனுக்கு மன்னிப்பளித்ததோடு, அவன் கொடுத்த நூறு ரூபாயை வாதிக்கு எதிராக நீதிமன்றத்திற்கு வந்திருந்த ஏழைக்குக் கொடுத்தார்.

ஏற்கெனவே தமிழின்மீது தீராப்பற்றுக் கொண்டிருந்த வேதநாயகர், மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை போன்றவர்களுடன் தொடர்பு வைத்திருந்தார். தான் சீர்காழி வந்தபிறகு மீனாட்சி சுந்தரனாரை வரவழைத்து சீர்காழியில் தங்கவைத்தார். அப்போதுதான் வேதநாயகர் 'நீதிநூல்' என்னும் உயர்நெறிப்பாடல்கள் நானூறு அடங்கிய நூலை எழுதியிருந்தார்.

1860-ம் ஆண்டு மாயூரத்திற்கு மாற்றப்பட்டு, 13 ஆண்டுகள் நீதிபதியாக பதவி வகித்து, அவ்வூரிலேயே தனது கடைசி காலம்வரை தங்கியிருந்ததன் காரணமாகவே மாயூரம் வேதநாயகர் என அழைக்கப்பட்டார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வேதநாயகர் நேர்மையானவராக இருந்தபோதிலும் அவர் மீது சில பொய்யான புகார்கள் வந்தன. இதை விசாரித்த நெல்சன் என்ற ஆங்கிலேயர் பொறாமையின் காரணமாகவே வேதநாயகரை, பணி நீக்கம் செய்யும்படி மேலிடத்திற்கு கருத்து தெரிவித்தார். வேதநாயகரின் நேர்மையை அறிந்திருந்த மேலதிகாரிகள் இதைப் பொருட்படுத்தவில்லை. ஆனால் ஓர் ஆங்கிலேயருக்கு மதிப்புகொடுக்க வேண்டும் என்ற நோக்கில் வேதநாயகம்பிள்ளையவர்களைப் பணியிலிருந்து ஓய்வு பெறும்படி வேண்டிக்கொண்டனர்.

ஓய்வுபெற்ற பின்பு மாயூரம் நகராட்சிமன்றத் தலைவராக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டார். அம்மக்களுக்குத் தன்னாலான உதவிகள் அத்தனையும் தவறாமல் செய்து கொடுத்தார்.

எல்லாச் சமூகத்திலும் ஆண்களைவிடப் பெண்கள் தாழ்த்தப்பட்டிருப்பதைக் கண்டு மனம் வருந்திய வேதநாயகர், பெண் கல்விக்காகப் பாடுபட்டார். தனது பாடல்கள், நாவல்கள் மூலமாக இதை வலியுறுத்தினார். பெண்களுக்குக் கல்வியளிக்க மறுப்பது உடலின் ஒரு பகுதியை அலங்காரம் செய்துவிட்டு மறுபகுதியை அலங்கோலமாக விடுவதற்கு ஒப்பானதெனச் சாடினார்.

சமுதாயத்தில் ஏற்றத்தாழ்வுகள் இருக்கக்கூடாது என்ற கொள்கையுடைய வேதநாயகர், பிறக்கும்போதே மகுடத்துடன் பிறந்தவர் என்பவரும், ஓடேந்துபவர் என்பவரும் இல்லை. மேலோர் கீழோர் என்பது மடமை என்று பாடினார்.

www.tamilarangam.net



அந்தக் காலத்தில் பெரும்புலமை பெற்றிருந்த கவிஞர்களான மீனாட்சி சுந்தரம்பிள்ளை, இரட்சண்ய யாத்ரீகம் எழுதிய எச்.ஏ. கிருஷ்ணப்பிள்ளை போன்றவர்களுடன் நெருங்கிப்பழகியவர் வேதநாயகர். தாய்மொழியைப் பயிலாமல் அந்நிய மொழியைப் பயிலுபவர்களை நாடுகடத்த வேண்டும். இவர்கள் தாயைத் தவிக்கவிட்டு இறைவனுக்கு பூசை செய்பவர்கள் என்று அத்தகையோரைக் கடிந்துரைத்தார்.

தமிழ் மொழியில் உரைநடையை முதன் முதலில் பெரும் அளவில் பயன்படுத்தியவர் வேதநாயகர்தான். இதனால் இவர் உரைநடையின் தந்தை என்றும், புனைகதைகளை (நாவல்) அதிகம் எழுதியதால் புனைகதைகளின் தந்தை என்றும் அழைக்கப்பட்டார். தமிழின் முதல் உரைநடை (நாவல்) நூலான 'பிரதாபமுதலியார் சரித்திரம்' என்ற நூலையும், 'சுகுண சுந்தரி சரித்திரம். என்ற உரைநடை நூலையும் இவர்தான் எழுதினார். கிறிஸ்தவ' சமயத்தைச் சார்ந்த இவர்தான் இசைத்தமிழ் பயின்று சர்வசமயக்கீர்த்தனைகள் இயற்றிய தமிழிசைப் பாவாணர்,. சட்டத்தை மொழிபெயர்த்த சட்டத்தமிழ் வல்லுநர். நீதிநூல், திருவருள் அந்தாதி, பெண்மதி மாலை, சித்தாந்த சங்கிரகம், சர்வசமய சமரசக்கீர்த்தனை ஆகிய நூல்களைப் படைத்த இலக்கிய வித்தகர்.

இவ்வாறு தமிழுக்கும், தமிழர்களுக்கும் தொண்டுபுரிந்த வேதநாயகர் 21-7-1889-ம் ஆண்டு மறைந்தார்.

www.tamilarangam.net

6

# கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை

(14-7-1878)

தமிழகத்தில் வாழ்ந்த கவிஞர்களுள் அரசியல் கலப்பில்லாமல் தமிழுக்காகவே வாழ்ந்த கவிஞர் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை. அவர் தமிழ்க் கட்சியைச் சேர்ந்த பிறவிக்கவிஞர். குழந்தைகள் முதல் முதியவர்வரை யார் வேண்டுமானாலும் படித்து, சுவைத்து இன்புறத்தக்க வகையில் கவிபாடியவர். இவரைக் கவிமணி என்று தமிழர்கள் போற்றிக் கொண்டாடினார்கள்.

கவிமணி அவர்கள் கன்னியாகுமரிக்கு அருகில் உள்ள நாஞ்சில் நாட்டில் தேரூர் என்னும் ஊரில் 1878-ம் ஆண்டு ஆடித்திங்கள் 14-ம் நாள் பிறந்தார். இவரது பெற்றோர் சிவதாணுப்பிள்ளை - ஆதிலட்சுமி அம்மாள் தம்பதியினர்.

இளமையிலேயே கவிபாடும் ஆற்றலுடைய கவிமணி அவர்கள் ஓரிருமுறை படித்ததை மறுமுறை பார்க்காமலேயே ஒப்புவிக்கும் நினைவுத் திறன் பெற்றிருந்தார். சிறுவயதிலேயே தமிழில் உள்ள

www.tamilarangam.net



இலக்கியங்கள் பலவற்றைக் கற்றிருந்ததோடு, தமிழில் அழகிய கவிதைகள் எழுதும் ஆற்றலும் பெற்றிருந்தார்.

இத்தனைக்கும் மேலாக வன்சொல் பேசா வாய் கொண்டவராக - அன்பு ததும்பும் உள்ளத்தினராகத் திகழ்ந்தார்.

இளம் வயதிலேயே தந்தையை இழக்க நேரிட்டது. ஆனாலும் விடா முயற்சியுடன் படித்தார். குடும்பச்சுமை அதிகரித்ததால் வேலைதேடும் சூழ்நிலை அவருக்கு ஏற்பட்டது. அக்காலத்தில் எளிதில் கிடைக்கக்கூடிய பணி ஆசிரியர் பணிதான். கோட்டாறு தொடக்கப்பள்ளி, திருவனந்தபுரம் பெண்கள் ஆசிரியப் பயிற்சிப்பள்ளி, மகாராஜா பெண்கள் உயர்நிலைப்பள்ளி ஆகியவற்றில் ஆசிரியராகவும், திருவிதாங்கூர் கல்லூரியின் விரிவுரையாளராகவும் பதவி வகித்து 1931-ல் பணியிலிருந்து ஓய்வு பெற்றவர்.

கவிமணி சிறுவயது முதற்கொண்டே தன்னடக்கம் மிக்கவர். பிறர் புகழுவதை ஏற்றுக் கொள்ளக்கூசும் இயல்புடையவர். பல பத்திரிகைகளில் எழுதியபோதும் இவர் தனது ஆரம்பகாலப் படைப்புக்களை வெவ்வேறு புனை பெயர்களிலேயே எழுதி வந்திருக்கிறார். இவரை அடையாளம் கண்டு தமிழுக்கு அளித்தவர்கள் ரசிகமணி டி.கே. சிதம்பரம்பிள்ளை போன்ற சிறந்த தமிழறிஞர்கள்.

கவிமணி தமிழ்க்கவிஞர் என்ற ஒரே காரணத்திற்காகத் தமிழர்கள் அவருக்கு ‘பாராட்டுக்கூட்டங்களும்’ விழாக்களும் எடுத்துச் சிறப்பித்தார்கள். அறிஞர்களும்

www.tamilarangam.net



கவிமணியின் இல்லத்திற்கே சென்று அவரை அழைத்து வந்து சிறப்பித்தனர்.

சென்னை மாகாணத் தமிழ்ச்சங்கத்தின் சார்பில் 24-12-1940-ல் சென்னை பச்சையப்பன் கல்லூரியில் நடந்த புலவர் பெருங்குழுவின் சார்பாக அதன் தலைவர் உமாமகேசுவரன் என்பவரால் கவிஞருக்குக் கவிமணி பட்டம் வழங்கப்பட்டது.

ராசாசர். அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் கவிமணிக்கு பாராட்டுக்கூட்டங்கள் நடத்தி விலை உயர்ந்த பொன்னாடையையும், தங்கப்பேழையையும் அளித்ததோடு ஆயிரம் வெள்ளிப்பணத்தையும் பரிசளித்தார். இவற்றைப் பொருள்களாக மாற்றிக் கொண்டு கவிமணியின் இல்லத்தில் வைத்தவர்கள் டி.கே.சி.யும் இவரது இரு நண்பர்களும். ஆனால் இவற்றைக் கவிமணி வைத்துக்கொள்ளாமல் திருவிதாங்கூர் பல்கலைக்கழகத்தில் தனது தாயார் ஆதிலட்சுமி அம்மையார் பெயரில் அறக்கட்டளை ஏற்படுத்தி அதற்குக் கொடுத்துவிட்டார். பி.ஏ. வகுப்பில் தமிழில் முதல் மதிப்பெண் பெற்றுத்தேறும் மாணவர்களுக்கு இப்பரிசு வருடந்தோறும் அளிக்கப்பட்டு வருகிறது.

இதைப்போலவே ராஜா சர் முத்தையா செட்டியார் போன்ற பெரியவர்கள் பாராட்டு விழாவும் பொற்கிழியும் தர ஏற்பாடு செய்துகொண்டிருப்பதை அறிந்து இவை வேண்டாம், உங்கள் அன்பு ஒன்றே போதுமானது

www.tamilarangam.net



என்பதாகக் கடிதம் எழுதித் தெரிவித்தார். பொருள் கிடைக்கும் இடம்தேடி ஓடும் கவிஞர்கள் மத்தியில் அவைகளை வேண்டாம் என்று மறுத்த கவிமணி அவர்கள் பொருளாசை அற்ற வித்தியாசமான கவிஞர்.

கவிமணி வாழும்போதே அவருடைய ஊரார் அவருக்கு நினைவு நிலையம் அமைத்துச் சிறப்பித்தார்கள். நெல்லை மாவட்டத் தமிழர்களோ அவரை அழைத்துவந்து அவருக்கு விழாவே எடுத்து நடத்தினார்கள். அவரது எண்பதாம் அகவையின் போது கவிமணியை யானையின் மீது அமர்த்தி ஊர்வலமாக அழைத்துவந்து சிறப்புச் செய்யத் திட்ட மிட்டிருந்தனர். ஆனால் அம் முயற்சி பலனளிக்கவில்லை. எக்சிமா என்ற நோயால் அவதியுற்ற கவிமணி தம் எண்பதாம் வயது பிறந்த சில வாரங்களுக்குள் காலமானார்.

அக்காலத்தில் திரையுலகில் கொடிகட்டி பறந்த கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன், கவிமணி அவர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். கலைவாணர் ஒரு கொலை வழக்கில் சிக்கிக் கொண்டபோது அவரால் நன்மை பெற்றவர்கள் விலகிச் சென்றனர். ஆனால் கவிமணியோ அவரிடம் எதையும் பெறாமலேயே அன்பு காட்டிவந்தார். அவரது விடுதலைவேண்டி கவிதையும் பாடினார்.

கவிமணி அவர்கள் கவிஞர் மட்டுமல்ல. வரலாற்று ஆய்வாளரும் ஆவார்.

www.tamilarangam.net



தமது ஆராய்ச்சிக் கட்டுரைகளைத் தமக்கே உரிமை யாக்கிக் கொள்ளாமல் பிறருக்குப் பயன்தரத் தக்க வகையில் வெளியிட்டவர். அதோடு அரசியல் சாராமல் மொழிவழி மாநிலம் அமைக்கும் போராட்டத்தில் முக்கியப்பங்காற்றினார். குமரி மாவட்டத்தைக் கேரளத்துடன் இணைக்கும் முயற்சி நடந்தபோது, மாவட்டம் தமிழகத்தின் ஒரு பகுதி என்பதைத் தக்கச் சான்றுகளுடன் நிறுவியதோடு போராட்ட வீரர்களுக்கு உற்சாகமும் ஆசியும் வழங்கியவர் அவர்.

கவிமணி எழுதிய 'ஆசியஜோதி' 'நாஞ்சில் நாட்டு மருமக்கள் வழி மான்மியம்' போன்றவை சிறப்பானவை. 'மலரும் மாலையும்' என்பது இவரது தனிப்பாடல் திரட்டுகள். இவருடைய இசைப்பாடல்கள் பாரி நிலையத்தாரால் தேசிக விநாயகம்பிள்ளையின் கீர்த்தனைகள் என்ற பெயரில் பதிப்பிக்கப்பட்டது.

கவிமணியின் தன்னடக்கத்தின் காரணமாக அவரது வாழ்க்கை வரலாறு பெரிதும் கிட்டாமல் போயிருக்கிறது. இருப்பினும் அவரது கவித்திறனும், தமிழ்த்தொண்டும் தமிழ் உள்ளவரையிலும் நிலைத்து நின்று அவரது புகழ்பாடும்.

www.tamilarangam.net

7

# மறைமலை அடிகளார்

(15-7-1876)

தமிழில் எல்லாரும் பேசுகிறோம். ஆனால் தனித் தமிழில் பேசுகிறோமா? இது சாத்தியமா? சாத்தியம் என்று நிரூபித்துக் காட்டியவர் மறைமலை அடிகளார். தமிழுணர்வை ஊட்டி தமிழர்களைத் தட்டியெழுப்பிய இந்த அறிஞர் நாகைக்கு அருகில் உள்ள காடம்பாடி என்ற சிற்றூரில் சொக்கநாதப்பிள்ளை 'சின்னம்மையார் தம்பதியினருக்கு 15-7-1876-ல் பிறந்தார். பெற்றோர் இவருக்கு இட்ட பெயர் வேதாசலம். இவருடைய மதிப்புக் கருதி 'சுவாமி' வேதாசலம் என்றும் அழைத்தார்கள். இதையே தனித்தமிழில் மறைமலை அடிகள் என மாற்றிக் கொண்டார்.

இளம் வயதிலேயே தந்தையை இழந்த அடிகள், நாகையில் .வெசிலியன் மிஷன். பள்ளியில் படித்தார். அங்கு ஆங்கிலமும், மதபோதனைகளும் 'அதிகமாக இருக்கிறது. தமிழுக்கு உரிய மதிப்பில்லை என்று நினைத்து, வீட்டிலேயே தமிழ் படிக்க ஆரம்பித்தார். கைகளில் கிடைக்கும் தமிழ் நூல்கள் யாவும் அவர் நெஞ்சில் மனப்பாடமாக நிலைக்கும்.

www.tamilarangam.net



ஒன்பதாம் வகுப்புக்கு மேல் படிக்க முடியாத சூழ்நிலையில் பள்ளிப்படிப்புக்கு முழுக்குப்போட்டார். ஆனால் புத்தகக்கடை வைத்திருந்த நாராயணசாமிப் பிள்ளை என்ற அறிஞரின் உதவியோடு பதினைந்தாம் வயது முதல் தமிழில் ஆழ்ந்த பயிற்சி பெற்றுக் குறுகிய காலத்தில் சிறந்த புலமை பெற்றார்.

மாணவப் பருவத்திலேயே .இந்து மதாபிமான சங்கம். என்ற அமைப்பைத் தோற்றுவித்துச் சமய அறிவை மாணவர்களுக்கு ஊட்டியதோடு, தன்னையும் சிறந்த பேச்சாளராக வளர்த்துக் கொண்டார். நாகை-நீலலோசனி, பாஸ்கர ஞானோதயம், திராவிட மந்திரி போன்ற பத்திரிகைகளில் இவரது சிறந்த கட்டுரைகள், ஆய்வுகள் வெளிவந்தன. அப்போது இவர் இளைஞர். இவரது எழுத்தாற்றலைக் கண்ட சைவ சித்தாந்தப் பெரும்புலவர் சோமசுந்தர நாயகர், அடிகளாருக்கு அறிமுகமானார். இது வளர்ந்து அடிகளாரின் சென்னை வாழ்க்கைக்கு அடிகோலியது.

பேராசிரியர் மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளையவர்களைத் தனது கவித் திறத்தாலும், அறிவுத் திறத்தாலும் வயப்படுத்தி பேராசிரியரிடம் நற்சான்று பெற்றார். இச்சான்றின் காரணமாகத் திருவனந்தபுரத்தில் ஆசிரியப்பணி கிடைத்தது.

பருவநிலை ஒத்துக்கொள்ளாததால் அப்பணியை விட்டுவிட்டு நாகை திரும்பினார். ஆனால் சில நாட்களில் சோமசுந்தர நாயகரின் வேண்டுகோளின்படி சென்னை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வந்து தீபிகை என்ற இதழில் ஆசிரியரானார். அங்கிருக்கும்போது பல பழந்தமிழ் நூல்களுக்கு உரை விளக்கவுரை போன்றவற்றை எழுதினார். இவரது மாணவர்களில் டி.கே. சிதம்பரனார், நாவலர் சோமசுந்தர பாரதியார் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

ஐந்து மாதத்திலேயே தீபிகையை விட்டு வெளியேறி, தனது தகுதியால் சென்னை கிறித்தவக் கல்லூரியில் தமிழாசிரியரானார். முல்லைப்பாட்டு, பட்டினப்பாலை போன்றவற்றிற்கு இவரை உரை எழுதச் சொல்லி நூலாக வெளியிட்டவர்கள் இவரது மாணவர்கள். அங்கு பதிமூன்று ஆண்டுகள் பணியாற்றினார்.

மறைமலை அடிகளார் கல்லாத பழந் தமிழ் நூல் இருக்காது. அவற்றுள் பெரும்பாலானவற்றுக்கு அப்போதே இவர் உரை எழுதியிருக்கிறார். 1902-ல் ஞானசாகரம் என்ற இதழை ஆரம்பித்தார்.

ராமலிங்க அடிகளாரின் 'அருட்பா'வை 'மருட்பா' என்று சிலர் கூறி விவாதம் செய்து வந்தனர். பேரறிஞர் கதிரைவேற்பிள்ளை என்பவர் வள்ளலாருடையது மருட்பாதான் என்றார். அவரை மறுத்து வாதிட்டு வள்ளலார் அருளியது அருட்பாதான் எனச் சான்றுகளுடன் நிறுவினார் அடிகளார்.

மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் இவர் கலந்துகொண்டு பாண்டித்துரைத் தேவராலும் பெரும் புலவர்களாலும் பாராட்டப்பட்டார். அதன்பின், 'சைவ சித்தாந்த மகாசமாஜம்' என்ற அமைப்பை நிறுவி அதன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



செயலாளராகப் பொறுப்பேற்றார். நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு தீயோர் சிலரால் அப்பொறுப்பையும் விட்டார்.

அடிகளார் இரு ஆங்கில இதழ்களையும் வெளியிட்டிருக்கிறார்.

1911-ம் ஆண்டில் துறவறம் மேற்கொண்டார். அப்போது பதினொருவர் இவரது குடும்பத்து அங்கத்தினர்கள்.

மறைமலை அடிகளார் சொற்பொழிவாற்றச் சென்றால் அதற்குக் கட்டணம் விதிப்பார். இதைக் குடும்பம் மற்றும் தனது ஆராய்ச்சி செலவுகளுக்குப் பயன்படுத்துவார். தென்னாடு முதல் வட இந்தியா, இலங்கை போன்ற வேறு இடங்களிலும் சொற்பொழிவாற்றியுள்ளார்.

சமய சன்மார்க்க நிலையத்தைச் சென்னை பல்லாவரத்தில் ஆரம்பித்திருந்த அடிகளார், அங்குச் சொந்தமாக அச்சகத்தையும் நிறுவினார்.

இவருடைய மகள் நீலாம்பிகையாருடன் மலர்த் தோட்டத்தில் உலாவும்போது வள்ளலாரின் 'பெற்ற தாய்தனை மகமறந்தாலும்' என்று தொடங்குகிற பாடலைப்பாடி அதன் இறுதியில் தேகம் என்ற வடமொழிச் சொல் இருப்பதைக் கண்டு இதுபோன்ற சொற்களால்தான் தமிழின் பெருமை கெடுகிறது என்பதாக வருத்தப்பட்டார். அதைக் கேட்ட அவ்வம்மையார், அப்படியானால் நாமும் நமது பேச்சில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வரும் அயல் மொழிச்சொற்களை விடுத்துத் தனித்தமிழிலேயே பேசலாமே என்றார். அம்முயற்சியின் வெளிப்பாடாக அமைந்ததே .தனித் தமிழ் இயக்கம்.. இவ்வியக்கம் வலுப்பெறத் துவங்கியதும், சமரச சன்மார்க்க சங்கம் பொதுநிலைக் கழகமாகப் பெயர்மாற்றம் பெற்றது.

எழுத்துப்பணியிலும் புதிய திருத்தத்தைக் கொண்டுவந்தார். கலப்பில்லாமல் எழுதும் முறையை அறிமுகப்படுத்தினார்.

ராஜாஜியின் காலத்தில் கொண்டுவரப்பட்ட இந்தியை முனைப்புடன் எதிர்த்து போராட்டம் நடத்தியவர் அடிகள். மொழிப் போராட்டத்தோடு சமயத்தில் புரட்சியையும் உருவாக்கிக்காட்டினார். இந்து சமயத்தில் இருக்கும் கைம்பெண் விதவைக்கோலம், மறுமணத் தடைபோன்ற மூடக் கருத்துகளை ஒதுக்கித் தள்ளவேண்டும் என்று வலியுறுத்தினார். தமிழிலேயே மத வழிபாடுகள் இருக்க வேண்டும் என்று வற்புறுத்திய அடிகள் தமிழர் மத மாநாட்டை 1940-ல் சென்னையில் நடத்தினார்.

தமிழர்களுக்கு என்று ஒரு ஆண்டு இல்லாதது வெட்கக்கேடு என்று நினைத்த அடிகளார், ஆராய்ந்து வள்ளுவராண்டை உருவாக்கினார். இதன்பொருட்டு .திருவள்ளுவர் திருநாள் கழகம். என்ற அமைப்பே உருவானது. முதலில் அதை ஈழம் பின்பற்றியது. பின்பு கலைஞர் கருணாநிதி ஆட்சியில் தமிழகத்தில் நடை

www.tamilarangam.net



முறைப்படுத்தப்பட்டு, அதைத்தான் தமிழர்கள் ஆண்டாக நாம் இப்போது கடைபிடித்து வருகிறோம்.

பல துறைகளிலும் சீர்திருத்தங்கள் செய்து, தனது குடும்பத்தாரோடு தமிழ்ப்பணியாற்றி தமிழை வாழவைத்த அடிகளார் 15-9-1950-ல் காலமானார்.

www.tamilarangam.net

8

# பேராசிரியர் பி.என். சீனிவாசாச்சாரியார்

(18-7-1878)

மைலாப்பூர் காந்தி. என அழைக்கப்பட்ட பேராசிரியர் பி.என். சீனிவாசாச்சாரியார் அவர்கள் காஞ்சீபுரம் மாவட்டத்தில் கடல்மங்கலம் என்னும் கிராமத்தில் ஓர் ஏழ்மையான கும்பத்தில் 18-7-1878-ல் பிறந்தார்.

அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள முடியாத குடும்பச் சூழ்நிலையில் இருந்த சீனிவாசாச்சாரியாரை அவரது உறவினரான நரசிம்மாச்சாரியார் என்பவர் தத்தெடுத்து சென்னைக்கு அழைத்து வந்தார்.

கடல் மங்கலம் ஆரம்பப் பள்ளியில் படித்த சீனிவாசன் மிகுந்த அறிவுக் கூர்மை உடையவராக விளங்கினார். இந்து மதத் தத்துவங்களிலும் பழையநூல்களிலும் சிறு வயதிலேயே புலமை பெற்று விளங்கினார். இவருடைய வளர்ப்புத் தந்தையான நரசிம்மாச்சாரியார் மயிலை கபாலீசுவரர் கோயிலில் மணியக்காரராக இருந்தார். அவருடைய ஆதரவோடு

www.tamilarangam.net



மெட்ரிகுலேசன் படிப்பை முடித்தார். பிறகு, அந்தக் காலத்திலிருந்தே புகழ் பெற்றுத் திகழ்ந்து வரும் பென்னாத்தூர் சுப்பிரமணியம் (பி.எஸ்) உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியராகப் பணியில் சேர்ந்தார். தேச பக்தரும், எழுத்தாளருமான பி.ஆர். ராஜம் ஐயர் போன்றவர்களுடன் நெருங்கிப் பழகினார்.

தனது சிறுவயதிலேயே விவேகானந்தரின் சொற்பொழிவுகளைக் கேட்டு ஆன்மீகத்தில் நாட்டம் செலுத்தினார். கனகவள்ளி அம்மையாரைத் திருமணம் செய்து கொண்ட சில நாட்களிலேயே துறவு பூண்டு இமயமலையில் தவம் செய்வதற்காகப் புறப்பட்டு திருக்கழுக்குன்றம் என்ற ஊரில் தங்கியிருந்தார். இதை அறிந்த சுவாமி ராமகிருஷ்ணானந்தர் சீனிவாசாச்சாரியாரை வரவழைத்து 'இல்லறமல்லது நல்லற மன்று' என்றும், குடும்ப வாழ்க்கையில் ஈடுபட்டே பலர் வாழ்வின் இலட்சியங்களை அடைந்திருக்க நீ உன் இளம் மனைவியைத் துறந்துவிட்டுச் செல்வது சரியில்லை என்றும் அறிவுரை கூறித் திருத்தினார். அதன்பிறகு இல்லறத்தில் ஈடுபட்டு லட்சுமி, ரங்கநாயகி என்னும் இரு புதல்விகளைப் பெற்றார். இந்த ராமகிருஷ்னானந்தர்தான் வ.உ.சி., சிவா, பாரதியார் போன்றவர்களுக்கும் ஆலோசனை கூறி வழி நடத்தியுள்ளார்.

துறவுக் கொள்கையைக் கைவிட்ட பிறகு மாநிலக் கல்லூரியில் தத்துவத்தில் இளங்கலைப் பட்டப்படிப்பை முடித்தார். பி.எஸ். பள்ளியில் ஆசிரியராக இருந்த

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சீனிவாசன் கோழிக்கோட்டில் உள்ள ஜாமரின்ஸ் கல்லூரியிலும், அங்கிருந்து சென்னை பச்சையப்பன் கல்லூரியில் பேராசிரியராகவும் நியமனம் பெற்றார். ஆசிரியராகப் பணியாற்றும்போதே தத்துவத்தில் முதுகலைப் (எம்.ஏ) பட்டமும் பெற்றார்.

1935-ல் பச்சையப்பன் கல்லூரியின் முதல்வராக பொறுப்பேற்றார். இடவசதி இல்லாததை உணர்ந்த சீனிவாசாச்சாரியார் அப்போதைய சென்னை மாகாண பிரதம அமைச்சராக இருந்த ராஜாஜியிடம் பச்சையப்பன் கல்லூரிக்காக நிலங்களை வேண்டிப் பெற்று புதிய கட்டிடங்களை அமைத்தார். கல்லூரியை விரிவுபடுத்தினார். ராஜாஜியிடமிருந்து சுலபத்தில் யாரும் எதையும் பெற முடியாது என்ற நிலை இருந்த காலத்தில் இவர் கல்லூரிக்கு நிலம் பெற்றது பெரிய சாதனையாகக் கருதப்பட்டது.

சீனிவாசாச்சாரியார் சாதி மத வேறுபாடுகளைக் கருதாதவர். மைலாப்பூர் பகுதியில் யாராவது இறந்துவிட்டால், சவ அடக்கத்திற்கு முதல் ஆளாக அவர்தான் நிற்பார். அனாதை பிணங்களைத் தோளில் சுமந்து சென்று மயானத்தில் தனியொருவராகவே தகனம் செய்வாராம். நூற்றுக்கு மேற்பட்ட அனாதைப் பிணங்களை இப்படிச் சுமந்து சென்று தகனம் செய்தவர் சீனிவாசாச்சாரியார்.

லேடி சிவசாமி மகளிர் உயர்நிலைப் பள்ளியை விரிவுபடுத்துவதற்காக நிலம் தேவைப்பட்டபோது, தான்

www.tamilarangam.net



ஆசிரமம் அமைத்துத் தங்கியிருந்த இடத்தை இனாமாகவே கொடுக்க முன் வந்தார். இதை ஏற்காமல் நிர்வாகம் பணம் தர முன்வந்த போது குறைந்த விலைக்கு நிலத்தைக் கொடுத்ததோடு, அந்தத் தொகையையும் மயிலாப்பூர் தேசிகர் கோயிலுக்கே கொடுத்துவிட்டார்.

சீனிவாசாச்சாரியார் தனது ஆசிரமத்தில் ஸ்ரீகிருஷ்ணா லைப்ரரி. என்ற பெரிய நூலகத்தை வைத்திருந்தார். இது இரவு பகல் எப்போதுமே திறந்த நிலையில்தான் இருக்கும். இந்த நூலகத்தைப் பிற்காலத்தில் ராமகிருஷ்ணா மடத்திற்குக் கொடுத்து விட்டதோடு, தான் எழுதிய புத்தக விற்பனை உரிமையையும் அம் மடத்திற்குத் தந்தார்.

சென்னை மாகாணத்தில் திருப்பதி திருமலை தேவஸ்தானத்தின் போர்டு உறுப்பினராக இருந்ததோடு, அந்த போர்டு உருவாகவும் காரணமாக இருந்தார். சென்னை மைலாப்பூரில் உள்ள தேசிகர் ஆலயத்தில் திருப்பதியில் உள்ள பெருமாள் சிலையைப் போன்ற சிலையை நிறுவ வேண்டும் என்பதற்காக தனது உடைமைகளை விற்றும் நிதி சேகரித்தும், சிலைசெய்து அதை பிரதிஷ்டை செய்தார். சீனிவாசர் கோயில் எனப்படும் தேசிகர் கோயில் இன்று கம்பீரமாக நிற்பதற்கு பேராசிரியர் சீனிவாசாச்சாரியாரின் அரிய முயற்சியே காரணம். மக்கள் மத்தியில் பிரிவுகள் இருக்கலாம். ஆனால் பிரிவினைகள் இருக்கக்கூடாது என்பார் இவர். இவரது முற்போக்கான செயல்களும், சமூக சேவையும் மக்களைப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பெரிதும் கவர்ந்ததால் இவரை .மைலாப்பூர் காந்தி. என்றே அன்புடன் அழைத்தனர்.

விவேகானந்தரின் தூண்டுதலால் ஆரம்பிக்கப்பட்ட .வேதாந்தகேசரி. என்ற பத்திரிகையின் இணை ஆசிரியராகவும் பணியாற்றியுள்ளார். தத்துவங்கள் சம்பந்தமான ஏராளமான நூல்களை எழுதியுள்ளார். இவரிடம் தத்துவ விளக்கங்களைப் பெற வரும் ஐரோப்பியர்களுக்கும், இந்தியர்களுக்கும் அவரவர்கள் எளிதில் புரிந்து கொள்ளும் விதத்தில் விளக்கம் சொல்வார்.

கபிஸ்தலம் தேசிகாச்சாரியார் என்பவரிடத்தில் மாணவராக இருந்து ஏராளமான பழைய வேதாந்த நூல்களைப் பற்றி அறிந்து கொண்டதோடு, அவருக்குக் குருதட்சணையாக அந்த வேதாந்தப் புத்தகங்களை யெல்லாம் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார்.

அகில இந்திய தத்துவ இயல் காங்கிரசின் லாகூர் மாநாட்டுத் தலைவராகவும், வேர்ல்டு பெடரேசன் ஆப் 'ரெலிஜியன்' என்ற அமைப்பின் தலைவராகவும் இருந்தார்.

தான் சம்பாதித்த அத்தனை பொருள்களையும், சொத்துக்களையும் நன்கொடையாகவே அளித்த சீனிவாசாச்சாரியாரை, பேராசிரியர் சங்கர நாராயணன் என்பவர் ரிக்ஷா வண்டியில் உட்கார வைத்து தானே இழுத்துச் செல்வதில் பெருமைப் பட்டுக்கொள்வார்.

www.tamilarangam.net



மிகச்சிறிய கிராமத்தில் ஏழ்மையான குடும்பத்தில் பிறந்து, தனது முயற்சியாலும், அறிவுக் கூர்மையாலும் இந்த நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த சிறந்த தத்துவ ஞானியாகவும், சமூகசேவை செய்பவராகவும் விளங்கிய சீனிவாசாச்சாரியார் 1959-ம் ஆண்டு காலமானார்.

www.tamilarangam.net

9

# நாவலர் சோமசுந்தர பாரதியார்

(27-7-1879)

நெல்லை மாவட்டம் எட்டையபுரத்தில் எட்டப்ப பிள்ளை என்று அழைக்கப்பட்ட சுப்பிரமணியம் என்பவருக்கும், எட்டையபுரத்து அரசியாரின் வளர்ப்பு மகளாக விளங்கிய முத்தம்மாள் என்னும் அம்மையாருக்கும் 27-7-1879-ல் நாவலர் சோமசுந்தர பாரதியார் பிறந்தார். இவரது இயற்பெயர் சத்தியானந்த சோமசுந்தரம்.

ஐந்து வயதில் திண்ணைப் பள்ளியில் சேர்ந்த நாவலர் பாரதியார், ஆசிரியர் ஒரு மாணவரை அடிப்பதைக் கண்டார். மறுநாள் முதல் பள்ளிக்குச் செல்லாமல் நின்றுவிட்டார். அரசியாரின் செல்லப்பேரன் என்பதால் யாரும் அவரை பள்ளிக்கு வற்புறுத்தி அழைக்கவில்லை. அதன் பிறகு ஒன்பது வயதுவரை படிக்காமலேயே காலம் கழித்தார். தனது ஒன்பதாம் வயதில் தாயை இழந்து தந்தையாரின் சொந்த இல்லத்திற்கு வந்த பிறகுதான் பத்தாம் வயதில் பள்ளிக்குச் சென்று எட்டாம் வகுப்புவரை படித்தார்.

www.tamilarangam.net



சிறுவயதிலேயே தமிழ்ப்பற்று மிக்கவராக விளங்கிய நாவலர், கடம்பூர் மீனாட்சியம்மையை தனது பதினைந்தாம் வயதில் தமிழ் முறைப்படி திருமணம் புரிந்தார்.

பாளையங்கோட்டை சி.எம்.எஸ். கல்லூரியில் சேர்ந்து கல்வியிலும், பண்பிலும் சிறந்து விளங்கிய பாரதியை மேல் படிப்பு படிக்க அனுப்பிவைத்து அவருக்கு உதவி செய்தவர் அக்கல்லூரி முதல்வர் அருள் திரு. சாப்டர் என்பவர்.

திருநெல்வேலி கல்லூரியில் படிக்கும்போது யாழ்ப்பாணத்து அறிஞர்கள் முன்பு கவிதை எழுதிக்காட்டி 'சோம சுந்தரபாரதி' என்னும் பட்டப் பெயரைப் பெற்றிருந்தார்.

அதன்பின் சென்னை தாம்பரத்திலுள்ள கிறித்தவக் கல்லூரியில் பி.ஏ. பயின்றார். கல்லூரிக்கு வரும் முன்னமேயே இருந்த தமிழார்வமும், தமிழ்க் கவிஞர்களின் தொடர்பும், தேசியகவி பாரதியாருடனான நட்பும் இவரைப் பெரும்புலவராக்கின.

தாம்பரம் கிறித்தவக் கல்லூரியில் பேராசிரியர்களாக இருந்த மறைமலை அடிகளாரும், சூரிய நாராயண சாஸ்திரி என்ற இயற் பெயருடைய பரிதிமாற்கலைஞரும் இவருக்கு அதிகமான உற்சாகத்தையளித்தனர்.

அதே நேரத்தில் இவரது தந்தையார் காலமானார். மூன்று பிள்ளைகளுடன் சிரமத்துடன் வாழ்ந்த சோமசுந்தரபாரதியார், படிப்பதற்காகவும் குடும்பத்தை

www.tamilarangam.net



நடத்தவும் தனது அன்னையார் விட்டுச்சென்ற பன்னிரண்டு ஏக்கர் நிலத்தை விற்றார்.

பி.ஏ முடித்தபின்பு வழக்குரைஞருக்கும் படித்தார். எவரிடத்திலும் ஜூனியராகப் பணிபுரியாமல் தூத்துக்குடியில் வக்கீல் தொழில் பார்த்தார். சட்டத்தின் நுணுக்கங்களைத் திறம்பட அறிந்து வைத்திருந்தார்.

இவர் வழக்குரைக்கும்போது தமிழ் இலக்கிய எடுத்துக்காட்டுகளுடன் பேசுவார். மேடையில் பேசும்போது சட்ட நுணுக்கங்களைப் பேசுவார். இதனால் இவரை நாவலர். எனப் போற்றிப் புகழ்ந்தனர். தூத்துக்குடியில் 15 வருடம் தங்கியிருந்தார்.

சுப்பிரமணிய பாரதியாரைப் போலவே சோமசுந்தர பாரதியாரும் பெரிய முறுக்கிவிட்ட மீசை வைத்திருந்தார். பாரதியார் நடத்திய 'இந்தியா' பத்திரிகையைத் தவறாமல் வாங்கியும், அவருக்குப் பொருள் உதவியளித்தும் வந்தார். நாவலர் பாரதியாரும், வ.உ. சிதம்பரனாரும் நெருங்கிப் பழகினர். வக்கீல் தொழிலை விட்டுவிட்டுச் சிதம்பரனாரின் கப்பல் அலுவலகப் பொறுப்பில் குறைந்த சம்பளத்திற்கு நாவலர் பணிபுரிந்தார். நெல்லையில் மாநிலக் காங்கிரசு மாநாட்டின் செயலாளராக இருந்தபோது சென்னை வந்திருந்த காந்தியடிகளைத் தூத்துக்குடிக்கு அழைத்து வந்தார்.

மதுரையைச் சுற்றியிருந்த வணிகர்கள் நாவலரை மதுரைக்கு வந்துவிடும்படி வேண்டினர். அதனால் மதுரையை அடுத்த பசுமலை என்ற இடத்திற்கு 1920-ல்

www.tamilarangam.net



குடியேறி 40 ஆண்டுகளுக்கு மேல் வாழ்ந்ததால், இவரைப் பசுமலைப் பாரதியார் என மக்கள் அழைத்தனர்.

நான்காம் தமிழ்ச்சங்கத்துடன் நாவலர் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். அச்சங்கத்தின் சார்பாக வெளிவந்த 'செந்தமிழ்' என்னும் இதழில் பல கட்டுரைகளை வெளியிட்டார். தமிழில் தலையாய நூல்களான பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, ஐம்பெருங்காப்பியங்கள் இவற்றிலொன்றிலாவது முழு அறிவும் பெற்றிராமல் எல்லா நூல்களிலும் நுனிப்புல் மேய்ந்துவிட்டு தன்னைப் புலவர் என்று பறைசாற்றிக் கொள்வது கூடாது என இவர் அடிக்கடி கூறவார்.

ஈழத் தமிழர்களிடையே பல சொற்பொழிவுகளை நிகழ்த்தி, 'நாவலர்' என்ற பட்டம் பெற்றார். மதுரை திருவள்ளுவர் கழகத்தினரால் இவருக்குக் 'கணக்காயர்' பட்டமும், அண்ணாமலை பல்கலைக்கழகத்தினரால் 'டாக்டர்' பட்டமும் வழங்கப்பட்டன. அறிஞர் சண்முகனார் திரு.வி.க. பண்டிதமணி கதிரேசன் செட்டியார் போன்ற தமிழ் அறிஞர்களுடன் நெருங்கிப் பழகிய நாவலர், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும் தமிழ்ப் பண்யாற்றினார்.

பாரதியாரின் பாடல்களில் இலக்கணமில்லை என்று சிலர் தூற்றித் திரிந்தபோது பாரதியின் பாடல்களில் இலக்கணம் உண்டு என்று நிரூபித்தவர் நாவலர் பாரதியார். தொல்காப்பியத்திற்கு உரை கண்டவர் இவர். தமிழில் பல புகழ் பெற்ற நூல்களைப் படைத்துள்ளார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



முதல் மனைவியாரின் மறைவுக்குப் பிறகு வசுமதி என்னும் அம்மையாரை மணந்தார். இவர்களுக்குப் பிறந்த மீனாட்சி, லலிதா ஆகிய குழந்தைகள் தங்கள் ஆபரணங்களை நாட்டுவிடுதலைக்காகக் காந்தியடிகளிடம் கழற்றிக் கொடுத்து அவரது பாராட்டைப் பெற்றனர். லலிதா (டாக்டர் லலிதா காமேஸ்வரன்) அம்மையார் பின்னாளில் எம்.ஜி.ஆர் பல்கலைக்கழகத் துணைவேந்தராகப் பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

நாவலரின் இல்லத்தில் புலவர்கள் ஒன்றுகூடி 'தமிழகப் புலவர் குழு' என்ற அமைப்பைத் தோற்றுவித்தனர். இக்குழுவுக்கு நாவலரே தலைவராக விளங்கினார். இது தவிர திருச்சி. கரந்தை, மதுரை ஆகிய இடங்களில் நடைபெற்ற தமிழர் புலவர் குழுவிற்கு தலைமை தாங்கினார்.

எண்பது ஆண்டுகள் தமிழுக்காகவும், தமிழர்களுக்காகவும் வாழ்ந்த நாவலர், 1959-ல் தவறி விழுந்ததில் நோயுற்றார். பலவித மருத்துவ சிகிச்சைகளும் பலனளிக்காமல் 14-12-1959-ல் காலமானார்.

www.tamilarangam.net

10

# பண்டிதமணி கதிரேசன் செட்டியார்

(16-10-1881)

ஏழு மாதங்கள் கூட பள்ளியில் பயிலாமல் பன்னிரண்டு ஆண்டுகள் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக இருந்து தமிழ்ப் பணியாற்றியவர் பண்டிதமணி கதிரேசன் செட்டியார் அவர்கள். இவரது புலமைகண்டு கற்றவர்கள் கூட இவர் முன்னிலையில் பேச அஞ்சினர். இவரோடு நட்புக்கொள்ளுதல் பெருமைவாய்ந்தது என்று புலவர்களும் அவர்களுக்கு உதவும் அரசர்களும்கூட நினைத்தனர்.

இத்தகைய சிறப்புப் பெற்றவரான பண்டிதமணி அவர்கள் கணியன் பூங்குன்றனார் பிறந்த பூங்குன்றத்தில் 16-10-1881-ல் பிறந்தவர். பூங்குன்றம் பிற்காலத்தில் மகிபாலன் பட்டி என்று பெயர் மாற்றம் பெற்றிருந்தது. இவரது பெற்றோர்கள் முத்துக் கருப்பன் - சிவப்பி ஆச்சியார்.

இளமையிலேயே (3 வயதில்) இளம் பிள்ளை வாதத்தால் பாதிக்கப்பட்டு 14-ம் வயதில் இடக்கால் - இடக்கை செயலிழந்து ஊன்றுகோல் உதவியுடனேயே வாழ்நாளைக் கழித்தவர்.

www.tamilarangam.net



திண்ணைப்பள்ளியில் மட்டுமே படித்த இவர், வணிகத்தின் பொருட்டு இலங்கை சென்றிருந்தபோது இவருக்கு வயது 11. அப்போதுதான் அவரது தந்தையார் காலமான செய்தி அவருக்கு தெரிந்தது. இதனால் மனநிலையும் உடல்நிலையும் பாதிக்கப்பட்டு உடல் ஊனமுற்றவரானார்.

மனம் தளராமல் வீட்டிலேயே நூல்கள் பலவற்றைக் கற்றுப் பெரும் புலமை அடைந்தார். இவர் வீட்டுப் பக்கமாகச் செல்லும் தயிர்க்காரி முதல் தமிழறிஞர்வரை வழியில் செல்பவர்களையெல்லாம் அழைத்துவைத்துப் பேசுவார்.

மகிபாலன்பட்டியில் சிறுவசதிகள்கூட இல்லாத நிலையில் முதல் முதலாகச் சாலை அமைத்தல், பள்ளி, பாலம் கட்டுதல் போன்றவற்றை ஏற்படுத்தினார். இவரது அரும் முயற்சியால் அமைக்கப்பட்ட பாலங்கள் இரண்டில் ஒன்றுக்கு இவரது பெயரை 1952-ல் சூட்டினார்கள்.

தமிழ் மொழியில் புலமை பெற்றபின்பு வடமொழியையும் கற்று தமிழ் உயர்வுக்கு வழிகாண வேண்டும் என்று விரும்பிய பண்டிதமணி, மாதம் எட்டு ரூபாய் சம்பளத்திற்கு ஆசிரியரை அமர்த்தி வடமொழி கற்றார். புதிய நூல்களையும் இதழ்களையும் கண்டுவிட்டால் அதை விலைகொடுத்து வாங்கிவந்து படிப்பார்.

பண்டிதமணிக்கு மகாவித்துவான் அரசஞ் சண்முகனார், சோமசுந்தரபாரதியார், மறைமலை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அடிகளார், திருப்பாதிரிப்புலியூர் ஞானி', பாண்டித்துரைத் தேவர், டாக்டர் உ.வே.சா., கவிமணி, ராஜா சர். அண்ணாமலைச் செட்டியார் போன்ற பலர் நண்பர்களாக விளங்கினர்.

செட்டிநாடுகளில் அந்தக் காலத்தில் கல்விவளம் குன்றியிருந்தது. வாணிகம் செய்யும் அளவுக்கு எழுதப் படிக்கத் தெரிந்திருந்தால் போதும் என்றிருந்த நிலையை மாற்றி அந்தப் பகுதியைக் கல்வி வளம்மிக்க பகுதியாக மாற்றியவர் பண்டிதமணி.

இவரது முயற்சியால் மணிவாசகர் சங்கம் தோற்றுவிக்கப்பட்டது. பள்ளிகள் உண்டானது. கல்வி வளத்தோடு சுதந்திர உணர்வையும் ஊட்டவேண்டி 1910-ல் சுதேச நிதி திரட்டி விடுதலைப் போராட்டத்திற்கு அளித்தார்.

பண்டிதமணியின் புகழுக்குத் தூண்டுகோலாக இருந்தது மேலைச்சிவபுரி சன்மார்க்க சபை. இதை பழநியப்ப செட்டியார் என்பவரின் பெரும் உதவியுடன் பண்டிமணி தோற்றுவித்து, அச்சபையின் மூலமாகத் தமிழ் வளர்த்தார். மேலைச்சிவபுரி சபை தமிழ்ச்சான்றோர்களின் சரணாலயம் போலாயிற்று. இச்சபையே கணேசர் செந்தமிழ்க் கல்லூரியையும் நிறுவிற்று. கதிரேசனாருக்கு பண்டிதமணி பட்டத்தையும் அளித்தது.

இவருக்கு மகாமகோபாத்தியாயர் பட்டம் கொடுப்பதாக இருந்தது. அப்பட்டம் ஓர் இனத்தவருக்கு மட்டுமே உரியது என்றும், அதற்குப் பதிலாக

www.tamilarangam.net



'ராவ் பகதூர்' பட்டமளிக்கலாம் என்றும் கருத்து எழுந்தது. இதை ஆட்சேபித்து, ராவ்பகதூர் பட்டத்தை ஏற்க பண்டிதமணி மறுத்துவிட்டார்.

தமிழகத்தில் உள்ள கல்லூரிகளில் தமிழைக் கட்டாயப் பாடமாக வைக்க வேண்டும் என்று வற்புறுத்தி வந்தார். 1934-ம் ஆண்டில் அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பதவி இவர் மறுத்தும் கூட இவரைத் தேடி வந்தது. அப்போது இவருக்கு வயது 53.

மேலைச்சிவபுரிக் கல்லூரியை சென்னைப் பல்கலைக் கழகத்துடன் இணைக்கப் பெரிதும் உதவிசெய்தார்.

பண்டிதமணி கலந்துகொள்ளாத அல்லது தலைமை ஏற்காத தமிழ் அமைப்புகள் அந்தக்காலத்தில் இல்லை என்னும் அளவில் பெரும்பாலும், இவர் எல்லா நிகழ்ச்சிகளிலும் கலந்துகொண்டுசொற்பொழிவாற்றுவார் இவருடைய பேச்சைக் கேட்பதற்காக நிகழ்ச்சி தொடங்கும் ஒரு நாளைக்கு முன்பாகவே மக்கள் மாட்டு வண்டிகளில் கட்டுச் சோற்றுடன் நிகழ்ச்சி நடக்கும் இடங்களில் கூடிவிடுவார்கள். அவர்களுடைய மாட்டுக்கு உணவளிக்க பழநியப்பர் அவர்கள் வைக்கோலை போர்போராக கொட்டி வைத்திருப்பார்.

பண்டிதமணி தலைமைத்தாங்கிப் பேசும்போது அக்கூட்டத்தில் பேசப் பெறும் புலவர்கள் எல்லாம் அஞ்சுவர்.

www.tamilarangam.net



சங்க இலக்கியங்கள் அனைத்தும் தனித்தமிழில் இருப்பதாக மறைமலை அடிகளார் ஒரு கூட்டத்திற்குத் தலைமை தாங்கும்போது கூறியதை, அவ்விடத்திலேயே மறுத்து வடமொழிக்கலப்புகள் சங்கநூல்களில் இருப்பதை ஆதாரத்துடன் எடுத்துச் சொன்னார் பண்டிதமணி. இதனால் கோபத்துடன் மறைமலை அடிகளார் மேசையை ஓங்கித் தட்டினார். எனக்கும் ஒரு மேசை இருந்தால் நானும்தான் ஓங்கிக் குத்துவேன் என்றார் பண்டிதமணி.

பண்டிதமணியின் பெரும் புலமையைப் பாராட்டி 1942-ல் மகாமகோ பாத்தியாயர் என்ற பட்டம் அரசால் வழங்கப்பட்டது. இதுதவிர பிரிட்டிஷ் அரசு பண்டிதமணிக்குப் பல பட்டங்களைக் கொடுத்தது. இதனால் இவரை வெள்ளைக்காரனின் கையாள் என்று பலர் சொல்வதும் வழக்கமாயிற்று. .ஆயினும் இவர் தம் அறிவுத் திறமைக்கே இப்பட்டங்கள் வழங்கப் பெற்றன. என்பதை யாரும் மறுக்கமுடியாது. முதுபெரும் புலவர், சைவ சித்தாந்த வித்தகர் போன்ற பட்டங்களும் பண்டிதமணியை அணி செய்தன.

பண்டிதமணி அவர்கள் பல வடமொழி நூல்களை மொழி பெயர்த்திருக்கிறார். பல நூல்களை இயற்றி யிருக்கிறார். இப்படியிருந்தும் இவரிடம் நூல் முன்னுரை எழுதி வாங்குவது சிரமம். இப்போதெல்லாம் ஆசிரியர் பெயரைச் சொல்லி ஏதாவது இரண்டு அடிகளைச் சொன்னால் அதைக் கொண்டு முன்னுரை எழுதுபவர்கள் ஏராளம். ஆனால் பண்டிதமணி அவர்கள்

www.tamilarangam.net



அத்தனையையும் படித்தபின்பே நிறை குறைகளைச் சுட்டி எழுதுவாராம்.

நேர்மையாக விளங்கிய பண்டிதமணி குறை கண்டால் பொறுக்கமாட்டார். அதை உடனேயே கண்டித்துவிடுவார். இதனால் அவரைக் 'கர்வி' என்று சிலர் நினைத்தனர். அவரால் வாழ்வுபெற்ற பலரோ அவர் புலவர் மட்டுமல்ல. புரவலர் என்று போற்றினர். 1946-ல் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலிருந்து ஓய்வு பெற்றுத் தமிழ்ப் பணியாற்றிய பண்டிதமணி அவர்கள் 24-10-1953-ல் காலமானார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**11**

# திரு.வி.கலியாணசுந்தரனார்

(26-8-1883)

எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்பதை முழுமூச்சாகக் கொண்டு வடமொழிச் சொற்கள் கலவாமல் தூயத் தமிழிலேயே பேசவேண்டும். எழுத வேண்டும் என்று வற்புறுத்தியதோடு, அதைத் தன் வாழ்நாள் முழுவதிலும் கடைப்பிடித்தவர் ஒருவர் இருந்தார். அவர்தான் தமிழ்த் தென்றல் என்றும், திரு.வி.க. என்றும் அன்புடன் போற்றப்பட்ட திரு.வி. கலியாண சுந்தரனார். திரு.வி.க.வின் மனைவியின் பெயர் கமலாம்பிகை. இவர்களுடைய திருமணத்தில் இந்துக்களின் முறையில் திருமணச் சடங்குகளும், கிறிஸ்தவ ஜெபமும் நிகழ்த்தப்பட்டன.

திரு.வி.க. அவர்கள் 26-8-1883-ம் ஆண்டு சென்னைக்கு அருகில் உள்ள 'துள்ளம்' என்ற ஊரில் பிறந்தார். இவருடைய தந்தையார் திருவாரூர் வே. விருத்தாசலம், தாயார் சின்னம்மாள் .திரு. என்பது திருவாரூரையும் 'வி' என்பது அவருடைய தந்தையார் விருத்தாசலத்தையும் 'க' என்பது அவர் பெயரான கலியாண சுந்தரன் என்பதையும் (திரு.வி.க) குறிப்பிடும்.

www.tamilarangam.net



திரு.வி.க. சிறிய வயதிலேயே பெற்றோருடன் சென்னைக்குக் குடிபெயர்ந்தார். சென்னையில் கல்வி கற்றார். படிக்கும் வயதில் ஏற்பட்ட ஒரு நோயின் காரணமாக மருந்து சாப்பிட்டார். மருந்தின் பத்திய முறிவால் கைகால்கள் முடங்கின.

தமிழ் மீது கொண்ட பற்றின் காரணமாக திரு. கதிரைவேள் பிள்ளை என்பவரிடம் தனித்தமிழ் கற்றுச் சிறந்த பண்டிதர் ஆனார். தமிழ் இலக்கியத்தில் முடிசூடா மன்னனாக விளங்கிய திரு.வி.க. சுமார் ஐம்பத்து நான்கு நூல்களும், ஏராளமான கட்டுரைகளும் எழுதியிருக்கிறார். அவர் சிறந்த கவிஞரும் கூட.

பாரதியாருக்கு அடுத்தபடியாக பத்திரிகை உலகில் புரட்சி செய்து தமிழுடன் தேசிய உணர்வையும் கலந்து ஊட்டியவர் திரு.வி.க. அந்தக் காலத்தில் பெயரளவில் தமிழில் வெளிவந்த இதழ்கள் மத்தியில் திரு.வி.க நடத்திய 'தேசபக்தன்', 'நவசக்தி' இதழ்கள் அந்நிலையை மாற்றி, தமிழ் ஆர்வத்தை ஊட்டி, தமிழ் மணம் பரப்பியவை, திலகர், காந்தியடிகள், பெசண்ட் அம்மையார் ஆகியோரின் புகழைப்பாடி தேச உணர்வை ஊட்டிய பத்திரிகை தேசபக்தன் தேச பக்தன் தோன்றியிராவிட்டால் வகுப்புவாதம் ஓங்கியிருக்கும், வகுப்புவாதக் கட்சியின் நச்சுப்பல் தேசப்பக்தனால் பிடுங்கப்பட்டது. என்று அந்த இதழைப்பற்றி திரு.வி.க. அவர்கள் பெருமையுடன் கூறினார். திரு.வி.க. நவசக்தி இதழ் ஆரம்பித்தபோது தொழிலாளர்கள் ஆளுக்கு ஒரு ரூபாய் வீதம் ஐயாயிரம் ரூபாயையும், சில நண்பர்கள் இரண்டாயிரம் ரூபாயும்

www.tamilarangam.net



கொடுத்து உதவினார்கள். இதன் மூலம் ஒரு அச்சுக்கூடத்தை அமைத்து அதற்கு 'சாது அச்சுக்கூடம்' எனப் பெயரிட்டார். பின்னாளில் நவசக்தி இதழைத் திருமதி ராதாமணி அம்மையாருக்கு அளித்தார்.

'நவசக்தி' இதழ்மூலம் பெண்ணினத்தின் உயர்வு, தமிழ்வளர்ச்சி அரசியல் விழிப்புணர்ச்சி, சைவநெறி ஆகியவற்றை எழுதினார்.

திரு.வி.க.வின் எழுத்தில் கொதிப்பு இருப்பதாகவும், அது மக்களைத் தூண்டுவதாகவும் 'வெலிங்டன் பிரபு' என்ற ஆட்சியாளர் திரு.வி.க.வை அழைத்து எச்சரித்து அனுப்பியிருக்கிறார். மத்திய அரசு மாநிலங்களுக்கு உரிமைகளைப் பகிர்ந்து கொடுக்க வேண்டும் என்று திரு.வி.க. வலியுறுத்தி வந்தார். மொழிப் பிரச்சினை ஏற்பட்ட காலங்களில் இந்தியைத் தீவிரமாக எதிர்த்து வந்தவர் திரு.வி.க. அவர்கள். தமிழ்த் திருமணங்களைச் செய்துவைத்துப் புகழ் பெற்றார்.

1908-ல் வங்காளப் பிரிவினையை எதிர்த்துப் போராட்டத்தில் ஈடுபட்டதற்காகத் தனதுப் பணியை இழந்த திரு.வி.க. சென்னையில் உள்ள ஒரு பள்ளியில் தமிழாசிரியராக பல காலம் பணியாற்றியிருக்கிறார்.

தேசிய உணர்வுக்கு அடிப்படையாகத் தமிழ்ப்பற்று வளர வேண்டும். பொதுச் செயல்கள் யாவும் நாட்டு மொழியிலேயே நடைபெற வேண்டும் என்று வற்புறுத்தினார். தமிழர் அரசியல் மாநாடுகளில் அவர் பேசும்போதெல்லாம் ஆன்றோர் சிறப்பை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



துணைக்கழைத்து, அறத்தின் அடிப்படையில் அரசியல் ஒழுக்கத்தை அமைத்துக் கொள்ள வேண்டும் என்ற பொருளிலேயே பேசுவார். "சட்டசபைக்குக் குப்பைக் கூளங்களை அனுப்பினால் அதிகார வர்க்கத்தார் ஆதிக்கம் பெருகும்" என்றும், "குடிமக்கள் அரசியல் ஞானம் பெற்று தகுந்தவர், தகாதவர் என்னும் வேற்றுமைகளைக் கண்டறிந்து பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் அறிவு விளங்கப் பெறுதல் சிறப்பு" என்றும் அப்போதே அறிவுறுத்தினார்.

ஜஸ்டிஸ் கட்சியை அழிப்பதற்காக சென்னை மாகாண சங்கம் என்ற அமைப்பு தோற்றுவிக்கப்பட்ட போது அதன் செயலாளர்களுள் ஒருவராக இருந்தார். இந்தியாவிலேயே முதன் முதலாக 27-4-1918-ல் சென்னைத் தொழிலாளர் சங்கம் தோற்றுவிக்கப்பட்ட போது திரு.வி.க. அதன் துணைத் தலைவரானார். இவருடைய முயற்சியால் 4-5-1920-ல் மத்திய தொழிலாளர் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது.

திரு.வி.க. தொழிலாளர்களின் மீது அதிக அக்கறை உடையவர். அவர்களின் தோழனாக விளங்கினார். "நாளெல்லாம் உழைக்கும் பாட்டாளி மக்கள், தங்களுக்கு உரிய சரியான ஊதியத்தையும் மற்ற சலுகைகளையும் பெறவேண்டும்" என்று முழங்கினார். திரு.வி.க. தொழிலாளர்களுக்கு ஆதரவாகப் பல ஆர்ப்பாட்டங்களையும் போராட்டங்களையும் நடத்தி அரசாங்க அடக்குமுறைக்கு ஆளானவர். சென்னைத் தொழிலாளர் சங்கத்துக்காகச் சொந்த நிலையம் அமைத்துத் தந்தவர் திரு.வி.க. அவர்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



1933-ல் மாமண்டூரில் உழவர் வேலை நிறுத்தம் செய்து பெரிய புரட்சியையே ஏற்படுத்தினார்.

திரு.வி.க. தெய்வ பக்தி மிக்கவர். சிறுவயது முதலே பக்தி மார்க்கத்தை வளர்க்க அரும்பாடுபட்டார். உயிர் பலியிடுதலை எதிர்த்துப் பல இடங்களில் பிரச்சாரம் செய்தார். பல பக்தி மார்க்க சபைகளை ஏற்படுத்தி அதன் மூலம் சமயப்பணியும் செய்து வந்தார்.

சமூகத்தொண்டு, சமயத் தொண்டு, மொழித் தொண்டு ஆகியவற்றை முழு மூச்சாகக்கொண்ட திரு.வி.க. .ஒரு சிறந்த தமிழறிஞர், தேசபக்தர், தொழிலாளரின் தோழர். பெண்ணினத்தின் பாதுகாவலர், எளிமைக்கும் ஒழுக்கத்துக்கும் உதாரணமானவர் என்ற சிறப்புகளுக்குச் சான்றாக வாழ்ந்தவர்.

அறத்துக்கும், அரசியலுக்கும், சன்மார்க்கத்துக்கும், பரம்பரை வலுவுக்கும், நவீன தேவைகளுக்கும் இடையே எழும் மோதல்கள் பற்றி ஓயாத சிந்தனையில் மூழ்கிவிட்டவர் திரு.வி.க. அறம், அன்பு, அறிவு, தாய்மொழி ஆர்வம் தாய்நாட்டுப் பற்று ஆகியவற்றின் உருவகமாய்த் திகழ்ந்த அவரின் தமிழால் தேசியம் வளர்ந்தது. அவரின் தேசியத்தால் தமிழ் தழைத்தது என்று அவரைத் தமிழ் உலகம் போற்றுகிறது.

தமிழுக்காக வாழ்ந்து, தமிழ்த் தென்றல் எனச் சான்றோர்களால் போற்றப்பட்ட திரு.வி.க 1953-ம் ஆண்டு செப்டம்பர் பதினேழாம் நாள் மரணம் அடைந்தார்.

www.tamilarangam.net

12

# இ.மு. சுப்பிரமணியப்பிள்ளை

(6-6-1886)

பள்ளியில் தமிழ் பயிற்று மொழியாக இல்லாத காலத்தில், கலைச்சொல்லாக்கப் பணியை முடுக்கி விட்டால்தான் தமிழ் பயிற்று மொழியாகும் என்ற பெரிய படிப்புகளையும், பட்டங்களையும் பெறாத ஒருவரின் அரிய முயற்சியால்தான் அயல் மொழிச் சொற்களுக்கு தமிழில் நமக்கு 'கலைச்சொற்கள்' கிடைத்துள்ளன என்பது வியப்பான செய்திதானே! இந்த அரிய சாதனையைச் செய்தவர்தான் தமிழ் சுயமரியாதைச் சிந்தனையாளரான இ.மு. சுப்பிரமணியப்பிள்ளை.

இவர் எட்டையபுரத்தில் 6-6-1886-ம் ஆண்டு முத்துசாமிப்பிள்ளை-கோதை நாச்சியார் என்னும் பெற்றோருக்குப் பிறந்தார். நான்கு வயதில் தந்தையை இழந்து, தாயின் உழைப்பால் வளர்ந்து பெரிய படிப்புகளைப் பெற வசதியில்லாத நிலையிலும் மனம் தளராமல் உழைத்து முன்னுக்கு வந்தவர். பரம்பரையாக இயல்பிலேயே கவிபாடும் ஆற்றல் பெற்றவர். 1916-ல் ஈசுவர வடிவு என்னும் நங்கையை மணந்தார்.

www.tamilarangam.net



இவர் தனது 12-ம் வயதிலேயே .ராமாயண அகவல். என்னும் நூலை எழுதினார். மாணவராக இருக்கும்போதே 'கலைவாணி'க் கழகம் (1912-14) அமைத்துச் செயலாளராக விளங்கியதோடு, 1916-ல் பத்தமடையில் .சைவ சித்தாந்த சபையையும், கோவில்பட்டியில் 'பக்திவிளைக்கழகம்', 'திருவிடக்கழகம்', 'கல்விக்கழகம்', 'கலைக்கழகம், 'சிவகாமி திருவருட்கழகம்', 'கிருஷ்ணாபுரத்தில் சைவ முன்னேற்றக் கழகம், ஸ்ரீவில்லிப்புத்தூரில் 'தமிழ்ச்சங்கம்' என தாம் வாழ்ந்த ஊரிலெல்லாம் சங்கம் அமைத்து தமிழ்ச் சேவையும், பொதுச் சேவையும் செய்தவர். 1834-ல் திருநெல்வேலியைத் தலைமையிடமாகக் கொண்ட சென்னை மாகாணத் தமிழ்ச்சங்கத்தைத் தோற்றுவித்து அதன் அமைச்சராக (பொதுச் செயலாளர்) இருந்தார்.

கோவில்பட்டி, நான்குனேரி, கடையநல்லூர், சங்கரன்கோயில் ஆகிய இடங்களில் பள்ளிகளில் தமிழ் ஆசிரியராகப் பணி புரிந்தார். கடையநல்லூரில் பணிபுரிந்தபோது கலைச்சொல்லாக்கப் பணியில் ஈடுபட்டார். சங்கரன்கோவிலில் பணிபுரிந்தபோதுதான் 'சென்னை மாகாணத் தமிழ்சங்கம்' உருவாகக் காரணமாக இருந்தார். தமிழில் சிறந்த கலைச்சொற்களை உருவாக்கி அளிப்பவர்களுக்குப் பரிசுகள் வழங்கிக் கலைச் சொற்கள் உருவாக வழிவகுத்தார். இதில் கலந்துகொண்டு தேவநேயப் பாவாணர் பரிசுகள் பெற்றிருக்கிறார். பல அறிஞர்களின் கருத்தைத் திரட்டும் வகையில் தமிழ்க்கலைச்சொல்லாக்கமாநாடு ஒன்றை 1933-ல் இ.மு.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சுப்பிரமணியபிள்ளை நடத்தினார். அந்த ஆண்டில் அரசாங்கம் அமைத்த குழுவினால் உருவாக்கப்பட்ட தமிழ்க்கலைச் சொற்கள் பெரும்பாலும் வடமொழிச் சொற்களாகவும், எளிதில் விளங்கிக் கொள்ள முடியாததாகவும் இருந்தன. இதை மாற்றி அமைக்கச் சென்னை மாகாணத் தமிழ்ச்சங்கம் மூலம் ஒரு வல்லுநர் குழுவை அமைத்தார். இச்சங்கத்தின் வேண்டுகோளை ஏற்று சென்னை நிலவியல் கழகம் தீவிரமாக ஆராய்ந்து அதிக வடமொழிக் கலப்பில்லாத கலைச்சொற்களை உருவாக்கி அளித்தது. சென்னை மற்றும் திருவிதாங்கூர் பல்கலைக்கழகங்கள் அளித்த பொருள் உதவியுடன் இதைக் 'கலைச்சொற்கள்' என்ற புத்தகமாக வெளியிட்டார். கலைச் சொற்கள் ஆட்சி சொல்லகராதி, ஆசிரியர் கல்லூரி கலைச்சொல்லகராதி ஆகியவற்றைச் சென்னை மாகாணத் தமிழ்ச்சங்கம் மூலம் வெளியிட்டார். இது வெளிவந்திருக்காவிட்டால் தமிழ் பயிற்று மொழியாக இருந்திருக்காது. 1953-ல் தமிழில் ஆட்சி நடைபெற அனைத்துக் கட்சி மாநாடுகளைக் கூட்டினார். இது சென்னை, நெல்லை, தஞ்சை ஆகிய நகரங்களில் நடந்தது. நெல்லையில் நடந்த ஆட்சி மொழி மாநாட்டுக்குத் தலைமை வகித்தவர் சர்.பி.டி. ராஜன். 1956-ல்தான் ஆட்சிச் சொல் அகராதி அரசிடம் ஒப்படைக்கப்பட்டது.

பள்ளி மாணவர்களுக்காகப் பாட நூல்களையும் 'இளைஞர் இலக்கண விளக்கம்', 'இளைஞர் தமிழ் இலக்கணம்', 'பைந்தமிழ் வாசகம்', 'உலக நீதிக் கதைகள்',

www.tamilarangam.net



'ஆத்திச்சூடி கதைகள்' ஆகியவற்றை எழுதினார். இது தவிர ஏராளமான நூல்களை எழுதியுள்ளார். அவற்றின் எண்ணிக்கை சுமார் அறுபத்து மூன்று! அவற்றுள் 'திருவள்ளுவர் இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்' என்ற தலைப்பில் இக்கதைத் தமிழ்ப் புலவர்களின் வரலாறுபற்றிய ஆய்வு நூல் எட்டுத் தொகுதிகளாக வெளி வந்தது. பழந்தமிழ் இலக்கியங்கள் சிலவற்றிற்கு உரையும் எழுதினார். தமிழ் திருமணத்தை எவ்வாறு நடத்த வேண்டும் என்பதைப்பற்றித் 'திருமணம்' என்னும் நூலையும் எழுதியுள்ளார்.

இவருக்கு வானத்தில் உள்ள கோள்களைப் பற்றி ஆராயும் வான் கணிதக் கலையில் அபூர்வமான அறிவு இருந்தது. அதைப்பயன்படுத்தி .ஒளி நூல். என்னும் புகழ் பெற்ற வான் கணித நூலை வெளியிட்டார். வான் கணிதக் கலையை உலகுக்கு முதலில் உணர்த்தியவர்கள் தமிழர்களே என்றும், கணிதம், மருத்துவம் ஆகிய எல்லாக் கலைகளுக்கும் பிறப்பிடம் தமிழகமே என்றும் கூறியுள்ளார். சிதம்பரத்தில் 1924-ல் நடந்த கீழ்த்திசை மாநாட்டில் கலந்துகொண்டு 'இக்கால நிர்ணயம்' என்பது பற்றிய ஆராய்ச்சியைச் சமர்ப்பித்தார். அதில் வரலாற்று காலங்களைத் தனது வான் கணித ஆராய்ச்சி மூலம் தெளிவுபடுத்தினார். கடைச்சங்கம், சிலப்பதிகாரம் முதலியவை நிகழ்ந்த காலத்தையும் இவர் வரையறுத்தார்.

இதுதவிர, பஞ்சாங்கங்கள் பிராமணர்களின் ஆதிக்கத்தில் பரம்பரை பரம்பரையாக இருப்பதை

www.tamilarangam.net



மாற்றுவதற்காக சைவ பஞ்சாங்கத்தை (தமிழ் பஞ்சாங்கத்தை) முதல் முதலாக வெளியிட்டார். 1918 முதல் 1923-ம் ஆண்டு வரை சொந்தமாகவும், 1924 முதல் 1975 வரை ''சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகத்தின் வாயிலாகவும் இப்பஞ்சாங்கத்தை வெளியிட்டார். 'மாடசாமி' என்பவருக்கு பஞ்சாங்கத்தை கற்றுத்தந்து 'மாடசாமி பஞ்சாங்கம்' வெளிவரக் காரணமானார். இதன்மூலம் எல்லாச் சாதியினருக்கும் பஞ்சாங்கத்தை பொதுவாக்கியவர் சுப்பிரமணியப்பிள்ளை.

தமிழகப்புலவர் குழுவில் ஆரம்ப காலமுதலே உறுப்பினராக இருந்த இ.மு.சு. பிள்ளை அவர்கள் சிவஞானயோகி என்பவரிடம் சித்த மருத்துவம் பயின்று சிறந்த சித்த மருத்துவராகவும், பல ஆண்டுகள் சித்தமருத்துவ சங்கத்தலைவராகவும் இருந்து திருக்கோயில்கள் சார்பாக சித்த வைத்தியசாலைகள் அமைக்கவும் வழி வகை செய்தார். இ.மு.சு. பிள்ளை அவர்கள் நூற்றுக்கணக்கான கோயில்களுக்குத் தனி வரலாறுகளையும் ஆய்வு நூல்களையும் எழுதியுள்ளார். தெய்வபக்தி மிக்கவரான இவர் சீர்திருத்தக் கருத்துள்ளவர். புரோகிதர் இல்லாத தமிழ்த் திருமணங்களை நூற்றுக்கணக்கில் நடத்தி வைத்தார். இவர் 'இந்தியன்' என்ற இதழில் எழுதிய ராமாயணம் பற்றிய கட்டுரைகளைப் படித்த பெரியார் ஈ.வெ.ரா அவர்கள் 1927-ல் இவரைச் சந்தித்து குடியரசுப் பத்திரிகையில் ராமாயணம், மகாபாரதம் பற்றி எழுத வேண்டினார். சுயமரியாதை இயக்கத்தில் கடவுளைக்

www.tamilarangam.net



கும்பிடுபவராக இருந்து கொண்டே சந்திரசேகர பாவலர் என்ற பெயரில் 23-12-1927 முதல் 9-11-30 வரை எண்பத்தேழு வாரங்கள் வரை இதிகாசக் கதைகளை விமர்சித்து மூட நம்பிக்கையுள்ளவர்களின் முகத்திரையைக் கிழிக்கும் வகையில் எழுதினார். இந்தச் செயலுக்குப் பெரியார் இவரைத் தேர்ந்தெடுக்க, இவர் பாமரர்களுக்கும் புரியும்படி எழுதிய எளிய நடையே காரணம். குடியரசு தவிர, விவேகபோதினி, இந்தியன், செந்தமிழ்ச்செல்வி, தமிழ்ப் பொழில், குமரன் ஆகிய இதழ்களில் எழுதினார். 'தமிழ்த்தாய்' என்னும் முத்திங்கள் ஏட்டினுக்கு ஆசிரியராகவும் இருந்துள்ளார்.

நாற்பதாண்டுகள் தமிழாசிரியராகப் பணியாற்றிய இவருக்குக் கிடைத்த ஓய்வூதியம் வெறும் நாற்பது ரூபாய். சாதாரணப் பள்ளிகளில் தமிழாசிரியராக பணிபுரிந்த இவர் சிறந்த ஆராய்ச்சியாளர், வரலாற்று ஆசிரியர், உரைநடை நூலாசிரியர், பத்திரிகையாளர், சித்த மருத்துவர், கலைச்சொல்லாக்க வல்லுநர், சோதிடம் கணிப்பவர், கட்டுரையாளர் எனப் பல துறைகளிலும் சிறந்து விளங்கினார். இவருடைய முயற்சியால்தான் பள்ளிகளில் தமிழ் பயிற்று மொழியானது. இ.மு. சுப்பிரமணியப் பிள்ளையவர்கள் தமிழ் வளர்ச்சிக்காகவே வாழ்ந்தவர். கலைச் சொல்லாக்கப் பணிகளின் முன்னோடியான இவர் 24-3-1975-ல் சங்கரன்கோயில் என்ற இடத்தில் காலமானார்.

www.tamilarangam.net

13

# மோசூர் கந்தசாமிமுதலியார்

(அண்ணாவின் ஆசிரியர்)

(19-1-1887)

வடஆற்காடு மாவட்டத்தில் அரக்கோணத்திற்கு அருகில் மோசூர் என்னும் ஊர் இருக்கிறது. முற்காலத்தில் இவ்வூரில்தான் ஏராளமான புலவர்கள் வாழ்ந்தனர். இடைக்காலத்திலும் தமிழறிஞர்கள் வாழ்ந்தனர். இப்போதும் இவ்வூரில் நாடகக் கலைஞர்களும், தமிழ் ஆர்வலர்களும் வாழ்ந்து வருகின்றார்கள். மோசை என்பதற்கு இலவம், முருங்கை, வாழை, அவுரி என்று பல பொருள்கள் உண்டு. இவ்வூர் அவற்றுள் ஏதோ ஒன்றின் பெயர் காரணமாக மோசை என்று வழங்கி வருகிறது. மோசிக்கீரனார் என்னும் சங்கப் புலவர் இவ்வூர்க்காரர் என்கிறார்கள். இவ்வூரில்தான் கந்தசாமி அவர்கள் பிறந்தார்.

இவருடைய தந்தையார் பொன்னம்பலம். தாயார் உண்ணாமுலை அம்மையார். இவர் 19-1-1887-ல் பிறந்தார். ஆரம்பக் காலத்தில் அரசாங்கக் கணக்குத் துறையில் பணிபுரிந்தார். பின்பு அவ்வேலையை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



விட்டுவிட்டு சென்னை, பச்சையப்பன் கல்லூரியில் ஆசிரியராகப் பொறுப்பேற்றார்.

ராமலிங்க வள்ளலாரிடம் பெரும் ஈடுபாடு கொண்ட இவர், 1570 பக்கங்களில் திருவருட்பா 1924-ல் வெளிவர உதவிபுரிந்துள்ளார். அந்த நாளில் அப்புத்தகத்தின் விலை ஐந்து ரூபாய். திருவொற்றியூரில் ராமலிங்கர் மடத்தை நிறுவியவர்களில் இவரும் ஒருவர்.

1921 முதல் 1945 வரை பச்சையப்பன் கல்லூரியில் பேராசிரியராகவும், கல்லூரிக் கழகத்து (கவுன்சில்) உறுப்பினராகவும், 1931 முதல் 1945 வரை சென்னை அரசின் உயர்நிலைப்பள்ளி கல்வி இறுதி வகுப்பின் (எஸ்.எஸ்.எல்.சி) பாடப் புத்தகம் இயற்றுபவராகவும் 1935, 1939, 1940 ஆண்டுகளில் சென்னை அரசு பணித்துறை தேர்வாணைக்குழு (சர்வீஸ் கமிஷன் எக்சாமினேஷன்) சோதனையாளராகவும் இவர் பணியாற்றினார்.

அக்காலத்தில் ஐ.சி.எஸ். உயர் தேர்வுக்கான மொழித் தேர்வுத் தாள்கள் திருத்தி, மதிப்பெண்கள் வழங்குவதற்காக டெல்லியிலிருந்து இவருக்கு நேரே அனுப்பப்பெற்றன. இந்தத் தேர்வாளராகச் செயல் படுவதற்காக ஆசிய அரசுக்கழகத்தில் உறுப்பினராக இருந்தார். இதுதவிர பல பொறுப்புகளை வகித்த கந்தசாமி முதலியாரின் மாணவர்களில் பேரறிஞர் அண்ணா அவர்களும் ஒருவர். அண்ணாவின் பல மேடைப்பேச்சுக்களுக்குக் கந்தசாமி முதலியார் அவர்கள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தலைமை தாங்குவார்கள். அவர்தான் தனக்குத் தமிழ் உணர்வை ஊட்டியவர் என்று அண்ணா அவர்கள் நன்றி கூர்ந்திருக்கிறார்கள்.

தமிழ் வளத்திற்குப் பெருந்தொண்டுகள் செய்த கந்தசாமி முதலியார் ஓய்வுபெற்ற பிறகும்கூட ஆசிரியரை நியமித்து பாடம்கேட்டு வந்தார். இறுதியாக இவர் 29-8-1945-ல் காலமானார். இவர் நினைவாக இவரது குடும்பத்தாரால் நினைவுப் பள்ளி அமைக்கப் பட்டுள்ளது. இவரது நூற்றாண்டும் அரசால் 1987-ல் கொண்டாடப்பட்டது.

www.tamilarangam.net

**14**

# கா.சு. பிள்ளை

(5-11-1888)

தமிழர்களின் பெருமை குலையும் விதத்தில் நடந்துகொள்ளும் பலரால் நாம் தலை குனிய நேருகிறது. தமிழை வளர்த்துத் தமிழனின் புகழை உயர்த்திய சிலரால் தமிழகம் பெருமை கொள்கிறது. அத்தகையவர்களில் ஒருவர் கா.சு. பிள்ளை.

இவர் திருநெல்வேலியில் காந்திமதி நாதனார்-மீனாட்சி அம்மையார் தம்பதியினருக்கு 5-11-1888-ல் பிறந்தார். இவரது இயற்பெயர் கா. சுப்பிரமணியன் என்பது. இவரது தலையெழுத்தையும், பெயரின் முதலெழுத்தையும் சேர்த்து கா.சு. என்றே அழைத்தனர்.

நெல்லையில் சி.எம். கிழக்குக் கிளைப் பள்ளியிலும், சி.எம். கல்லூரியிலும் கல்வி பயின்று எம்.ஏ. தேர்வில் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றார். சென்னை மாநிலக் கல்லூரியில் பி.ஏ. வரலாற்றுப் பாடத்தில் மாநிலத்திலேயே முதல்மாணவராகத் தேறியதோடு 1913-ல் ஆங்கிலத்திலும், 1914-ல் தமிழிலும் முதல் வகுப்பில் தேர்வுபெற்று எம்.ஏ. பட்டம் பெற்றார். சட்டக்

www.tamilarangam.net



கல்லூரியில் சேர்ந்து பி.எல். பட்டமும், 1917-ல் எம்.எல் பட்டமும் பெற்றார். மதுரைத் தமிழ்ச்சங்கத் தேர்வில் தேர்ச்சி பெற்றிருந்தார். வக்கீல் தொழிலுக்குப் போகாமல் தமிழ்மீதுள்ள ஆர்வத்தால் ஆசிரியப் பணியைத் தேர்ந்தெடுத்தார்.

சென்னைச் சட்டக் கல்லூரியில் 1919 முதல் 1927 வரையில் பேராசிரியராகப் பணியாற்றிய கா.சு. அவர்கள், நோபல் பரிசுக் கவிஞர் தாகூர் அவர்களது கல்கத்தா பல்கலைக்கழகம் சட்ட நிபுணர்களுக்கிடையே நடத்திய போட்டியில் ‘குற்றங்களின் நெறி முறைகள்’ என்ற சிக்கலான பிரிவை ஆராய்ந்து கட்டுரை அனுப்பியதோடு அதை 12 சொற்பொழிவுகளாக விரித்துரைத்து பத்தாயிரம் ரூபாய் பரிசு பெற்றார்.

1930-ம் ஆண்டிலும், 1940 முதல் 1944 வரையிலும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றினார்.

கா.சு. பிள்ளை படிக்கிற காலத்திலேயே மாணவர்களைச் சீர்திருத்துவதை முக்கியப் பொறுப்பாகக் கருதினார். இதனால் மாணவப் பருவத்திலேயே பல சங்கங்களைத் தோற்றுவித்தார். நெல்லையில் ‘சைவ சித்தாந்த சங்கம்’ ஆரம்பித்தார். இச்சங்கத்தின் முக்கியப் பணி சொற்பொழிவுகள் செய்வது மட்டுமல்ல, ஒழுக்கத்தை கடைப்பிடித்தலும்கூட, இச்சங்கத்தினர் ஒத்த வயதினராக இருந்தாலும்கூட ஒருவரையொருவர் ‘அவர்கள், இவர்கள்’ என்று அழைக்க வேண்டும்

www.tamilarangam.net



என்பதும், காப்பி, தேனீர் போன்றவை அருந்தக்கூடாது, நாடகம் பார்க்கக்கூடாது என்பதும் இவர்கள் கொள்கைகளாக இருந்தன. சென்னையில் நண்பர்கள் சங்கத்தையும், மயிலாப்பூரில் 'திருவள்ளுவர் கழகம்' என ஒரு அமைப்பையும் தோற்றுவித்துத் தொண்டாற்றினார்.

1932 முதல் 1937 வரை திருநெல்வேலி நகராட்சி மன்ற உறுப்பினராகவும், நெல்லையப்பர் கோயிலின் அறங்காவலராகவும் இருந்து பல சீர்திருத்தங்களைச் செய்தார். இவரது காலத்தில்தான் அக்கோயிலின் தேவாரப்பாடசாலை, வேதாகமப் பாடசாலை ஆகியவை தோற்றுவிக்கப்பட்டன.

கா.சு. பிள்ளை 1928-ம் ஆண்டிலேயே திருக்குறளுக்கு அழகிய-சிந்திக்கத் தூண்டும் எளிய உரை எழுதினார். தமிழ் ஆங்கிலம் இரண்டிலும் ஐம்பதுக்கும்மேற்பட்ட நூல்களை எழுதியதோடு, 'மணிமாலை' என்ற மாத பத்திரிகையையும் நடத்திவந்தார். இந்தப் பத்திரிகையை ஒன்பது பகுதிகளாகப் பிரித்து ஒவ்வொரு துறைக்கும் ஒவ்வொரு கட்டுரை என இவரே எழுதி சிறப்புற நடத்தினார்.

1922-23ல் சென்னை அரசின் கலைச் சொல்லாக்கக் குழுவிலும், சென்னை மாகாண தமிழ்ச் சங்கத்தின் கலைச் சொல்லாக்கக் குழுவிலும் உறுப்பினராக இருந்து தமிழுக்குப் பெருந்தொண்டாற்றினார்.

தமிழ் மொழியில் பிற மொழி கலந்து பேசுவதை வன்மையாக எதிர்த்தவர் கா.சு. பிள்ளை. திருவள்ளுவரின் நூலில் ஐம்பதுக்கு மேற்பட்ட

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வடமொழிச் சொற்கள் இல்லை என்றும், அவையும் தமிழ்ச் சொற்களாக இருந்து வடமொழிக்குச் சென்றிருக்கலாம் என்றும் இவர் கூறியுள்ளார்.

சமூகத்தில் ஆண், பெண் சமம் என்றும், இந்தக் காலத்தில் ஏற்பட்டுள்ள அடிமை வழக்கங்களை அகற்ற வேண்டும் என்றும், கைம்பெண்கள் மறுமணத்தைச் சட்டத்தின் மூலம் நிறைவேற்ற வேண்டும் என்றும், கலப்பு மணம் செய்யும் முறை சங்ககாலம் முதற்கொண்டே இருந்து வருவதால், இதனை ஆதரிக்க வேண்டும் என்றும், தொழிற் கல்வியளித்தல், வேலை இல்லாதோர்க்கு உதவி செய்தல் போன்றவற்றை அதற்கான தகுதியுடையோர் செய்ய வேண்டும் என்றும் இவர் அந்தக் காலத்திலேயே வலியுறுத்திக் கூறினார்.

'பல இனங்களும் உணர்வாலும், மனத்தாலும் இணைக்கப்படின் தமிழர் என்ற உணர்ச்சி தலையெடுத்து வெவ்வேறு குலமக்கள் குலப்பெருமைப் பாராட்டும் வழக்கம் தளர்வடையும். நடை-உடை-பாவனைகளிலும் ஒரே தன்மையான முறை பல இனத்தாருள்ளும் ஏற்படுமாயின் இன வேற்றுமை உணர்ச்சி விரைவில் ஒழிந்து போகும்' என்று கூறிய வித்தியாசமான சிந்தனையாளர் இவர்.

உலகிலேயே மிகச்சிறந்த மொழி தமிழ் மொழியேயன்றி வேறு எதுவுமில்லை என்று இவர் தெளிவுப்படுத்தியிருக்கிறார். தற்காலத்தில் மாணவர்கள் தங்கள் கருத்துக்களைத் தாய் மொழியில் வெளிப் படுத்துவதற்குக்கூட இயலாதவர்களாக இருக்கிறார்கள்.

www.tamilarangam.net



பழைய கல்விமுறை புதுப்பிக்கப்படுமானால் நமது புகழ்வாய்ந்த தமிழ் மொழியால் சாதிக்க முடியாதது எதுவுமே இல்லை எனத் துணிந்து சொல்லலாம். இவ்வுண்மையை உலக மக்கள் உணருமாறு செய்தால் நம் தமிழ்மொழி உலக மொழியாக ஒளிவிடும். ஏனெனில் உலக மொழிகளுக்கெல்லாம் மூத்த-உயர்ந்த-தனித்துவம் வாய்ந்த மொழியாக நம் தமிழ்மொழியே விளங்குகிறது என்று விளக்கிச் சொன்னவர் இவர்.

இவரது கருத்துக்களை ஆங்கிலப் பள்ளிகளை அதிகம் திறப்பவர்களும், அவர்களுக்கு அனுமதி அளிக்கும் அரசும்தான் கவனத்தில் கொள்ள வேண்டும்.

கா.சு. பிள்ளையவர்கள் தமிழுக்காகவும், தம்மை நாடிவரும் பிறருக்காகவும் வாழ்ந்தவர். அதனால் இவரால் சொத்து சேர்க்க முடியவில்லை. இவருக்கு பண்டித மணி கதிரேசன் செட்டியார். சர். பி.டி. தியாகராாசர், அண்ணாமலை அரசர் போன்ற பலர் அவ்வப்போது உதவி செய்துவந்தார்கள்.

வறுமை வயப்பட்டும், உடல் நலிவுற்றும் 30-4-1945-ல் கா.சு. பிள்ளையவர்கள் காலமானார். தமிழ் இலக்கிய வரலாற்றாளரான அவருக்கு தமிழக அரசு நினைவுக்கல் எழுப்பியும், நூற்றாண்டுவிழாவினைக் கொண்டாடியும் மரியாதை செய்தது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**15**

# வா. ராமசாமி

(17–9–1889)

அக்கிரகாரத்து அதிசய மனிதர் என்று பேரறிஞர் அண்ணாவால் போற்றப்பட்டவர் 'வ.ரா' எனப்படும் வ.ராமசாமி அவர்கள். இவர் தஞ்சாவூர் மாவட்டத்தில் திங்களூர் என்னும் சிறிய ஊரில் வரதராஜன் பொன்னம்மாள் தம்பதியருக்கு முதல் மகனாக 17-9-1889-ல் பிறந்தார். இவருடன் பிறந்தவர்கள் ஏழுபேர்.

முதலில் திண்ணைப்பள்ளிக் கூடத்தில் படித்த பிறகு திருவையாறில் உள்ள சென்ட்ரல் உயர்நிலைப்பள்ளியில் படித்து 1905-ல் மெட்ரிகுலேசன் தேர்வில் வெற்றி பெற்றார். தஞ்சாவூர் புனித பீட்டர் கல்லூரியில் 'எம்.ஏ' என்ற பட்டப்படிப்பில் தோல்வியுற்றதால், கல்கத்தா சென்று சுரேந்திரநாத் பானர்ஜி நடத்திய தேசிய கல்லூரியில் சேர விரும்பினார். ஆனால் சரியான பரிந்துரை இல்லாததால், அக்கல்லூரியில் சேர இயலாமல் போய்விட்டது. கல்லூரியில் படிக்கும் காலத்திலேயே 'வந்தே மாதரம்' என்று முழக்கமிட்டதற்காக, கல்லூரி முதல்வரால் தண்டிக்கப்பட்டார் வ.ரா. அவர்கள்.

www.tamilarangam.net



சிறு வயதிலேயே அவருக்குப் பழைய நடைமுறை, மற்றும் பழக்க வழக்கங்களை அறவே பிடிக்காது. புதுமையானவைப் பற்றியே எப்பொழுதும் சிந்தித்துக் கொண்டிருப்பார். ஒரு சமயம் பிராமணர் அல்லாத தாழ்ந்த குலத்தவர்கள் என்று கருதப்பட்டவர்கள் ஒரு பிணத்தைச் சுமந்துகொண்டு பிராமணத் தெரு வழியே வந்ததை எதிர்த்து பிராமணர்கள் கூச்சல் போட்டார்கள். சொந்த இன மக்களை எதிர்த்துப் பேசி அவர்கள் செய்வது சரியல்ல என்று கூறியதால் வ.ரா. சாதி நீக்கம் செய்யப்பட்டார்.

1910-ம் ஆண்டிலேயே காங்கிரஸ் இயக்கத்தில் ஈடுபட்டு அலகாபாத்தில் நடந்த காங்கிரஸ் மாநாட்டில் கலந்து கொண்டார். அரவிந்தர் பாண்டிச்சேரியில் தங்கியிருந்தபோது அவருக்கும், அவரைப் போன்ற தேசபக்தர்களுக்கும் வ.ரா. மூலமாகத்தான் உதவிகள் எடுத்துச் செல்லப்பட்டன.

தனது 22-ம் வயதில் (1911-ஜூன் மாதம்) பாண்டிச்சேரியில் மகாகவி பாரதியாரைச் சந்தித்து அவரோடு 1914-வரை தங்கியிருந்தார். அதன் பிறகே மிகப்பெரிய சமூக சீர்திருத்த சிந்தனையாளராக மாறினார். தாய் மொழியின் சிறப்பு, தேசபக்தி, சமூக விடுதலை, பெண் விடுதலை போன்றவற்றில் தீவிரமாக ஈடுபட ஆரம்பித்தார். பாரதியாருடன் இருந்ததினாலேயே அவரது அனைத்துப் படைப்புகளிலும் மனித நேயம் மிளிர்ந்தது. சமூகச் சீர்திருத்தம், நாட்டு விடுதலை, தமிழ்

www.tamilarangam.net



மொழியின் மேன்மை, தமிழனின் உயர்வு, விடுதலை பெற்ற பிறகு மலரப்போகும் புதுவாழ்க்கைக்குரிய மேம்பாட்டுத் திட்டங்கள், பெண் விடுதலை ஆகியவை இலக்கியத்தின் உள்ளடக்கமாக அமைய வேண்டுமென்று வலியுறுத்தினார். குழந்தைத் திருமணம், விதவைகளுக்கு மறுவாழ்வளிப்பதை மறுத்தல் ஆகியவற்றை எதிர்த்து எழுதினார்.

'விதவை' என்ற சொல் நம் மொழியில் வழக்கில் இருப்பதைக்கூட எதிர்த்தவர் வ.ரா. அவர்கள்தான். இதெல்லாம் பாரதியாரைக் கண்ட பிறகே தமக்கு ஏற்பட்டவை என்பதால் அவரையே தமது தாய், தந்தை, ஆசிரியர், இறைவன் ஆகிய எல்லாமாகக் கருதினார். 1919-ல் காந்தியடிகளை, பாரதியார் சந்தித்தது பற்றியும், பாரதியாருக்கு உரிய மரியாதையை அப்போது ராஜாஜி அளிக்கவில்லை என்பதனையும் முதன் முதலாக எடுத்துச் சொன்ன வ.ரா. அவர்கள், பிற்காலத்தில் பாரதியாரை 'மகாகவி' என்றும், 'உலககவி' என்றும் தன் வாதத் திறமையால் உலகினர் ஏற்கும்படி செய்தார். பாரதியார் 'நிஜம்', வ.ரா பாரதியின் 'நிழல்' என்று சொல்லுமளவிற்குப் பாரதியார் மீது மரியாதை செலுத்தியவர் வ.ரா. அவர்கள்.

வேதாரண்ணியத்தில் ராஜாஜியின் தலைமையில் நடைபெற்ற உப்புச் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் கலந்து கொண்டு அலிப்பூர் சிறையில் ஆறுமாதம் தண்டனை அனுபவித்தார். அதன் பிறகே தீவிரவாத

www.tamilarangam.net



அரசியலில் இருந்து மிதவாத அரசியலுக்கு வந்தார். 1920-ல் பூனாவில் ராணுவக் கணக்கு அலுவலகத்தில் சிலமாத காலம் பணி புரிந்ததோடு, 1929-ல் மானாமதுரையில் ரயில் பாதை அமைக்கும் பணியையும் ஒப்பந்த அடிப்படையில் செய்திருக்கிறார்.

வ. ரா. மிகச்சிறந்த எழுத்தாளர் மட்டுமன்று, மிகப்பெரிய பத்திரிகையாளரும் கூட. சிறையிலிருக்கும் போதே 'வாட். இஸ் பொயட்ரி' என்ற நூலை எழுதினார். நான்கு நாவல்கள், ஏராளமான கட்டுரைகள், வரலாற்று நூல்கள் அரசியல் நூல்கள், மொழி பெயர்ப்பு நூல்கள், வாழ்க்கை வரலாறுகள் போன்றவற்றை எழுதியுள்ளார். 'உரை நடைக்கு வ.ரா'. என்று பாரதியார் இவரைப் பாராட்டியுள்ளார். வ.ரா. அவர்கள் 'நடைச்சித்திரம்' என்ற புதிய இலக்கிய வகையை, மணிக்கொடி பத்திரிகை மூலம் தமிழுக்கு அளித்திருக்கிறார். மணிக்கொடியை தொடங்கியவர்களில் வ.ரா.வும் ஒருவர்.

இளம் எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் பண்பு இயற்கையிலேயே அமையப் பெற்றிருந்த வ.ரா. அவர்கள் தான் புதுமைபித்தனின் படைப்பாற்றலைத் தூண்டி வளர்த்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. மறுமலர்ச்சி எழுத்தாளர்களின் முன்னோடி என்று இவரைப் புகழ்கிறார்கள். வ.ரா. அவர்கள் பாமரர்களும் எளிதில் விளங்கிக் கொள்ளும்படி எளிய நடையில் எழுதுவார். 'சுதந்திரன்' என்னும் சொந்த இதழை நடத்தி அதில் கல்கியின் முதல் நாவலான 'விமலா'வை வெளியிட்டார்.

www.tamilarangam.net



'தமிழ்நாடு', 'சமரச போதினி' 'தமிழ் சுயராஜ்யா', 'ஊழியன்', 'மணிக்கொடி', இலங்கையில் இருந்து வெளிவரும் வீரகேசரி மற்றும் தமிழகத்தில் 'பாரததேவி', 'நவயுகம்' போன்ற பத்திரிகைகளிலும் பணிபுரிந்துள்ளார்.

தனது நாற்பத்தேழாவது வயதில் 1936-ல் இலங்கையில் வீரகேசரி இதழில் பணிபுரிந்து கொண்டிருந்தபோது, புவனேஸ்வரி என்ற பஞ்சாபி பெண்ணைக் கலப்புத் திருமணம் செய்து கொண்டார். பிறரைப் போல் சொல் வேறு, செயல் வேறாக இல்லாமல் தான் சொல்வதைத் தானே கடைப்பிடிக்கும் குணம்கொண்ட வ.ரா. சாதியின் அடையாளச் சின்னமாகிய பூணூலை அறுத்தெறிந்தார். பழைய சம்பிரதாயங்களைக் குழிதோண்டிப் புதைத்துவிட்டு, முற்போக்கான சிந்தனையுடன் மனித நேயத்தைப் போற்றினார். இதனால்தான் அறிஞர் அண்ணா அவர்கள் வ.ரா.வை 'அக்கிரகாரத்து அதிசய மனிதர்' என்று போற்றினார். காங்கிரஸ் பேரியக்கமும், திராவிட இயக்கங்களும் ஒருசேர வ.ரா.வை மதித்துப் போற்றினரே ஒழிய, ஒரு போதும் அவரை உதாசினப்படுத்தியதில்லை.

பெண்ணுக்குச் சொத்தில் உரிமையும், சமபங்கும் உண்டு என்பதை 1928-ல் இவர் எழுதிய 'மாயா மேயோ' என்னும் நூலில் குறிப்பிட்டிருந்தார். அது எல்லா அரசியல்வாதிகளாலும் போற்றப்பட்டு அக்கருத்தே அரசியலிலும் வலியுறுத்தப்பட்டது.

www.tamilarangam.net



1946-ல் 'சிறை சென்று மீண்டோர்' சங்கத்தில் சேர்ந்த வ.ரா. அவர்கள், 11-3-1948-ல் 'பாரதி, விடுதலைக் கழகம்' என்ற அமைப்பை உருவாக்கி அதன் தலைவரானார். பாரதியாரின் பாடல்களை நாட்டுடைமையாக்க வேண்டும் என்பதே இந்த அமைப்பின் நோக்கம். அதே வருடத்தில், அக்டோபர் மாதத்தில் பெருந்தலைவர் காமராசர், தன் தலைமையில் வ.ரா.வுக்கு மணிவிழா கொண்டாடியதோடு, ஒரு பெருந்தொகையை அன்பளிப்பாகவும் வழங்கினார். அதைக் கொண்டு ஒரு வீடு வாங்கி அதில் குடியேறினார் வ.ரா. அதற்கு முன்பிருந்தே வ.ரா. வறுமையாலும், ஆஸ்துமா நோயாலும் துன்பப்பட்டுக் கொண்டிருந்தார். இந்த நிலையில் 1949 அக்டோபர் பத்தாம் நாள் ஒரு சாலை விபத்தில் சிக்கினார். இதில் அவரது இடுப்பெலும்பு முறிந்தது. நடக்க இயலாத நிலையிலும் தொடர்ந்து மக்களுக்காக எழுதுவதையே நோக்கமாகக் கொண்டு எழுதி வந்த வ.ரா. என்னும் வ. ராமசாமி அவர்கள் 29-8-1951-ம் நாள், பகல் உணவை முடித்துவிட்டு வழக்கம்போல் உறங்கச் சென்றார். உறங்கியவர் அதன் பிறகு எழாமல் நிரந்தரமாகவே உறங்கிப்போனார். ஆனால் அவருடைய முயற்சியினாலும், தொண்டாலும் தமிழும், மக்களும் அவர்களில் உள்ள சான்றோர்களும் விழித்துக் கொண்டார்கள். தமிழ் இலக்கியத்தில் பெரியதொரு மறுமலர்ச்சியை ஏற்படுத்திய வ.ரா. வை நன்றியோடு என்றென்றும் நினைவுகூர்ந்து வருகிறார்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**16**

# தமிழவேள் பி.டி. ராசன்

(12-4-1892)

தமிழவேள் பி.டி.ராசன் அவர்களைத் தெரியாதவர்கள் வெகு சிலராகத்தான் இருக்க முடியும். அவர் தமிழுக்கும், தமிழ் நாட்டுக்கும் செய்துள்ள சேவைகள் மிகப்பெரியவை. அவருடைய மகன்தான் இன்றைய சட்டப்பேரவைத் தலைவரான பி.டி.ஆர். பழனிவேல் ராஜன் அவர்கள்.

பி.டி. ராஜன் அவர்கள் மதுரையில் 12-4-1892-ம் ஆண்டு பிறந்தவர். பெற்றோர் பொன்னம்பலம்-மீனாட்சி அம்மாள். இயற்பெயர் தியாகராஜன். தனது ஏழாம் வயதில் தாயையும் பனிரெண்டாம் வயதில் தந்தையாரையும் இழந்துவிட்டு, சிறிய தந்தையாரின் பாதுகாப்பில் வாழ்ந்தார். உத்தமபாளையத்தில் ஆரம்பக் கல்வி பயின்று, பின் படிப்பதற்காக இங்கிலாந்து சென்றார். 1912-ம் ஆண்டில் பார்-அட்-லா சட்டப் படிப்பையும், 1914-ல் சுவிட்சர்லாந்து சென்று பிரெஞ்சு மொழியையும், இவ்வை தவிர பி.ஏ. படிப்பையும் படித்துவிட்டு, 1919-ம் ஆண்டு தாயகம் வந்த

www.tamilarangam.net



பி.டி.ராஜன் அவர்கள், தமிழகத்தில் வக்கீல் தொழில் செய்யப் பதிவு செய்து கொண்டார்.

'சவுத் இந்தியன் லிபரல் பெடரேசன்' என்ற பெயரில் ஜஸ்டிஸ் கட்சி இயங்கி வந்தது. இதுதான் பிற்காலத்தில் நீதிக்கட்சியானது. இந்தக் கட்சியில் 1920 ஆண்டு சேர்ந்து அதே ஆண்டில் நடந்த சட்டமன்றத் தேர்தலில் ஜஸ்டிஸ் கட்சியின் சார்பில் போட்டியிட்டார்.

1920 முதல் 1937 வரை தொடர்ந்து சட்டமன்றத்துக்கு அதிக வாக்குகள் வித்தியாசத்தில் மூன்றுமுறை தேர்வு செய்யப்பட்டதோடு, நான்காவது முறை போட்டி யின்றியும் தேர்வு பெற்றவர் அவர். நீதிக்கட்சியில் சர். பிட்டி தியாகராஜர் தலைவராக இருந்தபோது கட்சியின் கொறடாவாகப் பொறுப்பேற்று கட்சியை வளர்த்தார். 1930-ம் ஆண்டில் பி.முனுசாமி நாயுடு சென்னை மாகாணத்தின் முதல் அமைச்சராகப் பதவி ஏற்ற போது இரண்டாவது அமைச்சராக இருந்தவர் பி.டி. ராஜன். பொப்பிலி அரசர் முதலமைச்சராக இருந்தபோது, உவர் மந்திரி சபையில் அமைச்சராக இருந்தார். அமைச்சராகப் பணியாற்றிய காலங்களில் தாம் பெற்றுவந்த சம்பளத்தை அப்படியே கட்சிப் பணிக்குக் கொடுத்துவிடுவார். நீதிக்கட்சியின் ஆட்சியின்போது தான் இரட்டை ஆட்சிமுறை சென்னையில் சிறப்பாக நடந்தது. அவையில் உறுப்பினர்கள் யாரும் தரக்குறைவாக நடந்ததில்லை. வெளிநடப்பு செய்ததில்லை, அமளியின் காரணமாகச் சபை ஒத்தி வைக்கப்பட்டதும், எந்த

www.tamilarangam.net



உறுப்பினரும் தகாத வார்த்தை பேசவோ, கூடாத செயல் புரியவோ இல்லை.

17-2-1929-ல் செங்கல்பட்டில் நடந்த சுயமரியாதை மாநாட்டில் முதன்முதலாகக் கொடியேற்றி, சொற்பொழி வாற்றினார். பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களின் வளர்ச்சியில் அதிக அக்கறை கொண்டிருந்தார். அமைச்சராகப் பொறுப்பு வகித்தபோது, கல்வி, மருத்துவம், இருப்பிடம் போன்று எல்லாவிதத்திலும் தாழ்த்தப்பட்டவர்களுக்கும்,பிற்படுத்தப்பட்டவர்களுக்கும் உதவி செய்தார். 29-6-1931-ல் சேலம் சுயமரியாதைச் சங்கக் கட்டடத்தையும் திறந்து வைத்து மக்களிடையே மறுமலர்ச்சி ஏற்படுத்தியவர் அவர். உழவு, கூட்டுறவு, பதிவு பொதுப்பணி, கால்நடை ஆகிய துறைகளின் அமைச்சராகவும், தமிழகத்தில் கூட்டுறவுத் துறையை வளர்த்து, அது சிறக்கவும் காரணமாக இருந்தவர் பி.டி. ராஜன் அவர்கள்.

1939-ல் உலகப்போர் தொடங்கிய காலத்தில் சென்னை ஆளுநராக இருந்த சர். ஆர்தர் ஹோப் என்பவர், ராஜன் அவர்களை அழைத்து போர் உதவி இயக்கத்திற்கு தலைமைப் பொறுப்பை ஏற்கும்படி கேட்டுக்கொண்டார். அதை ஏற்று மதுரை மாவட்ட மக்கள் அளித்த நிதியைக் கொண்டு போர் விமானம் வாங்கித் தந்தார். போரில் பிரிட்டன் வெற்றி பெற்றது.

1937-ம் ஆண்டிலேயே 'சர்' என்ற பட்டத்தை ஆங்கில அரசு கொடுத்திருந்தது. போர்க்களத்தில் அவர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



செய்த சேவையைப் பாராட்டிய ஆங்கிலேயர்கள், சென்னை உயர்நீதிமன்ற பதவியை ஏற்றுக்கொள்ளும்படி வற்புறுத்தியும், அதை ஏற்க மறுத்துவிட்டார். ராஜாஜி முதலமைச்சராக பொறுப்பேற்ற போது ராஜன் அவர்களை .தனது மந்திரி சபையில் சேர்த்துக் கொள்ள விரும்பினார். ஆனால் அதை ராஜன் அவர்கள் ஏற்கவில்லை. 1944-ல் நீதிக்கட்சி 'திராவிடக் கழகம்' என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டு பெரியார், அண்ணா அனைவரும் அவ்வணியில் திரண்டபோதுகூட நீதிக்கட்சியைக் கலைக்காமல் அதன் தலைவராகப் பொறுப்பேற்று, தான் இறக்கும்வரை அதன் தலைவராகவே நீடித்தார்.

1946-ல் தமிழ்ச் சங்கத்தின் துணைத் தலைவராகவும், பின்னர் தலைவராகவும் பொறுப்பேற்றுத் தமிழ்ச் சங்கப் பொன்விழாவை சிறப்பாக நடத்திக் காட்டினார். அச் சங்கத்தில் முன்னாள் குடியரசு தலைவர்களான ராஜேந்திரபிரசாத், டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன், ஜாகீர் உசேன் ஆகியோர் காப்பாளர்களாக இருந்தார்கள்.

1953-ம் ஆண்டு கேரள மாநிலத்துடன் இணைக்கப் பட்டிருந்த தேவிகுளம், பீர்மேடு பகுதி எல்லை மீட்பு போராட்டத்திற்குத் தலைமை தாங்கிப் போராட்டம் நடத்தினார். மா.பொ. சிவஞானம், பேரறிஞர் அண்ணா ஆகியோர் இதில் கலந்து கொண்டவர்களுள் முக்கியமானவர்கள்.

இந்தியா விடுதலை பெற்ற பிறகு 1952-ல் முதல் பொதுத்தேர்தல் நடைபெற்றது. பி.டி. ராஜன் அவர்கள்

www.tamilarangam.net



கம்பம் தொகுதியில் நீதிக்கட்சியின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். முதல் சட்டமன்றக் கூட்டத்திற்கு தலைமைப் பொறுப்பேற்று அனைத்து உறுப்பினர் களுக்கும் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். 1957-ல் மேலவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பாகப் பணியாற்றினார். 1968-ல் நீதிக்கட்சியின் பொன் விழாவை சிறப்பாகக் கொண்டாடினார். விழா மலரை வெளியிட்டவர் அண்ணா அவர்கள். இந்நிகழ்ச்சியில் அண்ணா நிகழ்த்திய சொற்பொழிவே அவரது இறுதி அரசியல் சொற்பொழிவு.

பதவிக்காகவோ, புகழ், பணத்திற்காகவோ, கட்சிமாறிச் செல்வதும், லஞ்ச ஊழல்களைப் புரிவதுமாக இல்லாமல், பொது வாழ்வில் தூய்மை வேண்டும் என்பதைக் கொள்கையாகத் தனது வாழ்நாளின் இறுதி வரை கடைப்பிடித்து வந்தார். 1921 முதலே காஸ்மாபொலிடன் கிளப்பின் உறுப்பினராக இருந்து சாதி, மதம், குலம், கட்சி முதலிய அனைத்துக்கும் அப்பாற்பட்டு, அறிமுகம் இல்லாதவர்களுக்கும் உதவி செய்தவர் பி.டி. ராஜன் அவர்கள். நல்லது, நியாயமானது என்று தனக்குத் தோன்றும் அனைத்தையும் செய்வார்.

பி.டி. ராஜன் அவர்கள் செய்த தொண்டுகளிலேயே சிறப்பானது அவரது ஆலயப் பணிகள்தான். பழுதுபட்டும், சிதைந்தும் கிடந்த கோயில்களைப் புதுப்பித்தல், புதிய கோயில்களைக் கட்டுதல், அவற்றுக்குக் குடமுழுக்கு செய்தல் ஆகியவையே

www.tamilarangam.net



அவருடைய பொழுது போக்குகளாக இருந்தன. 1949-ல் சபரிமலை ஐயப்பன் கோயிலில் யாரோ தீ வைத்துவிட்டனர். மூலவிக்கிரகம் சேத முற்றது (களவுபோனது என்பர்). கேரள அரசின் ஆதரவும் எதிர்பார்த்த அளவுக்கு இல்லாததால், கேரளத்தினர் பி.டி.ராஜன் அவர்களை அணுகினர். புதிய சிலையை அமைத்து, அதை விமரிசையாக அய்யப்பன் கோயிலில் நிறுவினார்.

1966-ல் டெல்லியில் நடந்த இந்து சமய மாநாட்டில் கலந்து கொண்டார். அதே ஆண்டு கோலாலம்பூரில் நடந்த உலகத் தமிழ் மாநாட்டிலும் தமிழ்ச்சங்கப் பிரதிநிதியாகக் கலந்து கொண்டு, பல சொற்பொழிவுகளும், அங்குள்ள கோயில்களுக்குத் திருப்பணிகளும் செய்தார். பல கோயில்களின் திருப்பணிக் குழுவின் தலைவராக இருந்தார். சென்னையில் உள்ள வடபழனி முருகன் கோயில், மதுரை மீனாட்சி அம்மன்கோயில், பவானியில் சங்கமேஸ்வரர் கோயில், திருச்சியில் திருவானைக் கோயில், தென்காசியில் காசி விஸ்வநாத சாமிக் கோயில், திருவலங்காடு கோயில் போன்ற எண்ணற்ற கோயில்களின் திருப்பணிகளைப் பொறுப்பேற்று குடமுழுக்குகளை நடத்தியவர். மதுரை மீனாட்சி அம்மன் கோயில் பக்தர்கள் தமிழிலேயே வழிபாடு செய்ய வேண்டும் என்பதற்காக தனி வகுப்புகளையே ஆரம்பித்து நடத்தினார். இனம், சாதி போன்ற ஏற்றத்தாழ்வுகளின்றிப் பாமரனும் பகவானின் அருள் பெற்றவனாக வேண்டும் என விரும்பியவர் பி.டி. ராஜன்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நமது கல்விமுறை சீரழிந்துவிட்டது. நல்ல தலைவர்களைத் தயாரித்து நாட்டுக்கு வழங்க இக்கல்வி முறை பயனற்றது. எதற்கும் அரசாங்கத்தையே நம்பியிருக்கும் நிலையைத்தான் இப்போதைய கல்விமுறை உருவாக்கியுள்ளது. படித்துப் பட்டம் பெற்ற பின்னரும், பிழைப்பதற்குப் பிறர் கையை, அரசாங்கத்தின் ஆதரவை இளைஞர்கள் எதிர்பார்த்து ஏங்கிக்கிடக்கும் கல்விமுறையால் பயன் இல்லை என்றவர் அவர்.

1973-ம் ஆண்டு பி.டி.ராஜன் அவர்களின் 82-வது பிறந்தநாள் விழா, முதல்வர் மு. கருணாநிதி அவர்களின் தலைமையில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. பலதுறை முன்னோடிகள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

நாட்டுக்குப் பலவாறாக உழைத்த பி.டி. ராஜன் அவர்களை 'தமிழவேள்' என்று சிறப்புடன் மக்கள் அழைக்கிறார்கள். அவர் மறைந்த பிறகும் அவரது மகன் பி.டி.ஆர். பழனிவேல்ராஜன் அவர்கள் தனது தந்தையின் வழியில் நடந்து, சட்டமன்றத் தலைவராகவும் இருந்து சிறப்பாகப் பணிபுரிந்து வருகிறார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

17

# ரா.பி.சேதுபிள்ளை

(2-3-1896)

தமிழுக்காகவே வாழ்ந்த பல நல்லறிஞர்களை ஈன்றளித்த நெல்லை மாவட்ட மண்ணில் ராசவல்லிபுரம் என்னும் ஊரில் ரா.பி. சேதுப்பிள்ளை அவர்கள் 2-3-1896-ம் ஆண்டு பிறந்தார். பிறவிப் பெருமாள்பிள்ளை - சொர்ணத்தம்மாள் தம்பதியினரின் பதினோராவது பிள்ளையாகவும் உடன் பிறந்தவர்கள் அனைவருமே இளம் வயதிலேயே காலமாகிவிட்டதால் பெற்றோரின் ஒரே பிள்ளையாகவும், எஞ்சி நின்றவர். சேதுசமுத்திரத்தில் ஐந்தாண்டுகளாக புனித நீராடி, அதன் காரணமாகவே இவரைப் பெற்றோம் என்ற நம்பிக்கையிலேதான் இவருக்குப் பெற்றோர். 'சேது' எனப் பெயரிட்டனர்.

திண்ணைப் பள்ளியில் படித்த பின் பாளையங்கோட்டை சேவியர் பள்ளியில் சேர்ந்து பயின்று வந்தார். விளையாட்டு வேளையைத் தவிர எப்போதும் புத்தகமும் கையுமாக இருந்த சேது, நினைவாற்றலிலும், தமிழை உச்சரிக்கும் விதத்திலும் சிறந்து விளங்கினார்.

www.tamilarangam.net



'சிவஞானமாபாடியம்' என்னும் நூலிலிருந்து சில பக்கங்களை மனப்பாடமாக ஒப்புவித்து, செப்பறை அடிகளார் என்பவரின் பாராட்டையும் சுவைமிக்க தின்பண்டங்களையும் பெறுவது வழக்கம். இனிய பண்பும், கட்டுப்பாடும், ஒழுக்கமும் உடற்பயிற்சியும் சேதுவை அலங்கரித்தன. அவற்றுக்கு மேலாக அவரது தமிழறிவும், ஆர்வமும் உயர்ந்து நின்றன. வகுப்பில் தமிழில் பேசினால் ஒரு சொல்லுக்கு ஒரு காசு தண்டனை என்று ஓர் ஆசிரியர் கட்டளையிட்டிருந்தார். அதிகமாகத் தண்டனை செலுத்தியவர் சேதுப்பிள்ளை! ஏழாம் வகுப்பில் நல்லொழுக்கப் பரிசாக அவருக்குக் கிடைத்த திருக்குறள் நூலே உலகில் தலைசிறந்தது என அறிந்து, அதில் ஈடுபாடு உடையவராகவும், குறளின் எந்த ஒரு வார்த்தையைச் சொல்லி அந்த வார்த்தை வரும் குறளைக் கேட்டால் தயக்கமின்றி கூறும் ஆற்றலும் பெற்றிருந்தார். பாளையங்கோட்டை 'சைவசபை'யில் தொண்டர் படைத் தளபதியாக இருந்து புலவர்களுக்குப் பணிவிடை புரிந்தவர் சேது.

பத்தாம் வகுப்பு படிக்கும்போது அன்னையை இழந்த சேது, அதே ஆண்டில் தேர்வில் வெற்றி பெற்று நெல்லையில் உள்ள இந்துக் கல்லூரியில் சேர்ந்து அறிவாற்றலாலும், திறமையாலும், உபகாரச் சம்பளங்கள் பெற்று படித்து முன்னேறி அக்கல்லூரி தமிழ்ப்பேரவைத் தலைவராகவும் விளங்கினார். 1915ல் சென்னை பச்சையப்பர் கல்லூரியில் நடந்த பேச்சுப்போட்டியில், சேதுவின் பேச்சைக் கேட்டு அறிஞர்கள் மகிழ்ந்தனர்!

www.tamilarangam.net



ஆனால் கல்லூரியின் முதல்வர் 'உரோலா துரை' சேதுவைப் பாராட்டியதோடு, நில்லாமல் தமிழ் பாடத்திட்டத்தைக் கொண்டு வந்து, சிற்றாசிரியராக (TUTOR) சேதுப்பிள்ளையையே நியமித்து சிறப்பு செய்தார்.

சேதுப்பிள்ளை ப்ச்சையப்பர் கல்லூரியின் தமிழாசிரியராகப் பணிபுரிந்த அதே நேரத்தில், சட்டக்கல்லூரியில் மாணவராகச் சேர்ந்து படித்தார். பின்பு சட்டக் கலைஞர் பட்டத்துடன் நெல்லை சென்று .ஜானகி. என்னும் அம்மையாரைத் திருமணம் செய்து கொண்டு சென்னை திரும்பி தொழில் பயிற்சி பெற்றார். 1923ல் நெல்லையில் வக்கீலாகப் பணிபுரிந்து கொண்டே . இலக்கிய ஆர்வத்தையும் வளர்த்துக் கொண்டார். 1921-ல் 'கம்பர் கழகம்' என்ற அமைப்பில் ஈடுபட்டு சுப்பையா முதலியார் என்பவரின் மூலம் கம்பராமாயணத்தைக் கற்க ஆரம்பித்து அதில் வல்லவராகவும் தேர்ந்த சொற்பொழி வாளராகவும் விளங்கினார்.

இளம் வயதிலேயே மாவட்டக் கல்விக் குழு உறுப்பினர், சென்னைப் பல்கலைக்கழக ஆட்சிக் குழு உறுப்பினர் ஆகிய பொறுப்புகளை ஏற்றுத் திறம்பட தமிழ்ப்பணியாற்றினார். 1924, 1926, 1928 ஆகிய வருடங்களில் மூன்று முறை நகர் மன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 'தமிழகத்தின் நேரு' என பாராட்டப்பட்டார். ஊர், மற்றும் தெருக்களின் தமிழ்ப் பெயர்கள் சிதைந்து, பொருள் தெரியாத பெயர்களாக

www.tamilarangam.net



மாறிவிட்டதையெல்லாம் ஆராய்ந்து, தெருக்களுக்கு மறுபடியும் தமிழ்ப் பெயர்களைச் சூட்டினார்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தை நிறுவிய ராஜா சர் அண்ணாமலை செட்டியாரால் அரசியலில் இருந்து மீண்டும் பல்கலைக்கழகத்துக்குக் கொண்டுவரப் பட்டு ஆறாண்டுகள் தொடர்ந்து அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றி தமிழில் வகுப்புகள் தோன்றவும், மாணாக்கரிடையே தமிழார்வம் ஏற்படவும் காரணமாக இருந்தார்.

1936-ல் சென்னைப் பல்கலைக்கழகத்தில் தலைமைத் தமிழ் விரிவுரையாளராகவும், தமிழ் ஆராய்ச்சித் துறையின் துணைத் தலைவராகவும் பொறுப்பேற்றார். இவருடைய வேண்டுகோளின் காரணமாகவே சென்னை பல்கலைக் கழகத்தில் 'தமிழ்ப் பேராசிரியர் பீடம்' நிறுவப்பட்டது. இதற்கு 'ரெவரண்ட் லாசரஸ் தமிழ் பேராசிரியர் பீடம்' என்று பெயர். சிறுவயதில் எத்தகைய ஆர்வத்தோடு பாடம் கற்றாரோ, அதைவிட ஆர்வத்தோடு தன்மாணவர்களுக்குப் பாடம் கற்பித்தவர் சேதுப்பிள்ளை. ஏழுபேராயினும், எழுபது பேராயினும் ஒரே மாதிரியாகச் சுவையுடன் பாடம் சொல்வார்.

கீழைக்கலை பற்றி 1935-முதல் 1955 வரை இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடந்த ஆராய்ச்சி மாநாடுகளில் கலந்து கொண்டு பல புதிய கருத்துக்களை வெளிக் கொண்டு வந்தார். இவருடைய முயற்சியால் 'திராவிடப்

www.tamilarangam.net



பொதுச் சொற்கள்', 'திராவிடப் பொதுப் பழமொழிகள்' ஆகிய நூல்கள் வெளிவந்தன. 1923-ம் ஆண்டில் 'திருவள்ளுவர் நூல் நயம்' என்ற நூலை வெளியிட்டார். இவரது கம்பராமாயணச் சொற்பொழிவு சென்னை ஒய்.எம்.சி.ஏ பட்டிமன்றத்தில் வாரந்தோறும் நடக்கும் சென்னையில் இவரது இராமாயண சொற்பொழிவைக் கேட்டே 'கம்பன் கழகம்' உருவாக்கப்பட்டது. சிலப்பதிகார வகுப்புகளையும், திருக்குறள் விளக்கம் பற்றிய வகுப்பும் இவரால் நடத்தப்பட்டன. சென்னையில் சேதுப்பிள்ளையவர்களின் இனிய தமிழ்க் குரலைக் கேட்டே தமிழில் பேசும் ஆர்வம் அரசியல்வாதிகள், அறிஞர்கள் ஆகியோருக்கு ஏற்பட்டது என்பர். இவர் தமிழ் பேசும் ஓசையைக் கேட்டால் மொழி தெரியாத கேரள, கர்நாடக, ஆந்திர மாணவர்களும் வசியப்பட்டு, தமிழ் கற்று இன்பத்தில் திளைப்பார்களாம். இதனால்தான் இவருக்குச் 'சொல்லின் செல்வர்' என்ற பட்டம் 1951-ல் வழங்கப்பட்டது.

இந்தியா விடுதலை பெற்ற பிறகு 'தமிழ் வளர்ச்சிக் கழகம்' என்ற அமைப்பு அந்நாளைய கல்வி அமைச்சர் அவினாசிலிங்கம் அவர்களால் நிறுவப்பட்டது. இதன் முதல் பரிசை முதல் முறையாக 'ஊரும் பேரும்' என்ற ஆராய்ச்சி நூலுக்காகச் சேதுப்பிள்ளை பெற்றார். 'தமிழின்பம்' என்ற இவரது நூலே இந்தியா விடுதலை பெற்ற பிறகு வந்த தமிழ் நூல்களுள் சிறந்தது என்னும் சிறப்புடன் இந்திய அளவில் பரிசு பெற்றது. 18-4-1955-ல் பெருந்தலைவர் காமராசர் பொதுமக்கள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சார்பில் சேதுவுக்குப் பொற்பதக்கம் அணிவித்தார். பல பாராட்டுக்களும், பரிசுகளும் குவிந்தன. 1957ல் சென்னைப் பல்கலைக் கழகத்தால் 'இலக்கியப் பேரறிஞர்' பட்டம் வழங்கப்பட்டது. இவரைப் பாராட்டி .தமிழ்ப் பண்பாடு. என்னும் இதழ் .சிறப்பு மலர். ஒன்றை வெளியிட்டது. 13-4-1961ல் அறிஞர்கள் திரண்டு இவரது வெள்ளி விழாவைக் கொண்டாடினர்.

ஓய்வுபெறும் வயதான 55க்கு பதிலாக 65 வயது வரை பல்கலைக்கழகத்தில் பணியாற்றியவர் சேதுப்பிள்ளை. ஆனந்தபோதினி, குமரன், செந்தமிழ்ச் செல்வி ஆகிய இதழ்களில் எழுதி வந்தார். 'சிலப்பதிகார நூல்நயம்' 'வேலும் வில்லும்', 'தமிழ் நாட்டு நவமணிகள்', 'தமிழர்வீரம்', 'தமிழ் விருந்து', 'வேலின் வெற்றி', 'வழிவழி வள்ளுவர்', 'கால்டுவெல் ஐயர் சரிதம்', திருக்காவலூர்க்கோயில், கிறிஸ்துவத் தமிழ்த் தொண்டர் போன்ற பல நூல்களையும், அரிய கட்டுரைகளையும் 'தமிழ்க் கவிதை களஞ்சியம்' 'செஞ்சொற் கவிக்கோவை', 'பாரதியார் இன் கவித்திரட்டு' போன்ற நூல்களையும் எழுதியுள்ளார். மாணவர்களுக்குப் பல்கலைக்கழகத்தில் தமிழ் வளர்க்கவும், திருப்பணிகளுக்கும், மருத்துவ மனைகளுக்கும், தமிழ் மக்களுக்காகவும் தமது செல்வங்களை நன்கொடையாகவே ஈந்தவர் வள்ளல் ரா. பி. சேதுப்பிள்ளை. இத்தகைய பெரும் வள்ளலும், சொல்லின் செல்வருமான ரா.பி. சேதுப்பிள்ளை 25-4-1961-ல் இயற்கை எய்தினார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

18

# கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தி

(9–9–1899)

வட்டார மொழி என்று அலட்சியம் செய்யப்பட்ட தமிழை ஏற்றமிகு மொழியாகச் செய்தவர்களில் முக்கியமானவர் கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தி. மாயூரம் தாலுகாவில் உள்ள புத்தமங்கலத்தில் 9-9-1899-ல் ராமசுவாமி என்பவரின் மகனாகப் பிறந்தவர்.

மணல்மேடு என்ற ஊரில் திண்ணைப் பள்ளியிலும், மாயூரம் துவக்கப்பள்ளியிலும் படித்தார். தந்தையாரின் மரணத்திற்குப் பிறகு பள்ளி செல்ல முடியாமல் வறுமையில் வாடிய கல்கி, திருச்சியில் தமது சிறிய தாயாரின் உதவியால் படிப்பைத் தொடர்ந்து பள்ளியில் முதல் மாணவனாக விளங்கினார். திருச்சி நேஷனல் கல்லூரி உயர்நிலைப்பள்ளியில் படித்தார்.

மாணவப் பருவத்திலேயே தேசவிடுதலை மீது தாகம் கொண்டு ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கு கொள்வதற்காகப் பள்ளிப்படிப்பைக் கைவிட்டுச் சென்னைக்கு வந்துவிட்டார். வேல்ஸ் இளவரசரின் வருகையை எதிர்த்தமைக்காகக் கல்கிக்கு ஓராண்டு

www.tamilarangam.net



சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. சிறையில் அவரைப் பார்த்து அவரது தாயும், தங்கையும் கண்ணீர் வடித்தபோது, கல்கி சிரித்துக்கொண்டே "ஏனம்மா, நான் காலில் காப்பும், கழுத்தில் சங்கிலியும் அணிந்து கொண்டிருப்பதைப் பார்த்து நீ சந்தோசப்பட வேண்டாமா?" என்றாராம். விடுதலைப் போராட்டத் திற்காக மூன்று முறை சிறை சென்றவர் கல்கி.

1923-ல் திரு.வி.க.வுடன் தொடர்பு ஏற்பட்ட பிறகு, நவசக்தி பத்திரிகையில் வேலைக்குச் சேர்ந்து, காந்தியடிகளின் வாழ்க்கை வரலாற்றை 'சத்திய சோதனை' என்ற தலைப்பில் மொழிபெயர்த்தார்.

தமிழ்த்தேனீ, தும்பி, கர்நாடகம், லாங்கூலன், அகஸ்தியன், ரா.கி., விவசாயி, எமன், பெற்றோன் போன்ற பல புனைபெயர்களில் எழுதியுள்ளார். தாம் குருவாக மதித்த கல்யாண சுந்தரனார் என்ற பெயரில் உள்ள 'கல்' என்ற இரண்டு எழுத்துக்களையும் தனது பெயரில் முதல் எழுத்தான 'கி' என்ற எழுத்தையும் இணைத்து .கல்கி. என்று வைத்துக்கொண்டார்.

'கல்கி' கடுமையான உழைப்பாளி. எந்த நேரமும் அயராமல் உழைத்து வந்தார். பிள்ளைகளுக்கு உடல்நிலை சரியில்லாவிட்டாலும்கூட அவர்கள் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டே எழுதுவார். 1928-ல் நவசக்தியைவிட்ட பிறகு 'விமோசனம்' என்ற மதுவிலக்குப் பிரசார இதழின் ஆசிரியராகவும், பின்பு ஆனந்த விகடன் பத்திரிகையிலும் பணியாற்றினார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆனந்தவிகடனில் ஏட்டிக்குப் போட்டி என்ற பகுதியில் கதை எழுதி மக்களுக்கு நெருக்கமாக அறிமுகமானார். 'சிவகாமியின் சபதம்', 'மகுடபதி', 'கள்வனின் காதலி', 'தியாகபூமி', போன்ற படைப்புகள் இந்தக் காலகட்டங்களில் எழுதப்பட்டவை. பிற்காலத்தில் எழுதப்பட்ட 'அலை ஓசை' என்ற படைப்பும் மிகச் சிறப்பானது.

ஆனந்தவிகடனில் பணியிலிருந்து நீங்கிய பின் காந்தியடிகளின் தனி நபர் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டு மூன்று மாதம் சிறைத்தண்டனை பெற்றார். அதன் பின்பே 'கல்கி' என்ற பத்திரிகையை ஆரம்பித்தார். எம்.எஸ். சுப்புலட்சுமி அவர்கள் சாவித்திரி படத்தில் நாரதராக ஆண் வேடமிட்டு நடித்து அதில் பெற்ற ஒரு தொகையைத் தந்தார். மாயூரம் ஆர்.கே. சுப்பிரமணியபிள்ளையும் ஒரு தொகையைத் தந்து அதன்மூலமே 'கல்கி' பத்திரிகை உருவானது.

மகாகவி பாரதியாருக்கு எட்டையபுரத்தில் மணிமண்டபம், சென்னை ராஜ்பவன் பூங்காவில் 'காந்திமண்டபம்' ஆகியவை உருவாகக் கல்கி பெரிதும் உதவினார். தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவராக இருந்தபோதே அச்சங்கத்திற்குச் சொந்தக் கட்டடம் அமைக்கப் பெரிதும் முயன்றார்.

தமிழ்ப்பற்றையும், தேசிய உணர்வையும் ஊட்டும் படைப்புகளைப் பாமர மக்களும் புரிந்து கொள்ளும் வகையில் எழுதியவர் கல்கி. இலக்கியத்தின் எல்லாத்துறைகளிலும் முத்திரை பதித்தவர்.

www.tamilarangam.net



அரசியல் தலையங்கங்களை ஆர்வத்தோடு தமிழர்கள் படிக்க அடிகோலியவர் அவர். அரசாங்கம் பற்றி 1933-ல் "ஒரு தேசத்தின் ஜனங்களிடம் அதிகமாகப் பணம் தங்கி, அதனால் அவர்கள் கெட்டுப் போகாமல் பார்த்துக்கொள்ளும் ஸ்தாபனத்துக்கு அரசாங்கம் என்று பெயர். திருடர்கள் என்ற ஒரு கூட்டத்தாரும் இதே காரியத்தைச் செய்து வருகிறார்கள். இவர்களுடைய போட்டியை அடியோடு ஒழித்துத் தாங்களே ஏகபோகமாய் அவ்வுரிமையை அனுபவிப்பதுதான் அரசாங்கத்தின் பெருமை" என்று மக்களைச் சுரண்டி ஆணவ தர்பார் நடத்தும் அரசாங்கத்தைக் குறித்து எழுதினார்.

'நாற்காலி கவிழும் நாளன்று நல்ல சொல் சொல்ல நாலு பேர் மிஞ்சமாட்டார்கள்' என்ற உண்மையை அப்போதே கல்கி எழுதியுள்ளார். கல்கிக்கு காப்பி என்றால் கொள்ளைப் பிரியம். விரும்பிக் குடிப்பார்.

கல்கியிடம் இருந்த மற்றொரு சிறப்புப் பண்பு இளம் எழுத்தாளர்களுக்கு கல்கி பத்திரிகையில் வாய்ப்பளித்து வளர்த்ததோடு நில்லாமல் பெண் எழுத்தாளர்கள் பலரையும் உருவாக்கியது. மக்கள் எழுத்தாளர் விந்தனை அறிமுகப்படுத்தி, அவரைப் புரட்சி எழுத்தாளராக வளர்த்தவர் பேராசிரியர் கல்கிதான். ஆங்கிலம் படித்த மேதாவிகள் தமிழ்ப் பத்திரிகைகளைப் படிப்பதுகூடத் தரக்குறைவானது என்று நினைத்த காலத்திலேயே தமிழில் இப்படியும் எழுத முடியுமா? என்று பலர்

www.tamilarangam.net



வியக்கும்படி எழுதி, தமிழுக்கு வளமூட்டியவர் கல்கி, சரித்திரக் கதைகள், பயண இலக்கியங்களுக்குக் கல்கி முன்னோடியானவர்.

தேசத்திற்காகவும், தமிழ் - தமிழருக்காகவும் உழைத்த கல்கி ஆஸ்துமா நோயினால் பாதிக்கப்பட்டு 1954-ஆம் ஆண்டு காலமானார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

19

# முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம்

(11-11-1899)

எந்தப் பள்ளியிலும் படிக்காத ஒருவரை இரண்டு பல்கலைக் கழகங்கள் ஆட்சிக் குழு உறுப்பினராக ஏற்றுக் கொண்டதோடு டாக்டர் பட்டமும் வழங்கிச் சிறப்பித்தன. தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்களோ இன்னும் ஒருபடி மேலே சென்று பள்ளியில் படிக்காத அந்தப் பெரியவரை அழைத்து'நாடுஇருக்கிறது....மொழி இருக்கிறது....மக்கள் இருக்கிறார்கள்....நீங்களும் இருக்கிறீர்கள்....பார்த்துக் கொள்ளுங்கள் என்றார்' மக்களோ அவரை 'முத்தமிழ்க் காவலர்' என்கிறார்கள்.

இத்தனை சிறப்புக்கும் உரியவரான கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்கள் 11-11-1899-ம் ஆண்டு திருச்சியில் பிறந்தார். இவரது பெற்றோர் பெரியண்ணன்-சுப்பம்மாள் தம்பதியினர். இவர் பள்ளிக்கு முறையாகச் சென்று படிக்காமல் தனி ஆசிரியரிடம் மணலில் தமிழ் எழுத்துக்களை எழுதிப் பழகி, பெரும்புலவர் ஆனார். பேச்சாற்றலும், எழுத்தாற்றலும் இவரை அணி செய்தன.

www.tamilarangam.net



நீதிக்கட்சியின் (ஜஸ்டிஸ்கட்சி) உறுப்பினராகவும், பின்பு அக்கட்சியின் பொதுச் செயலாளராகவும் திகழ்ந்த போதுதான் காங்கிரசில் இருந்து வெளியேறிய பெரியாரை தம்மோடு (ஜஸ்டிஸ் கட்சியோடு) இணைத்துக் கொண்டார். அண்ணாவை அரசியலில் மொழி பெயர்ப்பாளராக அறிமுகம் செய்துவைத்தார்.

1925-ல் பெரியார் தொடங்கிய சுயமரியாதை இயக்கத்தில் சேர்ந்து, அதன் செயலாளராகப் பொறுப்பேற்றார், சாதி, மத வேறுபாடுகள், மூட நம்பிக்கைகளைச் சாடி, ஊர் ஊராக மாநாடுகள் நடத்தியதோடு, வைதீகமோ, ஐதீகமோ இல்லாமல் ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட தமிழ்த் திருமணங்களை நடத்தி வைத்தார். சாதி ஒழிய வேண்டுமானால், சாதி முறையை வெறுத்தல், பெயர்களுக்குப் பின்னால் உள்ள சாதிப் பெயர்களை கைவிடுதல், எல்லாரிடத்தும் அன்பாக இருத்தல், சுத்தமாக உள்ள எவரோடும் மகிழ்ச்சியுடன் உணவு உண்ணுதல், கலப்பு மணம் செய்து கொள்ளுதல் ஆகியவற்றைக் கடைப்பிடிக்க வேண்டுமென முழங்கினார்.

1937-ல் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தையும், 1938-ல் 'தமிழ்நாடு தமிழருக்கே' என்றும் முழக்கமிட்டார். 1965-ல் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டு உயிர்துறந்த 27 மாணவர்களின் தியாகத்தைப் போற்றி ஒவ்வொரு மாதமும் 26-ம் தேதியன்று உண்ணா நோன்பு, பேசா நோன்பு இருந்தார். இதைத் தன் வாழ்நாளின் கடைசி வரை கடைப்பிடித்தார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அரசர்கள் சங்கம் வைத்து தமிழ் வளர்த்ததைப் போல 1958-ல் தமிழகப் புலவர் குழுவைக் கூட்டித் தமிழ் வளர்த்தார். அதில் 49 புலவர்கள் இருந்தனர். அதற்குத் தலைமையிடமாகத் தனது வீட்டையே மாற்றினார். தமிழ் மொழியில்தான் இசைப்பாடல்கள் கீர்த்தனைகள் ஆகியவற்றைப் பாட வேண்டும் என்று வற்புறுத்த தமிழிசை. இயக்கத்தை வலுப்படுத்தினார். ஊர் ஊராகவும் அயல்நாடுகளுக்கும் சென்று மொழி வளர்த்தார்.

தமிழ் வளம் பெறவேண்டும், தமிழர் வாழ்வு பெற வேண்டும், தமிழகம் வான்புகழ் பெற வேண்டும், என்ற உயர் நோக்குடன் 50 ஆண்டுகளுக்கு மேலாகக் குரல் கொடுத்தார். தஞ்சையில் தமிழ்ப் பல்கலைக்கழகம் அமைக்க வழி செய்தார். தமிழ் மருத்துவமான சித்த மருத்துவம் அழியக்கூடாது என்பதற்காக, அதைப்பற்றி விரிவான புத்தகங்களை எழுதியதோடு, அரசாங்கம் அதற்காக ஒரு வாரியம் அமைக்கவும் காரணமாக இருந்தார்.

அண்ணா தன் தலைமையில் நடந்த உலகத் தமிழ்மாநாட்டிற்கு கி.ஆ.பெ. அவர்களைத்தான் உபதலைவராக நியமித்தார். 'முத்தமிழ்க் காவலரின் தமிழ்ப்பற்று அல்லது தமிழறிவு காரணமாக அவருக்கு இந்தச் சிறப்பைச் செய்யவில்லை' என்றும், பெரியார். காந்திபோல தனக்கென்று எந்தப் பதவியையும் நாடாமல் தமிழ்ப்பணி ஒன்றையே மூச்சாகக் கொண்டு

www.tamilarangam.net



வாழ்வதற்காகவே, அவரை உலகத்தமிழ் மாநாட்டின் உபதலைவராக நியமித்ததாகவும் அண்ணாவே கூறியுள்ளார்.

75 ஆண்டுகளுக்கு மேலாகத் திருக்குறள் பரப்பும் பணி செய்து வள்ளுவருக்குக் கோட்டம் அமையவும், குறள் நெறி பரப்பும் பல திருக்குறள் அமைப்புகள் உருவாகவும் காரணமாக இருந்தார் தள்ளாத வயதிலும் தடியூன்றாத கி.ஆ.பெ. விசுவநாதம் தனது 94-ம் வயதில் தமிழ் ஆட்சிமொழி இயக்கத்துக்கு தலைமை தாங்கி தடையை மீறி ஊர்வலம் சென்று சிறைப்பட்டார். உலகிலேயே மொழிக்காக 94-ம் வயதில் தண்டனை பெற்ற ஒரே அறிஞர் கி.ஆ.பெ. வாகத்தான் இருக்க முடியும்.

குடியரசு, விடுதலை பத்திரிகைகளில் பணி யாற்றியதோடு, 'தமிழ்நாடு' என்ற பத்திரிகையையும் நடத்தி வந்தார். தமிழறிஞர்கள், தலைவர்கள், கலைஞர்கள் உட்பட அனைவராலும் பாராட்டப் பெற்ற கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்கள் 96-வது பிறந்த நாள் விழாவைச் சென்னையில் முடித்ததும் நோயுற்றார். 'தமிழ் ஆட்சி மொழியாகும்' என்று அறிவிப்பு வந்தால் மகிழ்ச்சியோடு சாவேன் என்று அறிக்கைவிட்ட கி.ஆ.பெ. தன் எண்ணத்தை ஈடேற்றும் பொறுப்பை நம்மிடம் விட்டுவிட்டு 19-12-1994-ல் புகழுடம்பு எய்தினார்.

இவரைப்பற்றிய நூல்களும், இவர் எழுதிய நூல்களும், கிறிஸ்தவ இலக்கியச் சங்கத்தினரால் மலிவு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



விலைக்கு விற்கப்படுகிறது. 'முகம்' மாத இதழின் ஆசிரியர் மாமணி அவர்கள், கி.ஆ.பெ. அவர்களின் வரலாற்றையும் கி.ஆ.பெ. பற்றிய அறிஞர்களின் கருத்துக்களையும் தொகுத்து எழுதியுள்ளார். பல விருதுகள், பட்டங்கள் பெற்றாலும் அதைப் பெரிதாகக் கருதாத கி.ஆ.பெ. பள்ளிக்கூடம் போகாமலேயே மேதைகளாக விளங்கும் தமிழ் நெஞ்சங்களுக்கு ஒரு கலங்கரை விளக்கம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 20

# சாமிசிதம்பரனார்

(1-12-1900)

பைந்தமிழ்ச் செல்வர், சீர்திருத்தச் செம்மல், பெரும்புலவர் என்றெல்லாம் போற்றப்படுபவர் சாமி. சிதம்பரனார். பெரியார் இயக்கத்தின் வழிநின்று அரும் பணியாற்றியவர். பொதுமக்களுக்குப் பயன்படாமல், புலவர்களுக்கு மட்டுமே பயன்பட்டுவந்த பண்டைத் தமிழ் இலக்கியங்களை எளிமைப்படுத்தி அனைவருக்கும் புரியும்வண்ணம் எளிய உரைகளைப் படைத்தவர். மாணவர்களுக்குச் சுயமரியாதை உணர்வைச் சிறுவயதிலேயே கற்பித்தவர். சாதி ஒழிப்பு, தீண்டாமை நீக்கம், விதவைத் திருமணம் போன்றவற்றில் அதிக ஈடுபாடு கொண்டவர். அந்தக்காலத்திலேயே கலப்புத்திருமணம் செய்து கொண்டவர். ஐம்பதுக்கும் மேற்பட்ட இலக்கியங்களைப் படைத்த தமிழ்ச்சிற்பி இவர்.

சாமி சிதம்பரனார் தஞ்சை மாவட்டத்தில் சிறுகடகம் என்னும் சிற்றூரில் சாமிநாத மலையமான்-கமலம்மாள் தம்பதியினருக்கு 1-12-1900-ல் பிறந்தார். இவரது இயற்பெயர் சிதம்பர மலையமான்.

www.tamilarangam.net



மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் தமிழ் இலக்கியம் கற்று சங்கத் தேர்வில் தேறி பண்டிதர் பட்டம் பெற்றவர். கரந்தைத் தமிழ்ச் சங்கத்தில் ஓராண்டு ஆசிரியராகவும், பின்பு ஜில்லாபோர்டு உயர்தரக் கல்லூரியில் ஆசிரியராகவும் பணி புரிந்தவர். அக்காலத்தில் பள்ளி மாணவர்களுக்குப் பல பாடநூல்கள் எழுதினார். 1924 முதல் 1940 வரை பள்ளி ஆசிரியராக விளங்கிய இவர், பிள்ளைகளுக்குப் பகுத்தறிவு போதனை செய்வார். இதனால் பல துன்பங்களை எதிர்கொள்ள நேரிட்டபோதும் அதற்கெல்லாம் அஞ்சாமல் பணியாற்றினார்.

திருமணம் வேண்டாம் என்று 30 வயதுவரை பிரம்மச்சாரியாகவாழ்ந்த சாமி சிதம்பரனார் சுயமரியாதை இயக்கத்தில் சேர்ந்தபிறகு வேறு ஜாதியிலிருந்து சிவகாமியம்மாள் என்பவரை மணந்து கொண்டார். சிவகாமியம்மாள் அவர்களும் சமுதாயச் சீர்திருத்த இயக்கத்தில் தீவிர ஆர்வம் கொண்டிருந்தார். சிவகாமியம்மாளை ஆசிரியராகக் கொண்டு 1936-ல் 'அறிவுக்கொடி' என்ற பத்திரிகை வெளிவந்தது. இதை முழு மூச்சில் கவனித்துக்கொண்டவர் சாமி.சிதம்பரனார். 1938-ல் சென்னை வந்து 12 ஆண்டுகள் தொடர்ந்து சிங்கப்பூர் தமிழர் முரசு பத்திரிகையில் இலக்கிய ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதிவந்தார்.

ஆசிரியராக இருந்த காலத்திலேயே பள்ளியில் வேலை செய்தபடி பத்திரிகைகளுக்கு எழுதுவதும்,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



விடுமுறை நாட்களில் சென்னை வந்து பத்திரிகை அலுவலகங்களில் சேர்ந்து பணியாற்றுவதும் இவரது வாடிக்கை திராவிடநாடு, குடியரசு, தமிழ்நாடு, வெற்றிமுரசு, புதுவை முரசு, அறிவுக் கொடி, பகுத்தறிவு போன்ற பல பத்திரிகைகளில் பணியாற்றியும், பல கட்டுரைகள், தலையங்கங்கள் எழுதியும் உள்ளார்.

பத்திரிகைத் துறைக்கு வருவதற்காக ஆசிரியர் பணியை விட்டுவிட நினைத்த சாமி. சிதம்பரனாரை நண்பர்கள் தடுத்து நிரந்தரமில்லா வருவாய்க்காக நிரந்தமான பணியை விட்டுவிடாதீர்கள் என்று வேண்டிக் கொண்டார்கள்.

1940-ல் விடுதலை பத்திரிகையில் உதவி ஆசிரியராக சேர்ந்தார். பேரறிஞர் அண்ணா ஆசிரியராக இருந்தார். 1941-ல் பத்திரிகை வேலையை விட்டுவிட்டு கும்பகோணம் சென்று 'முன்னேற்றம் பிரஸ்' என்ற பெயரில் ஓர் அச்சகத்தை நடத்தினார். அந்தத் தொழில் இலாபகரமாக இருந்த போதிலும் எழுத வேண்டும் என்ற ஆசையால் கும்பகோணத்திலிருந்த தனது சொத்துக்களை விற்றுவிட்டுச் சென்னைக்கு வந்தார். சென்னையில் பத்திரிகையும் அச்சகமும் நடத்தத் திட்டமிட்டார். ஆனால் அந்த முயற்சி வெற்றி பெறவில்லை. கையிலிருந்த பணமும் தீர்ந்துபோனது. பரலி சு. நெல்லையப்பர் ஆசிரியராக இருந்த லோகோபகாரி பத்திரிகையில் உதவி ஆசிரியராக நாரண துரைக்கண்ணன் உதவியுடன் வேலைக்குச் சேர்ந்தரார். பின்பு அப்பத்திரிகையின்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆசிரியராகவும் இருந்தார். மீண்டும் விடுதலைப் பத்திரிகையில் சேர்ந்தார். 1951-ல் அப்பத்திரிகை யிலிருந்து விலகி சொந்தமாகப் புத்தகங்கள் எழுதி அவற்றை வெளியிட்டு வந்தார். பெரியாரின் வாழ்க்கை வரலாற்றை அவரது முழு அங்கீகாரத்தோடு முதல்முதலாக வெளியிட்டவரும் இவரே!

இவர் வளரும் எழுத்தாளர்களுக்கு ஊக்கம் அளித்து வந்தவர். சென்னைக்கு வெளியே இருந்து சென்னைக்கு வந்து உயரத்துடிக்கும் எழுத்தாளர்களுக்கு இவர் சொல்லும் ஆலோசனை வித்தியாசமானது.

"எழுத்துத் துறையில் முன்னுக்கு வர சென்னையில் வசதியுண்டு. இதில் சந்தேகம் இல்லை. ஆனால் எல்லாரும் முன்னுக்கு வந்து எதிலும் 'நான் நான்' என்று முன்னே போகும் குணம் வேண்டும். அழைப்பு இருக்கிறதோ இல்லையோ எந்தக் கூட்டத்திலும் விழுந்தடித்துச்சென்று தன்னை விளம்பரப்படுத்திக் கொள்ள வேண்டும். பத்திரிகை ஆசிரியர்களையும், பத்திரிகை அதிபர்களையும் காக்காய்ப் பிடிக்கும் குணம் வேண்டும். இப்படியெல்லாம் இருந்தால்தான் எழுத்தாளர் துறையில் பிரகாசிக்க முடியும். இதை எழுத்தாளர்கள் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். என்னைப்போல கூட்டத்தில் பழகக் கூச்சப்படுகிறவர்கள் சென்னையில் முன்னுக்கு வரமுடியாது. இது என் அனுபவம்" என்று கூறியிருக்கிறார்.

சாமி சிதம்பரனார் தமிழ் மீது அதிக பற்றுடையவர். தமிழனுக்குத் தமிழ்மொழியினிடத்து பற்று இருக்க

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வேண்டும். ஆனால் மொழிப்பற்று மொழி வெறியாக மாறிவிட அனுமதிக்கக்கூடாது என்பார். தொல்காப்பியம், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க் கணக்கு, திருக்குறள், கம்பராமாயணம், சிலப்பதிகாரம் போன்ற சிறந்த இலக்கியங்களைச் சாதாரண மக்களுக்கு அறிமுகப்படுத்துவதற்காக அவற்றை ஆராய்ந்து எளிய முறையில் இவர் உரையெழுதி வடிவமைத்துக்கொடுத்த சாதனையை வேறெவரும் செய்ததில்லை என்பதே இவர் பெருமைக்கு சான்று.

சாமி சிதம்பரனார் 17-1-1961-ல் மரணமடைந்தார். அவரது மரணத்திற்குப் பிறகு அவரது சொத்துக்களை தமிழ் வளர்ச்சிக்காக செலவிட்டு வருகிறார்கள் அவரது குடும்பத்தினர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

21

# தேவநேயப் பாவாணர்

(7-2-1902)

"தமிழ் மொழியின் உயர்வைப்பற்றி எவ்வளவு வேண்டுமானாலும் பேசுங்கள். ஆனால் பிறமொழிகளைப் பற்றி விமர்சிக்காதீர்கள்" என்று ஆரியத்தின் அடிவருடிகள் சொன்னபோது, "அவ்வாறு என் கருத்துக்களை இருட்டடிப்பு செய்து கொண்டு நான் மானத்தோடு வாழமுடியாது. எனக்கு வறுமையும் உண்டு, மனைவி மக்களும் உண்டு, அவற்றோடு மானமும் உண்டு. என்ன தீங்கு நேர்ந்தாலும் உண்மையை எடுத்துச்சொல்வது ஆராய்ச்சியாளன் கடமை! மிகக்கொடுமையாய் வட மொழிக்கு அடிமைப்பட்டுக் கிடக்கும் தமிழை அதனின்று மீட்பதே என் வாழ்க்கைக் குறிக்கோள்" என்று முழங்கியவர். 'மொழி ஞாயிறு' என்றும் 'தமிழ்த்தந்தை' என்றும், 'தனித்தமிழ்க் காவலர்', 'மொழிப்பேரறிஞர்', மொழிநூற் கதிரவன்', 'மொழி மூதறிஞர்', 'செந்தமிழ்ச் செல்வர்', என்றெல்லாம் அடைமொழியிட்டு அழைக்கப்பட்டவர் தேவ நேயப்பாவாணர்.

www.tamilarangam.net



நெல்லைமாவட்டத்தில் சங்கர நயினார் கோயில் என்னும் ஊரில் கணக்காயர் ஞானமுத்து - பரிபூரணம் தம்பதியினருக்கு 7-2-1902-ம் ஆண்டு பிறந்து, சிறுவயதிலேயே தந்தையை இழந்து அக்காவின் ஆதரவில் வாழ்ந்தவர்.

பாளையங்கோட்டைப் பள்ளியில் படித்த தேவநேயர், மதுரை தமிழ்ச்சங்கத்தார் நடத்திய 'பண்டிதர்' என்னும் பட்டத்தேர்வில் 22-ம் வயதிலேயே தேர்ச்சி பெற்றவர். இவருடன் பண்டிதர் தேர்வெழுதிய அனைவரும் தோல்வியுற்றனர்.

தேவநேயருக்குத் தமிழ் என்றால் உயிர் மூச்சு மாதிரி. ஆகவே ஆங்கிலத்தைப் புறக்கணித்தார். தமிழில் 'வித்துவான்', 'புலவர்' போன்ற பட்டங்களைப் பெற்றவர். தனித்தமிழ் பற்றாளரான இவர் ஞா.தேவநேசக் கவிவாணர் என்ற தன் பெயரில் இருந்த வடமொழிச் சொல்லை நீக்கிவிட்டு தேவநேயப் பாவாணர் என்ற பெயரை சூட்டிக்கொண்டார்.

இவருடைய முதல் மனைவி எஸ்தர் அம்மையார் இறந்துவிட்டபிறகு, தனது அக்காவின் மகள் நேசமணி அம்மையாரைத் திருமணம் செய்துகொண்டார். இவ்வம்மையார்தான் தேவநேயரின் மொழி ஆராய்ச்சிக்கும் உயர்வுக்கும் காரணமாக விளங்கியவர்.

தேவநேயர் வெளியில் எங்குச் சென்றாலும் உழைக்காமல் உண்ணமாட்டார். விருந்தினராக யார் வீட்டுக்காவது செல்ல நேர்தால்கூட அந்த வீட்டில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உள்ளவர்களுக்கு ஒத்தாசையாக ஏதாவது வேலைசெய்துவிட்டுத்தான் அவர்கள் வீட்டில் சாப்பிடுவார். இதை வழக்கமாகக் கடைப்பிடித்துவந்தார்.

இவர் ஆங்கிலம் படிக்காததால் சரியான வேலையையோ, வாழ்க்கையில் உயர்வையோ பெற முடியாமல் திண்டாடினார். இறுதியாக முதுகலைத் தேர்வெழுதி (எம்.ஏ) பட்டம் பெற்றார்.

உயர்நிலைப்பள்ளியில் தமிழாசிரியராகப் பணியில் சேர்ந்த தேவநேயர், 22 ஆண்டுகள் தமிழாசிரியராகப் பணியாற்றிவிட்டு சேலம் நகராட்சிக் கலைக்கல்லூரியில் தமிழ்த்துறைப் பேராசிரியராகப் பொறுப்பேற்றார். மறைமலை அடிகளாரின் தனித்தமிழ் இயக்கத்தின் பேரில் அதிகப்பற்றுகொண்டு, தனது வகுப்பிலும் தனித் தமிழ் பயிற்றுவித்தார். தமிழின் சிறப்பும், நுட்பமும், அவர் விரித்துரைக்கும் பாங்கும் மாணவர்களைக் கட்டியிழுத்து வந்து வகுப்பில் சேர்க்கும். இதனாலேயே மாணவர்கள் ஒவ்வொருவரும் தாம் பாவாணரின் மாணவர் என்பதையும் அவரிடம் அடிபடுவதையும் பெருமையாகக் கருதினர்.

ஆங்கிலத்தில் பேசுவதைப் பெருமையாகக் கருதிவந்த அறிஞர்கள் மத்தியில் தனித்தமிழிலேயே பேசியதோடு, தன் வீட்டிலுள்ளவர்களையும், தன்னிடம் படிக்கும் மாணவர்களையும் தனித்தமிழிலேயே பேசும்படி வற்புறுத்தினார்.

www.tamilarangam.net



தனித் தமிழ்ப்பற்றின் காரணமாக, ஆரிய மாயைக்குள் அகப்பட்ட சிலரின் வெறுப்புக்கு ஆளாகித் தேவநேயரின் செயல்களுக்கு இடையூறுகள் விளைந்ததும் உண்டு. 'எத்தனை துன்பங்கள் வந்தாலும் தமிழின் பெருமையை மீட்பேன்' என்று சூளுரைத்த இவருக்குத் தமிழையும், வட மொழியையும் தவிர கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளுவம், கிரேக்கம், லத்தீன், உருது, ஈப்ரு, ஜப்பான்மொழி போன்றவையும் தெரியும். இவற்றிலும் அவர் புலமைமிக்கவர்.

இவர் சேலத்தில் பணிபுரிந்த 12 ஆண்டு காலத்தில்தான் இவரது மொழி ஆராய்ச்சிப்பணிகள் அதிக அளவில் நடந்தன. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் திராவிடமொழி ஆராய்ச்சித்துறையிலும் ஐந்தாண்டுகள் பணிபுரிந்தார்.

சேலம் கல்லூரியில் ஞாயிறுதோறும் தொல்காப்பிய வகுப்பை நடத்திவந்தார். இதில் மாணவர்கள் மட்டுமல்லாது, அலுவலகப்பணியாளர்கள், பல பள்ளி, கல்லூரிகளின் ஆசிரிய- பேராசிரியர்கள் போன்றவர்கள் கலந்து கொள்வார்கள்.

தொல்காப்பியம் இல்லாவிட்டால் தமிழைப் பற்றியும், அதன் சிறப்பைப்பற்றியும் நாம் அறிந்துகொள்ள முடியாமல் போயிருக்கும் என்பார் தேவநேயர். தமிழ் இலக்கிய நூல்கள் பற்றியும், தமிழ்ச்சொல் பற்றியும் அரிய நுட்பமான கருத்துக்களைச் செவி இனிக்கப் பேசும் திறனுள்ளவர்.

www.tamilarangam.net



'முதல் தாய்மொழி', 'தமிழ் வரலாறு', 'இயற்றமிழ் இலக்கணம்', 'தமிழர் வரலாறு', 'தமிழ்நாட்டு வரலாறு', 'தமிழர் மதம்', 'பண்டைத் தமிழாட்சி', 'இசைத்தமிழ்க் களஞ்சியம்', 'சுட்டு விளக்கம்', 'கட்டுரை வரைவியல்', 'திருக்குறள் மரபுரை' போன்ற 27 நூல்களையும், நான்கு ஆங்கில நூல்களையும் எழுதியிருக்கிறார். தனது ஆங்கில நூல்கள் மூலமாக உலகின் பல பகுதிகளுக்குத் தமிழின் பெருமையை எடுத்துச் சொன்னதோடு, 'வடமொழி வரலாறு' என்ற நூலையும் எழுதியிருக்கிறார்.

மொழி ஆராய்ச்சியில் கால்டுவெல்லுக்குப் பிறகு தமிழகத்தில் தோன்றிய பெருந்தகையாளர் தேவநேயப் பாவாணர் மட்டுமே என்கிறார்கள் மொழி அறிந்த தமிழறிஞர்கள். சுட்டிக்காட்டிப் பேசும் சுட்டுமொழிகளே உலகில் முதலில் தோன்றியவை என்பதை நிறுவியதும், தமிழே உலகின் மூத்த மொழி என்பதும் சிந்து சமவெளி நாகரிகமும் தமிழர் நாகரிகமே என்பதும் கூடத் தெளிவாக்கப்பட்டது இவரால்தான். 968-ல் உலகத் தமிழ்க்கழகம் ஏற்படுத்தி பிற மாநிலங்களில் கிளைகளை ஏற்படுத்தியிருக்கிறார். இவரது தனித்தமிழ் மீது பற்றுக்கொண்டவர்கள் 'பாவாணர் தமிழ்க்குடும்பம்' என்ற அமைப்பை ஏற்படுத்தித் தனித் தமிழில் பேசுவதைக் குடும்பங்களில் நடைமுறைப்படுத்தி வருகிறார்கள்.

இத்தகைய சிறப்புமிக்கவரை தமிழர் தலைவர் தந்தை பெரியார் போற்றி, 'பொற்கிழியும், தமிழ் மறவர்' என்ற பட்டத்தையும் அளித்துப் பாராட்டினார். அண்ணா,

www.tamilarangam.net



கலைஞர் கருணாநிதி, எம்.ஜி.ஆர். ஆகிய மூன்று முதல்வர்களாலும் சிறப்புச் செய்யப்பட்டவர் பாவாணர் கலைஞரின் உதவியுடனும், குன்றக்குடி அடிகளாரின் ஆதரவுடனும் அகரமுதலி திட்டத்தை ஏற்படுத்தி, அதன் இயக்குநராக 1974-ல் பொறுப்பேற்றுத் திறம்பட பணியாற்றிவந்தார்.

1981-ல் மதுரையில் நடந்த ஐந்தாம் உலகத்தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் 'மாந்தன் தோற்றமும், தமிழன் மரபும்' என்ற தலைப்பில் பேசிய அவர், அன்றே மயங்கிய நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, 15-1-1981-ல் காலமானார். அவர் பெயரில் சென்னையில் ஒரு நூலகம் அரசால் நிறுவப்பட்டுள்ளது.

அவரது இழப்பு தமிழுக்குப் பெரும் இழப்பு. ஆனால் அவரது மரணத்திற்குப் பிறகுதான் அதிக அளவில் தனித்தமிழில் சொற்களை உருவாக்க வேண்டும் என்ற இலட்சிய வெறியும், தமிழுக்கு அப்பழுக்கற்ற தொண்டு செய்யும் ஆர்வமும் கொண்ட இளைஞர்கள் பலர் தோன்றியிருக்கிறார்கள். நாடு அவர்களை விரைவில் அடையாளம் கண்டுகொள்ளும். தமிழும் வளம் பெறும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

22

# சி.பா. ஆதித்தனார்

(27-9-1905)

உடல் மண்ணுக்கு உயிர் தமிழுக்கு. என வாழ்ந்த அறிஞர்களில் முதன்மையானவர் தமிழர் தந்தை சி.பா. ஆதித்தனார். சி. பாலசுப்பிரமணிய ஆதித்தன் என்ற இயற்பெயருடைய இவர் நெல்லை மாவட்டம் திருச்செந்தூர் தாலுகாவில் உள்ள காயாமொழி என்ற ஊரில் 27-9-1905-ம் ஆண்டு பிறந்தார். பெற்றோர் சிவந்தி ஆதித்தன் - கனகம் அம்மையார். பிற்காலத்தில் சி.பா. ஆதித்தனாரை மரியாதையுடனும் அன்புடனும் 'அய்யா' என்றும், தமிழர் தந்தை என்றும் மக்கள் அழைத்தனர்.

சிறு வயதிலேயே சொந்தமாக உழைத்து முன்னேற வேண்டும் என்கிற உயர்ந்த நோக்கம் உடையவராக ஆதித்தனார் விளங்கினார். படிக்கும்போதே பதிப்பகம் ஆரம்பித்து நல்ல நூல்களை வெளியிட்டார். குடிசைத் தொழில்கள் பற்றிய இவரது புத்தகங்கள் ஆயிரக்கணக்கான பெண்களுக்குப் பிழைப்புத் தேடித்தந்தன,

திருச்சியில் பட்ட மேற்படிப்பு முடித்து, சென்னை சட்டக்கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கும்போதே,

www.tamilarangam.net



லண்டனுக்குச் சென்று பாரிஸ்டர் பட்டம் பெற்று வழக்குரைஞராக விரும்பினார். அதனால் படிப்பைப் பாதியில் விட்டுவிட்டு லண்டன் சென்று படித்து பாரிஸ்டர் ஆனார். படிக்கும் காலத்தில் தனது சிறு செலவுக்குக் கூடப் பெற்றோரிடமிருந்து பணத்தை எதிர்பார்க்காமல் சுயமாக சம்பாதித்துப் படித்தார். சுதேசமித்திரன் பத்திரிகையின் லண்டன் பகுதிநேர நிருபராகப் பணியாற்றியதோடு பல வெளிநாட்டுப் பத்திரிகைகளுக்குச் செய்தி அனுப்பி, அதன் மூலம் வந்த வருவாயிலேயே படிப்பை முடித்து தாயகம் திரும்பினார்.

லண்டனில் பத்திரிகையாளராகப் பணியாற்றிய போது 1931-ல் வட்டமேசை மாநாடு நடந்தது. காந்தியடிகள் அதில் கலந்து கொண்டார். அவரை உன்னிப்பாகக் கவனித்த ஆதித்தனார், மாநாட்டின் போது காந்திக்குப் பல் விழுந்த செய்தியை காந்தியிடமே கேட்டு, எழுதி அனுப்பினார். வேறு எந்தப் பத்திரிகையும் வெளியிடாத இந்தச் செய்தி அவருக்குப் பாராட்டுத் தேடித் தந்தது.

இளம் வயதில் இருந்தே பத்திரிகை ஒன்றை ஆரம்பித்து நடத்த எண்ணமிட்டிருந்தார். அதற்காகவே தன் வக்கீல் பணியை சிங்கப்பூரில் தொடர்ந்தார். இறுதிவரை ஒரு வழக்கில்கூடத் தோற்காமல், சிங்கப்பூரின் தலை சிறந்த வழக்கறிஞராகப் பணியாற்றி பலருக்கும் சட்ட உதவிபுரிந்து வந்தார்.

சிங்கப்பூரில் ‘தமிழ் முரசு’ நாளிதழ் உருவாகக் காரணமாக இருந்ததோடு பெரியாருடன் இணைந்து தமிழர் சீர்திருத்த இயக்கத்தையும் உருவாக்கினார்.

www.tamilarangam.net



ஆதித்தனார் வாதாடிய ஒரு வழக்கில் ஒருவருக்குத் தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டது. கைக்குழந்தையுடன் நின்றிருந்த தண்டனைக் கைதியின் மனைவி ஆதித்தனாரிடம் என் கணவருக்குத் தூக்குத் தண்டனை வாங்கித் தந்துவிட்டீர்களே, என்று கதறினாள் இந்தச் சம்பவத்தால் ஆதித்தனார் மனம் வருந்தினார். இனி வக்கீல் தொழிலே செய்வதில்லை என்ற முடிவெடுத்தார். பிரபல வக்கீலான அவர் இறுதிவரை அந்த முடிவிலிருந்து மாறவில்லை.

இரண்டாம் உலகப்போர் நடந்தபோது பல இன்னல்களுக்கு இடையில் தாயகம் திரும்பினார். தமிழுக்குத் தரமான தினசரி நாளிதழ் இல்லாத குறையைப் போக்க நினைத்து, தானே ஒரு பத்திரிகையை ஆரம்பித்தார். காகிதமே இல்லாமல் அச்சிட மை இல்லாமல் இயந்திரத்தை இயக்க மின்சாரம் இல்லாமல் திண்டாடிய நேரத்திலும் கடினமாக உழைத்தார். காகிதத் தட்டுப்பாடு ஏற்பட்டபோது வைக்கோலில் இருந்து காகிதம் தயாரிக்கும் முறையைக் கண்டுபிடித்து, அவரே அதைத் தயாரித்து, கைகளால் அச்சுக்கோர்த்துப் பத்திரிகையை வெளியிட்டார். உற்பத்திச் செலவைவிடக் குறைந்த விலைக்கே பத்திரிகையை விற்று மக்களை படிப்பாளிகளாக்கினார்.

வருமானத்திற்காகப் பத்திரிகை நடத்தவில்லை. தமிழருக்காக, தமிழுக்காகப் பத்திரிகை நடத்துகிறோம். என்ற ஆதித்தனார், லாப நட்டங்களைக் கருத்தில் கொண்டதே கிடையாது. தந்தி முதல் இதழ் 1-11-1942-ல் வெளியானது.

www.tamilarangam.net



தினத்தந்தியை முதலில் மதுரையில் எளிமையான இடத்தில் ஆரம்பித்தார். இதே இடத்தில்தான் 1942-ல் அவரது 'மதுரை முரசு' பத்திரிகையும் 'தமிழன்'. என்ற வார இதழும் வெளிவந்தன. .தமிழ்நாடு. ஒன்றுபட வேண்டும். அந்நியர் ஆதிக்கம் தமிழகத்தில் ஒழிந்து தமிழர்களே தமிழகத்தை ஆட்சி செலுத்த வேண்டும் என்ற உயர்ந்த நோக்குடன் தமிழன் வெளிவந்தது. தமிழில் முதன் முதலாக இரு வண்ணங்களில் வெளியானதும் தமிழன் பத்திரிகைதான். படைப்பாளர்களுக்கு அன்பளிப்பு வழங்கி ஊக்குவித்த முதல் மாமனிதரும் அய்யா ஆதித்தனார்தான்.

ஆதித்தனாரின் பத்திரிகை வெற்றிக்கு இன்னொரு காரணம் ஊழியர் மீது அவர் காட்டிய அக்கறை. பணமுடை ஏற்பட்டபோதெல்லாம், வெளியில் வட்டிக்குப் பணம் வாங்கி வந்து சம்பளம் கொடுத்திருக்கிறார். படித்த அறிவாளிகளே இயந்திரத்தை இயக்க முடியும் என்ற நிலையை மாற்றிக் கிராமத்தினருக்குப் பயிற்சியளித்து பணியில் சேர்த்துக் கொண்டார். சாதாரணமானவர்களையும் திறமைசாலியான பத்திரிகையாளர்களாக மாற்றினார். தன் பத்திரிகை மூலம் தமிழ் இனத்துக்கு விடியலை ஏற்படுத்திக் கொடுத்தார்.

திருச்செந்தூரில் 'ஆதித்தனார்' கல்லூரியை உருவாக்கி கிராமப்புற ஏழை மாணவர்களைப் பட்டதாரிகளாக்கினார் பத்திரிகைத் துறை மூலம் மட்டுமின்றி அரசியல் மூலமும் ஏழை மக்களுக்கு நன்மைகள் செய்தார். விவசாயிகள் போராட்டத்தைத்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தலைமை ஏற்று நடத்தியதற்காக கைவிலங்கிடப்பட்டு காவலில் வைக்கப்பட்டார்.

'நாம் தமிழர்' என்ற இயக்கத்தைத் தமிழறிஞர்களைக் கொண்டு ஆரம்பித்தார். எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்பதோடு, சுதந்திரத் தமிழகம் வேண்டுமென்று கேட்டவர் ஆதித்தனார்தான்.

சென்னை மாகாணம் என்ற பெயரை மாற்றி 'தமிழ்நாடு' என்று பெயர் வைக்க வேண்டுமென 1957-ம் ஆண்டே சட்டசபையில் முதல் குரல் கொடுத்தார். இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் தன் குடும்பத்தோடு சிறையில் வாடிய பெருமைக்குரியவர் ஆதித்தனார்.

அண்ணாவுடன் இணைந்து ஆட்சியமைத்ததோடு, தமிழகத்தின் பேரவைத் தலைவராகவும் பொறுப் பேற்றார். சட்டசபை நிகழ்ச்சி தொடங்கும்போது முதலில் திருக்குறள் ஒன்றைச் சொல்லி தொடங்கும் முறையையும், சட்டவிதியைத் தமிழிலும் கொண்டு வந்தார். (சட்ட விதிமுறைகளை ஆதித்தனாரே த்மிழாக்கம் செய்துள்ளார்.) தமிழ்நாடு பெயர் மாற்றத் தீர்மானத்தை முன்மொழிந்து நிறைவேற்றினார்.

எடுத்த காரியம் எதிலும் வெ ற்றியே பெற்றுத் தமிழக மக்களின் வாழ்வே தன் உயி மூச்சு என உழைத்த ஆதித்தனார் 24-5-1981-ம் நாள் அமரர் ஆனார். ஆதித்தனாரின் தமிழ்ப் பற்றினாலும், அவர் தமிழுக்குத் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட தியாகத்தாலும் மக்கள் அவரைத் 'தமிழர் தந்தை' என போற்றுகிறார்கள்.

www.tamilarangam.net

23

# புதுமைப்பித்தன்

(25-4-1906)

சமீபத்தில் இஸ்ரேல் பெண்கவிஞர் ஒருவர், 'இங்கே தான் கலந்துகொண்ட நிகழ்ச்சி ஒன்றில், '.எழுத்தின் மூலமாகவே சம்பாதித்து சகல வசதிகளுடன் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் இங்கே நிறையபேர் இருக்கிறார்களா?' என்று கேட்டபோது பெரும்பாலான பதில் இல்லை என்பதே! ஆனால் பெருங்கவிக்கோ வா.மு. சேதுராமன் அவர்கள் மட்டும்.. .ஏன் நானில்லையா?. என்று பதிலளித்தார்.

மேல்நாடுகளைப் போல் எழுத்தையே நம்பி வாழ்க்கையில் உயர்ந்து சிறப்புடன் வாழ்ந்தவர்களும், வாழ்பவர்களும் இந்தியாவில் அதிலும் தமிழகத்தில் மிகக் குறைவே. அப்பாத்துரையார், விந்தன், புதுமைப்பித்தன் போன்ற பலர் வாழ்க்கையில் புகழால் உயர்ந்தபோதிலும் பொருளாதாரத்தில் உயர முடியாமல் வறுமையில் வாடி இறந்தவர்கள்.

இவர்களில் சொ. விருத்தாச்சலம் என்கிற புதுமைப்பித்தன் நெல்லை மாவட்டத்தைப் பூர்வீகமாகக்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கொண்டவர். சொக்கலிங்கம் பிள்ளை - பர்வதத்தம்மாள் தம்பதியருக்கு 25-4-1906-ல் தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ள திருப்பாதிரிப் புலியூரில் பிறந்தவர்.

தென்னாற்காடு மாவட்டத்தில் இவரது தந்தையார் தாசில்தாராகப் பணியாற்றி வந்தார். தனது பிள்ளையும் தாசில்தாராகவோ அல்லது அதற்கு மேலாகவோ வரவேண்டும் என அவர் விரும்பினார். ஆனால் புதுமைப்பித்தனுக்கோ ஊர் சுற்றுவதிலிருந்த விருப்பம் படிப்பில் இல்லை. இதனால் கல்லூரிப் படிப்பைக்கூட மிகத் தாமதமாகவே முடிக்க வேண்டியிருந்தது.

பள்ளி- கல்லூரிக்குச் செல்லாமல் கதைப் புத்தகங்கள் படிப்பதும், பத்திரிகைகளுக்கு ஏராளமான கதைகளை எழுதுவதுமாக இருந்த இவரது செயல்களைத் தந்தையார் வெறுத்தார், விளைவு? திருமணமான வுடனேயே வீட்டைவிட்டுக் கிளம்பவேண்டிய நிலை. வேறு வழியில்லாமல் அக்ரகாரத்து அதிசய மனிதர் வ.ரா.வுக்குக் கடிதம் எழுதிவிட்டுச் சென்னைக்குக் குடிவந்துவிட்டார்.

ஏற்கெனவே மணிக்கொடி போன்ற பத்திரிகைகளில் புதுமைக் கருத்துள்ள கதைகள், படைப்புக்களை எழுதிப் பெயர் பெற்றிருந்த புதுமைப்பித்தனை, வ.ரா.வும் பிற்காலத்தில் தினமணியின் ஆசிரியராக விளங்கிய டி.எஸ். சொக்கலிங்கமும் மணிக்கொடி பத்திரிகையில் சேர்த்துக் கொண்டனர். அப்பத்திரிகையில் வேலை செய்தவாறே ஊழியன் என்ற பத்திரிகையிலும் உதவி

www.tamilarangam.net



ஆசிரியரானார். சுதந்திர சிந்தனை கொண்ட புதுமைப்பித்தன் அவ்விடமும் பிடிக்காமல் வெளியேறினார்.

அவருக்கு அந்த இக்கட்டான சமயத்தில் அதிகபட்சமாக உதவி செய்தது மணிக்கொடி பத்திரிகையும், தினமணி பத்திரிகையும்தான். 1936-ல் மணிக்கொடி நின்றுபோன பிறகு தினமணி ஆசிரியர் குழுவில் இடம் பெற்றார். வருடந்தோறும் மலர் வெளியிடும் பணியைப் புதுமைப்பித்தனே மேற்கொள்வார்.

1943-ல் தினமணியிலிருந்து வெளியேறி டி.எஸ். சொக்கலிங்கம் ஆரம்பித்த .தினசரி. நாளிதழில் சேர்ந்தார். அவருக்குப் போதுமான சம்பளம் கிடைத்து வந்தது. பத்து வருடமாக உழைத்தும் பத்திரிகை உலகில் பணத்தை மிச்சம் பிடிக்க முடியவில்லையே என்ற ஏக்கம் அதிகமானது. அவரோடு இருந்த பலர் சினிமாத் துறையில் முன்னேறிக் கொண்டிருந்தனர். தானும் சினிமாத் துறையில் ஈடுபட்டால் நன்றாகப் பிரகாசிக்க முடியும் என்ற எண்ணம் தோன்றியது. தினசரி பத்திரிகையிலிருந்து வேலையை விட்டுவிட்ட புதுமைப்பித்தன், சுதந்திர எழுத்தாளராக (பிரிலேன்ஸ் ஜார்னலிஸ்ட்) சில காலம் இருந்துவிட்டு சினிமாத்துறையில் பிரவேசித்தார்.

1946-ல் சில திரைப்படங்களுக்குக் கதை வசனம் எழுதும் வாய்ப்பு கிடைத்தது. இதன்மூலம் ஓரளவு பணமும் புரண்டது. எதிர்காலத்தில் மிகவும் வளமான

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வாழ்க்கை அமையும் என நினைத்தார். ஆனால் அதற்கடுத்த வருடத்திலேயே படத்திற்குக் கதை வசனம் எழுதியபோதும் பணம் கைக்கு வராத நிலை ஏற்பட்டது.

இதனால் புதுமைப்பித்தன் மனம் தளரவில்லை. மாறாக மற்றவர்களின் ஆலோசனையைக் கேட்டு சொந்தமாக திரைப்படம் எடுக்க முயன்றார். பர்வதகுமாரி புரொடெக்ஷன்ஸ் என்ற கம்பெனியை ஆரம்பித்து 'வசந்த வல்லி' என்ற படம் தயாரிப்பதாகப் பத்திரிகைகளில் விளம்பரம் செய்தார். விளம்பரத்தோடு அந்தப்படம் நின்று போனது. இதனால் புதுமைப்பித்தனுக்குக் கடன் அதிகமானது. வறுமை மீண்டும் வந்துவிட்டது.

இதன் பிறகுதான் தியாகராஜ பாகவதர் புதுமைப்பித்தனுக்குத் தனது சொந்தப்படமான 'ராஜ முக்தி'யில் கதை எழுதும் வாய்ப்பைக் கொடுத்தார். திரும்பவும் வசதி வந்ததும், புதுமைப்பித்தன் ஆடம்பரமாக வாழத் தலைப்பட்டார். 1947-ம் ஆண்டின் பிற்பகுதியில் கதை வசனம் எழுதுவதற்காக ராஜமுக்தி படத்தயாரிப்புக் குழுவினரோடு பூனா சென்றார்.

அந்த இடம் ஒத்துவராததாலும், சரியான வசதிகள் இல்லாததாலும் புதுமைப்பித்தன் நோய்வாய்ப்பட்டார். அவருக்கு அடிக்கடி இருமல் வரும். பூனாவில் அது அதிகமானது. வழக்கமான இருமல்தானே என்று மற்றவர்கள் நினைத்துவிட்டனர். ஆனால் அது காசநோயாக மாறி, முற்றி புதுமைப்பித்தனின் உயிரைக் கொஞ்சம் கொஞ்சமாகக் குடிக்க ஆரம்பித்திருந்தது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மோசமான உடல்நிலையோடு 1948-ம் ஆண்டின் முதல் வாரத்திலேயே திருவனந்தபுரம் வந்தார். அங்கு அவரது மனைவியும் மகளும் இருந்தனர். தொடர்ந்து சிகிச்சை பெற கையில் காசில்லை.

'நான் நோயின்றி குணமடைவதற்காக யாழ்ப்பாணத்து எழுத்தாளர்களும், வாசகர்களும் எனக்குப் பண உதவி செய்ய முடியுமா?' என்றும், தமிழ் நாட்டுக்கு நான் செய்த சேவை தகுதியானது, மறுக்க முடியாதது. ஆனால் நான் இன்று சாக்க்கிடக்கிறேன். என் நிலையைப் பத்திரிகைகளுக்கு எழுதி உதவி தேடுங்கள் என்றும் நண்பர்களுக்கு எழுதினார்.

ஆனால் பலன் பூஜ்யம்தான். அவருடைய தீவிர ரசிகரான சிதம்பரம் என்பவர் மட்டும் புதுமைப்பித்தனுக்குத் தன்னால் முடிந்த உதவிகளைச் செய்துவந்தார்.

சிதம்பரத்தை அழைத்து, 'இலக்கிய, ஆசை உனக்கு உண்டு. உன் முழு நேர உழைப்பையும் அதற்காக செலவழித்துவிடாதே. இலக்கியத்தைத் தொழிலாகக் கொண்டுவிடாதே. அது உன்னைக் கொன்றுவிடும். இலக்கியம் வறுமையைத்தான் கொடுக்கும்' என்று ஆலோசனை சொன்னார். அதன் பிறகு அந்தக் கொடிய வறுமை நிலையிலேயே 30-6-1948-ல் காலமானார்.

புதுமைப்பித்தன் சிறுகதைகளை மட்டுமின்றிப் பாடல்கள், கட்டுரைகள், விமர்சனங்கள் போன்ற இலக்கியத்தின் பல துறைகளைத்தொட்டவர். ஆனாலும்

www.tamilarangam.net



அவரது சிறுகதைகளுக்காகவே அவர் இன்றும் போற்றப்படுகிறார்.

புதுமைப்பித்தன் இறந்தபின்பு நாம் அவரைச் சிறுகதை இலக்கியத்தின் தந்தை எனப் போற்றிக் கொண்டிருக்கிறோம். இதிலென்ன வியப்பு! நமது முன்னோர்கள் புதுமைப்பித்தனுக்குப் முன்பேயே வறுமையால் சாகவிட்ட பாரதியாரைத்தானே நாம் இன்று தேசியக் கவி என்று போற்றிக் கொண்டிருக்கிறோம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**24**

# நாரண. துரைக்கண்ணன்

(24-8-1906)

தமிழக வரலாற்றில் இரண்டு 'ஜீவா'க்களுக்குச் சிறந்த இடம் உண்டு. அந்த இருவரும் ஒரே வருடத்தில் பிறந்தவர்கள் ஒரே காலத்தில் வாழ்ந்து புகழ் பெற்றவர்கள். ஒருவர் பொதுவுடைமைக் கட்சியின் தலைவராகவும், அப்பழுக்கற்ற அரசியல்வாதியாகவும் விளங்கிய ப.ஜீவானந்தம் அவர்கள். இன்னொருவர் முதுபெரும் இலக்கியவாதி; பத்திரிகையாளர்; பொதுநலத் தொண்டர்; புதுமை எழுத்தாளர் என்று போற்றப்படும் நாரண துரைக்கண்ணன் அவர்கள். நாவல், சிறுகதை இலக்கியங்களை .ஜீவா. என்ற பெயரில் எழுதியவர். இவருக்குப் பின்னரே ப. ஜீவானந்தம் அவர்கள் தம்பெயரையும் 'ஜீவா' என மாற்றிக் கொண்டு, புகழ் பெற்றார்.

நாரண துரைக்கண்ணன் என்கிற ஜீவா, சென்னை மயிலாப்பூரில் நாராயண சாமி-அலமேலு மங்கைத் தாயார் தம்பதிகளுக்கு முதல் பிள்ளையாக 24-8-1906-ல் பிறந்தார். தந்தையை இழந்து, இளமையில் வறுமையில் வாடினார். படிப்பதற்கு வசதியில்லாமல் திண்டாடினார்.

www.tamilarangam.net



ஜீவாவின் தமிழ் ஆர்வத்தைக் கண்ட மறைமலை அடிகளார், வாரத்தில் ஒரு நாள் வீதம் ஏழு ஆண்டுகள்வரை ஜீவாவுக்குத் தமது இல்லத்திலேயே தமிழ் கற்றுத்தந்தார். அவருடைய எழுத்து ஆற்றலைக் கண்டு அவரை பத்திரிகையாளராக்கியவர் பாரதியின் அன்பரான பரலி சு. நெல்லையப்பர்.

முறையாகப் பள்ளிக்கூடம் செல்லாவிட்டாலும், சென்னையில் அக்காலத்தில் புகழ் பெற்றிருந்த 'கமர்சியல்' அச்சகத்தில் பிழை திருத்தும் பணியில் (புரூப் ரீடர்) சேர்ந்தார். பல பத்திரிகைகளில் எழுதி வந்தார். பிறகு 'லோகோபகாரி' என்ற பத்திரிகையின் துணை ஆசிரியரானார். அப்போதுதான் ராஜாஜி வ.உ.சி போன்ற தலைவர்களுடன் பழகும் வாய்ப்பு ஏற்பட்டது. பிறகு 'தேசபந்து', 'திராவிடன்'! 'தமிழ்நாடு', 'ஆனந்தபோதினி', 'பிரசண்டவிகடன்' போன்ற பத்திரிகைகளில் நீண்டகாலம் ஆசிரியராகப் பணிபுரிந்தார்.

இளம் எழுத்தாளர்களை வளர்க்க வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தில், தனது பத்திரிகைகளுக்கு வரும் படைப்புகளைப் பெரும்பாலும் ஜீவா திருப்பி அனுப்பியதில்லை. அவற்றைத் திருத்தி வெளியிடுவார். அவர் அறிமுகப்படுத்திய எழுத்தாளர்கள் பின்னாளில் தமிழகத்தில் பிரபலம் அடைந்திருக்கிறார்கள்.

ஜீவா சிறந்த பண்பாளர். சமூகத்தில் காணும் குறைகளை எடுத்துக்காட்டி, அவற்றை நீக்கி,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சீர்திருத்தத்தைப் புகுத்தி மக்களை நெறிப்படுத்துவதே சிறந்த படைப்பு எனக் கருதி, அதற்கு ஏற்பவே எழுதினார். அதற்காகவே கதைகளைக் கருவியாக்கிக் கொண்டார். பெண்ணுரிமைக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்பதில் முன்னின்று முனைப்புடன் முழங்கியவர் ஜீவா. .விதவைத் தளையில் கட்டுண்டு விடுதலையடைய வழி காணாது வருந்தும் எனது தமிழ் நாட்டுச் சகோதரிகளுக்கு எனது இந்த நூல் அர்ப்பணம். என்று .யான் ஏன் பெண்ணாய் பிறந்தேன்.? என்ற நூலின் முதல் பக்கத்தில் எழுதினார். பெண்களை முதன்மைப்படுத்தியே நாவல்கள் எழுதினார்.

ஜீவா எளிமையானவர். ஆனால் அறிவு வளம்மிக்கவர். அவர்மீது கொண்டிருந்த குருத்துவ மரியாதையின் காரணமாகவே தனது பெயரை (நாராணதுரைக்) கண்ணதாசனாக வைத்துக் கொண்டதாக கவியரசர் கண்ணதாசன் பலமுறை சொல்லியிருக்கிறார். ராஜாஜியின் வாழ்க்கை வரலாற்றையும், பெரியாரின் வாழ்க்கையை 'ஈரோட்டு வள்ளல்' என்ற தலைப்பிலும் முதன்முதலாக எழுதியவர் ஜீவா. பாரதியாரின் பா்டல்கள் நாட்டுடைமை ஆக்கப்பட வேண்டும் என்பதற்காகத் தனி இயக்கம் நடத்தியவர்களில் ஜீவா குறிப்பிடத்தக்கவர். பாரதியின் பாடல்களை நாட்டுடைமை ஆக்கி, பாரதியின் குடும்பத்தாருக்கு அரசாங்கம் மூலம் உதவித்தொகை பெற்றுத்தர ஜீவா ஈடுபட்டிருந்த காலத்தில்தான், அவரது

www.tamilarangam.net



மகள் நோய்வாய்ப்பட்டு கவனிக்க ஆளின்றி இறக்க நேர்ந்தது.

'தென்னிந்திய பத்திரிகையாளர் பெருமன்றம்' அமையக் காரணமாக இருந்த ஜீவா, ஸ்ரீ நடராஜா கல்விக்கழகம், சென்னை மகாஜனசபை, தமிழ் வாசகர் கழகம் போன்றபல அமைப்புகளில் பங்குகொண்டு தமிழ்த் தொண்டு செய்தார். நடராஜா கல்விக் கழகம் சார்பில் விழாநடத்தி, திரு.வி.க. அவர்களால் என்.எஸ்,கிருஷ்ணன் அவர்களுக்கு 'கலைவாணர்' என்னும் விருதை வழங்க வைத்தவர் ஜீவா. அறிஞர் அண்ணாவை, 'இதோ ஓர் இப்சன்', 'செகாவ் பெர்னாட்ஷா' என்ற சிறந்த நாடக ஆசிரியராக திரு.வி.க. பாராட்டியதும் ஜீவா தலைமையில் நடந்த விழாவில்தான்.

பெரியார் சோவியத் ரஷ்யா சென்று திரும்பியபோது, பத்திரிகையாளர் சார்பில் வரவேற்றுப் பாராட்டுவிழா நடத்தினார். நாற்பது ஆண்டு காலம் பெரியாருடன் நட்புறவு கொண்டிருந்தும் கொள்கையில் வேறுபட்டு ஆத்திகராகவே இருந்தார். ஈரோட்டில் பிள்ளையார் கோயில் கட்டி, பத்திரிகையாளர்களைக் கொண்டு விழா எடுத்தார். நான் பிள்ளையாரை உடைத்துக் கொண்டிருக்கிறேன். நீங்கள் என் ஊரிலேயே பிள்ளையாருக்குக் கோயில்கட்டி, திறப்புவிழா நடத்திவிட்டு வருகிறீர்கள். என்று ஜீவாவை பெரியார் கேட்டாராம். ஜீவா எழுதிய 'தீண்டத் தகாதார் யார்?' என்ற நாடகத்தை சுய மரியாதை இயக்கத் தலைவர்களான

www.tamilarangam.net



குத்தூசி குருசாமி. எம்.கே. பாலசுப்பிரமணியம், ஆகியோர் தமிழகம் எங்கும் நடித்தனர்! 'யான் ஏன் பெண்ணாய்ப் பிறந்தேன்', தாசிரமணி, உயிரோவியம் போன்ற ஜீவாவின் நாவல்கள் பிரபலமானவை.

உயிரோவியம் நாடகமாக்கப்பட்டு உலகின் பல நாடுகளில் நடிக்கப்பட்டது. 1952-ல் உலகிலேயே மிகச் சிறந்த நாடகமாக அது தேர்ந்தெடுக்கப்பட்டது. இந்த நாடகத்தைத் தமிழக முதல்வர்களாக பதவி வகித்த ஓமத்தூர் பி. ராமசாமி ரெட்டியார், பெருந்தலைவர் காமராசர், எம். பக்தவத்சலம் ஆகியோர் பாராட்டினர். ஓ.பி. ராமசாமி அவர்கள் 'தங்கப்பதக்கம்' கொடுத்து ஜீவாவைக் கௌரவித்தார்.

நாடக வளர்ச்சிக்குப் பாடுபட்டமைக்காக இவருக்கு 1954 கலைமாமணிப் பட்டமும், 1980-ல் தமிழக அரசு திரு.வி.க. விருதும் வழங்கிச் சிறப்பித்தது. 127 நூல்களுக்கு மேல் எழுதிய ஜீவா, புதுமைப்பித்தன் மறைந்தபோது தமிழ் எழுத்தாளர்கள் சங்கத்தின் சார்பில் நிதி திரட்டி அவரது குடும்பத்தாருக்குப் பண முடிப்பும், சென்னையில் சொந்தமாக வீடும் வாங்கிக் கொடுத்தார். பல பொது பிரச்சினைகள் சம்பந்தமான நிகழ்ச்சிகளை ஜீவாவின் தலைமையிலேயே பெரியார், அண்ணா, ப.ஜீவானந்தம் போன்றவர்கள் நடத்தியிருக்கிறார்கள். முறையாக கல்விச்சாலைக்குச் செல்லாமல் இருந்தும் கவிதை, கதை, நாவல், நாடகம் எனப் பலதுறைகளில் மேதையாக விளங்கினார் ஜீவா. தனது வாழ்க்கையைப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பத்திரிகைத் துறைக்கு முழுவதுமாக அர்ப்பணித்த இவருக்குத் தலைசிறந்த முதுபெரும் எழுத்தாளர் என்ற வகையில் அவரது எழுத்துலக சேவையைப் பாராட்டி ரூ 50 ஆயிரம் ரொக்கப் பரிசுடன் கூடிய ஆதித்தனார் விருது 1995-ம் ஆண்டு வழங்கப்பட்டது. 1996-ம் ஆண்டு இவர் காலமானார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

25

# அறிவுச்சுரங்கம் அப்பாத்துரையார்

(24-6-1907)

அப்பாத்துரையாரைப் பற்றிக் கேட்டால் பெரும்பாலானவர்கள் அப்பாத்துரை யார்? என்பார்கள்.

இவர் 40 மொழிகளுக்கு மேல் அறிந்த பன்மொழிப்புலவர். இவரது முதாதையர் அனைவருமே பல மொழிகளைத் தெரிந்தவர்கள். (பன்மொழி அறிதல் குடும்பச் சொத்து இவர்களுக்கு) இவர் 125 நூல்களுக்கு மேல் எழுதியவர். வெளிவராதவை ஏராளம்.

**'அப்பாத் துரைக் கொண்டு**
**ஆயிரம் நூல் செய்க,**
**தப்பா துயரும் தமிழ்'.**

என்று பாவேந்தரால் பாராட்டப்பட்டதோடு அவரால் ஆதரிக்கப்பட்டவர். இந்தி ஆசிரியராக இருந்து கொண்டு இந்தி எதிர்ப்புப் போராட்டம் நடத்தியவர். தமிழ்தான் இந்தியாவின் தேசிய மொழியாக-உலகின் பொது மொழியாக இருப்பதற்குத் தகுதி உடையது. என்பது இவர் உயிர் மூச்சுக் கொள்கை. (காந்தியடிகளின் கொள்கையும் இதுதான் என்கிறார் அப்பாத்துரையார்).

www.tamilarangam.net



அப்பாத்துரையார் கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆரல்வாய்மொழியில் 24-6-1907-ல் பிறந்தார். இவரது பெற்றோர் காசிநாதப்பிள்ளை-முத்துலக்குமி அம்மாள் தம்பதியினர். அப்பாத்துரையாரின் இயற்பெயர் நல்லசிவம்.

ஆரல்வாய்மொழியில் திண்ணைப் பள்ளியிலும் குலசேகரன் பட்டினத்திலும், பின்னர் திருவனந்தபுரத்தில் பி.ஏ. ஆனர்ஸ் என்ற பட்டப்படிப்பும் படித்தவர். பன்மொழிகளில் பட்டம் பெற்றவர். இங்குப் படிக்கையில் நண்பர்களின் இல்லங்களில் தங்கியே பயின்றார்.

கூட்டுறவுத்துறையிலும், திராவிடன், 'ஜஸ்டிஸ்', குமரன், விடுதலை ஆகிய பத்திரிகைகளிலும் பணியாற்றியவர். இந்தியா, பாரததேவி, சினிமா உலகம், தாருல் இஸ்லாம், லோகோபகாரி ஆகிய பத்திரிகைகளுடன் தொடர்புடையவர்.

ராஜாஜி முதல் அமைச்சராக இருந்த போது நெல்லை எம்.டி.டி இந்துக் கல்லூரிப்பள்ளியில் இந்தி ஆசிரியராகவும் செட்டிநாடு அமராவதிப்புதூரில் இருந்த சா.சு. சுப்பிரமணியம் செட்டியார் குருகுலப் பள்ளியில் ஆசிரியராகவும் பணியாற்றியவர். இது தவிர பல பள்ளிகளில் ஆசிரியராக இருந்தவர். கவியரசர் கண்ணதாசன் இவருடைய மாணவர்.

பெரியார், நாவலர் சோமசுந்தர பாரதியார், பேரறிஞர் அண்ணா போன்றவர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர். இந்தியைத் தெரியாதவர்கள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இந்தியை எதிர்ப்பதைவிட இந்தியைத் தெரிந்தவர் அதை எதிர்ப்பதுதான் பொருத்தமானது என்பார்கள் அண்ணாவும். பெரியாரும் சென்னைக்கு வந்து 1947 முதல் 1949 வரை மைய அரசின் செய்தி தொடர்புத்துறையில் பணியாற்றியபோது மறைமலை அடிகளாரின் முன்னுரையோடு .இந்தியாவில் மொழிச்சிக்கல். என்ற ஆங்கில நூலை எழுதியதால் பணியிழந்தவர் அப்பாத்துரையார்.

பேரறிஞர் அண்ணா, பேராசிரியர் அன்பழகன் ஆகியோரின் தூண்டுதலின் காரணமாகச் சென்னைப் பல்கலைக்கழகத்தில் ஆங்கிலத் தமிழ் அகராதித்துறையில் பணியாற்றியவர். இவரது முயற்சியால் வெளிவந்த பல்கலைக்கழகத் தமிழ் அகராதியை இன்றும் போற்றாதவர் இல்லை.

1961-ல் தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவராக இருந்த இவர் திருக்குறளுக்கு ஆங்கிலத்தில் விளக்கவுரை எழுத ஆரம்பித்தார். முன்னுரை மட்டும் ஐநூறு பக்கங்கள். திருக்குறளின் 38 அதிகாரங்களை மட்டுமே மொழி பெயர்த்திருக்கிறார். தமிழிலும் எழுதியிருக்கிறார். ஆனால் அவை வெளிவரவில்லை.

அப்பாத்துரையார் அவர்கள் சிறந்த தமிழ்மொழிப்பற்றாளர். ராஜாஜி 'இந்திதான் படிப்பதற்குச் சுலபமான மொழி' என்று சொன்னபோது, எங்களைப் போன்ற ஆசிரியர்களின் கடுமையான முயற்சியால்தான் இந்தி எளிமையான மொழியாகத்

www.tamilarangam.net



தோன்றுகிறது என்றும், சமஸ் கிருதத்திற்கும் தாய்மொழி தமிழ்தான் என்றும், இதுதான் உலகத்தின் பொதுமொழியாவதற்குத் தகுதியானது என்றும் வலியுறுத்தியவர்.

கால்டுவெல்லின் ஒப்பிலக்கணத்தைச் சுருக்கி எழுதியதோடு, ஆங்கிலத் தமிழ் அகர வரிசையை உருவாக்கியவர். 1935-ல் தொடங்கி அவர் எழுதிய புத்தகங்கள் ஏராளம். அவர் பெயரிடப்படாமல் வெளிவந்த நூல்களும் அதிகம்.

பெரியார், அண்ணா, பாவேந்தர், கலைஞர், பேராசிரியர் போன்றவர்களால் பெரிதும் போற்றப்பட்ட இவர் பிற்காலத்தில் உயிருடன் இருக்கிறாரா என்ற சந்தேகம் ஏற்பட்டுப் போனது. அந்தளவுக்கு ஏழ்மை இவரைப் பற்றிக் கொண்டது. அண்ணா இவருக்கு வேலை கிடைக்க ஏற்பாடு செய்தாராம். ஆனால் அண்ணா காலமானதும் அவரது வேண்டுகோள் கிடப்பில் போடப்பட்டது என அப்பாத்துரையார் புலம்பியிருக்கிறார்.

அப்பாத்துரையாரின் மனைவி அலமேலு அம்மையார். இவர் பெரியார் இயக்கத்தில் தீவிரத் தொண்டராக இருந்தவர். பிற்காலத்தில் அப்பாத்துரையாருக்கு கலைஞர் தலைமையில் நிதிதிரட்டித் தரப்பட்டது. அதைப் பெற்றுக்கொண்ட அலமேலு அம்மையார் நெருக்கடிநிலை காலத்தில் 'அஞ்சுகம்' என்ற பெயரில் நடத்திவந்த அச்சகத்தின்

www.tamilarangam.net



பெயரை மாற்றியதோடு அ.தி.மு.க.வில் சேர்ந்துவிட்டார். அதன் பிறகுதான் அவரோடு அப்பாத்துரையாரும் மறக்கப்பட்டு வறுமையில் வாடி 26-5-1989-ல் காலமானார்.

அப்பாத்துரையார் இருக்கிறாரா, இறந்துபோனாரா என்று தெரியாதிருந்த நிலையில் அவரைப்பற்றி உலகுக்கு தெரியப்படுத்தியவர் முகம் மாத இதழின் ஆசிரியர் மாமணி அவர்கள். அப்பாத்துரையாருடன் பழகி அவரது வாழ்க்கை வரலாற்றைத் தொடராக வெளியிட்டதோடு தனி நூலாகவும் வெளிபிட்டுள்ளார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**26**

# மு. வரதராசனார்

(25-4-1912)

சாதாரண எழுத்தராக இருந்து உலகம் புகழும் அறிஞராகவும், பல்கலைக்கழக துணைவேந்தராகவும் உயர்ந்த தமிழர் ஒருவர் நம்மிடையே வாழ்ந்தார். அவர்தான் மு.வ.என அன்புடன் அழைக்கப்பட்ட டாக்டர் மு.வரதராசனார்.

மு.வரதராசனார் வட ஆற்காடு மாவட்டத்தில் திருப்பத்தூரை அடுத்த .வேலம். என்னும் சிறிய கிராமத்தில் 25-4-1912ல் முனிசாமி- அம்மாக்கண்ணு என்னும் தம்பதியினருக்கு மூன்றாவது மகனாகப் பிறந்தார். மு.வ.வுக்குப் பெற்றோர் இட்ட பெயர் 'திருவேங்கடம்', இளமையில் தனது தாய்வழிப் பாட்டியாரிடம் வளர்ந்தார். திருப்பத்தூரில் பள்ளிப்படிப்பை (எஸ்.எஸ்.எல்.சி.வரை) படித்து விட்டு, மேற்கொண்டு படிக்கும் வசதி இல்லாததால், 1928-ல் திருப்பத்தூர் வட்ட ஆட்சி அலுவலகத்தில் எழுத்தராகப் பணியில் சேர்ந்து நேர்மையாகவும், கடமை தவறாமலும் பணியாற்றினார். கதராடையை மட்டுமே அணிவார். வேலூருக்குப் பணி மாற்றம் செய்யப்பட்ட

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



போது வெள்ளைக்கார அதிகாரிகள் கதராடை அணியும் வரததராசனாருக்குத் தொல்லை தரலாம் என மற்றவர்கள் அஞ்சினார்கள். ஆனால், 'வேலை போனால் போகட்டும், என் ஆடை மட்டும் மாறாது' என்று உறுதியோடு கூறிப் பணிக்குப் புறப்பட்டார். பிறகு ஆஸ்துமா (ஈளை நோய்) நோயால் பாதிக்கப்பட்டு 1931-ல் எழுத்தர் பணியைக் கைவிட்டார்.

நோயுற்றுப் படுக்கையில் இருந்த போதுதான் தமிழ் படிக்கத் தொடங்கினார். இரவுபகல் பாராது படித்து வித்துவான் தேர்வில் மாநிலத்திலேயே, முதல்வராகத் தேர்ச்சி பெற்றுத் திருப்பனந்தாள் மடத்துப் பரிசாக ஆயிரம் ரூபாயைப் பெற்றார். திருப்பத்தூரில் பள்ளி ஆசிரியராகப் பொறுப்பேற்றார்.

வரததராசனார் இளகிய மனம் படைத்தவர். அவர் எதிரில் மலர்களைப் பறித்தாலும், மழலையர் மனம் பதைத்தாலும் பொறுத்துக் கொள்ளமாட்டார். ஏழைப் பிள்ளைகளுக்கு இலவசமாகப் பாடம் கற்பித்தார். தம்மால் முடிந்த அளவு பிறருக்கு உதவுவார். முடியாத நிலையில் பிள்ளைகளுக்காக செல்வர்களிடம் உதவி கேட்டுச் செல்வார். திருப்பத்தூரில் பணியாற்றிய போதுதான் .செந்தமிழ்ச்செல்வி. என்ற இதழில் பல்வேறு பொருளில் கட்டுரைகள் எழுத ஆரம்பித்தார். இதுவே அவரது எழுத்துப் பணியின் தொடக்கம்.

சென்னைப் பல்கலைக் கழகம் நடத்திய பி.ஓ.எல். பட்டத்தேர்வில் முதல் வகுப்பில் வெற்றி பெற்றார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



1939-ல் சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் தமிழ்த்துறையில் பணிக்குச் சேர்ந்தார். அப்போதைய மாதச் சம்பளம் அறுபது ரூபாய். பதவி உயர்வுபெற்று, .கீழ்த்திசை மொழிகளின் விரிவுரையாளர். என்ற பதவிக்கு நியமிக்கப்பட்டார். சென்னைப் பல்கலைக்கழகத்தில் பி.ஓ.எல் பட்டப்படிப்பு முதன் முதலாக பச்சையப்பன் கல்லூரியில்., தொடங்கப்பட்டது. அதற்குக் காரணமானவர் டாக்டர் மு.வ. சென்னைப் பல்கலைக் கழகத்தின் சிறப்புப் பேராசிரியராகவும் பொறுப்பேற்றார்.

1945-ல் பச்சையப்பன் கல்லூரியில் தமிழ்த் துறை தலைவர் ஆனார். 'மொழி நூல்' என்னும் நூலை வெளியிட்டார். அதற்கு முன்பே 1944-ல் தமிழ் வினைச்சொற்களின் தோற்றமும், வளர்ச்சியும் என்ற தலைப்பில் ஆராய்ச்சி செய்து எம்.ஓ.எல். பட்டமும் 1948-ல் 'பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை' என்ற தலைப்பில் ஆராய்ச்சிக் கட்டுரை எழுதி டாக்டர் பட்டமும் பெற்றார். சென்னைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த் துறையில் டாக்டர் பட்டம் பெற்ற முதல் நபர் டாக்டர் மு.வ. 1961-ஜூலை முதல் நாள் சென்னைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறைத் தலைவரானார். மிகச் சிறந்த அறிவாளியான மு.வ.தான் வெளியிடும் நூல்களுக்குப் புகழ் பெற்றவர்களை நாடாமல் தமது மாணவர்களையே அணிந்துரை எழுதச் சொல்வார். ஒவ்வொரு மாணவரும் தங்களை மு.வ.வின் மாணவன் என்று சொல்லிக் கொள்வதில் பெருமைப்பட்டுக் கொண்டனர்.

www.tamilarangam.net



மு. வரதராசனார் மீது திரு.வி.க. பேரன்பு கொண்டிருந்தார். இருவரும் ஒவ்வொரு ஞாயிறுதோறும் சந்தித்துக் கொள்வார்கள். திரு.வி.க. அவர்களைத் தம் வாழ்க்கையின் வழிகாட்டியாக மு.வ. கருதினார். திரு.வி.க.வின் வாழ்வைப் புத்தகமாக எழுதினார். சென்னையில் உள்ள திரு.வி.க. பள்ளிக்கு தன் சொந்தப் பணத்தை அளித்தார். .பெற்ற மனம். என்ற நாவல் திரைப்படமாக்கப்பட்டபோது அதற்கான தொகை ஐயாயிரத்தை அப்பள்ளிக்குக் கொடுத்தார். இப்படி திரு.வி.க.வின் மீதுள்ள அன்பைப் பல வழிகளில் வெளிக்காட்டினார் வரதராசனார்.

முதல் உலகத் தமிழ் மாநாடு 1966-ல் மலேசியாவில் நடை பெற்றது. அதில் கலந்து கொண்டு சிறப்பாகச் சொற்பொழிவாற்றினார். இலக்கியத் துறைக்கான பத்மஸ்ரீ. விருது வழங்கப்பட்டபோது அதை ஏற்க மறுத்துவிட்டார்.

சென்னை, வெங்கடேசுவரா, அண்ணாமலை ஆகிய பல்கலைக்கழகங்களின் பேரவை (செனட்) உறுப்பினராகவும், கேரளம், மைசூர், உஸ்மானியா, பெங்களூர், ஆந்திரா, டில்லி, மதுரை, கேம்பிரிட்ஜ் ஆகிய பல்கலைக்கழகங்களின் பாடத்திட்டக் குழுவிலும் மு.வ.இடம் பெற்றிருந்தார். அவருடைய நூல்களுள் 'கள்ளோ? காவியமோ?' ஒவச் செய்தி (இலக்கிய ஆராய்ச்சி) 'மொழி இயற்கட்டுரைகள்' (மொழி ஆராய்ச்சி) என்ற மூன்றும் சென்னை அரசாங்கத்தின் பரிசு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பெற்றன.'திருவள்ளுவர் அல்லது 'வாழ்க்கை விளக்கம்', 'மொழிநூல்' என்ற நூல்கள் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் பாராட்டு பெற்றது. 'அகல் விளக்கு' என்ற புதினம் 1961-ம் ஆண்டுக்கான 'சாகித்திய அகாதெமி' பரிசு பெற்றது. இலக்கியத்தின் எல்லாத்துறைகளிலும் எழுதி, அவை எலலாவற்றிலும் மற்றவர்களைவிடத் தனித்தன்மையுடன் விளங்கியவர் மு.வ. தமிழக இளைஞர் மத்தியில் அரசியல் சார்பற்ற வேறு எந்த எழுத்தாளரும் பெறாத மாபெரும் புகழைப் பெற்றவர் மு.வ. மட்டுமே! இலக்கியத்தில் அவர் தொடாத பகுதி எதுவுமே இல்லை. அத்தனையிலும் தனி முத்திரை பதித்தவர். அவர் ஏராளமான ஆய்வுக் கட்டுரைகளையும், நூல்களையும் எழுதி இருக்கிறார்.

பல வெளிநாடுகளுக்குச் சென்று வந்தார். இரண்டாம் உலகத்தமிழ் மாநாட்டின் போது அறிஞர் அண்ணா நிறுவிய பாரதிதாசன் சிலையை டாக்டர் மு.வ.தான் திறந்தார். பாவேந்தர் மரணமடைந்தவுடன் மருத்துவ மனையில் இருந்து அவர் உடலை எடுத்துச் செல்ல சவ ஊர்தி கிடைக்காதபோது தனது காரைக் கொடுத்து உதவியிருக்கிறார். அறிஞர் அண்ணாவும் கலைஞர் கருணாநிதியும் மு.வ.வின் மீது அளவற்ற மதிப்பும் மரியாதையும் கொண்டிருந்தனர்.

தமது அறிவாலும், ஓய்வில்லாத உழைப்பாலும் உயர்ந்த வரதராசனாரை மதுரைப்பல்கலைக் கழகத் துணைத் வேந்தர் பதவி 11-1-1971-ம் ஆண்டு தேடி

www.tamilarangam.net



வந்தது. பல அரிய பணிகளை அப்பதவியிலிருக்கும் போது செய்தார். அஞ்சல் வழிக் கல்வியை முதன் முதலாக அறிமுகப்படுத்தி மதுரைப் பல்கலைக்கழகத்தின் பெருமையை உயர்த்தினார். பலமொழிகளில் வெளியான 'தமிழ் இலக்கிய வரலாறு' எழுதிய டாக்டர் மு.வ.வை அமெரிக்க அரசு அழைத்தது. அங்குள்ள 'ஊஸ்டர்' கல்லூரி அவருக்கு '.டி லிட். பட்டம் தந்தது. அமெரிக்காவிடமிருந்து அப்பட்டம் பெற்ற ஒரே தமிழறிஞர் டாக்டர் மு.வ.மட்டுமே! 'என் கடைசி மூச்சு உள்ளவரையில் ஏதாவது எழுதிக் கொண்டே இருப்பேன். எழுத முடியாத போது சொல்லிக் கொண்டாவது இருப்பேன்' என்று முழங்கிய மு.வ.வுக்கு திடீர் உடல் நலக் குறைவு ஏற்பட்டது. நாடித்துடிப்பு அதிகமாக இருந்த போது கூட, 'ஓ! என்னுடைய இதயம் என்னோடு பேசுகிறது. அது என்னென்ன பேசுகிறது என்பதையெல்லாம் குறித்து வைக்க வேண்டும். தாளும் பேனாவும் தாருங்கள்' என்று மருத்துவ மனையிலிருந்தபடி கேட்ட மு.வ. 1974-அக்டோபர் பத்தாம் நாள் இயற்கை எய்தினார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

27

# விந்தன்

(22-9-1916)

செங்கற்பட்டு மாவட்டத்தில் நாவலூர் என்ற சிற்றூரில் 22-9-1916-ல் விந்தன் பிறந்தார். இவருடைய பெற்றோர் வேதாசலம் - ஜானகியம்மாள் தம்பதியினர். பெற்றோர் இவருக்கு சூட்டிய பெயர் கோவிந்தன், வறுமையும், அறியாமையும் மிகுந்த குடும்பத்தில் பிறந்து, நடுநிலைப் பள்ளியை முடிப்பதற்குக்கூட வசதி இல்லாமல் தந்தையுடன் பொற்கொல்லுப் பட்டறை வேலைக்குச் சென்று வந்தார். இரவு நேரங்களில் இலவச இரவுப்பள்ளியில் படித்தார்.

ஓவியம் கற்று, ஜெமினி ஸ்டுடியோ விளம்பரப் பிரிவில் ஓவியராகச் சேர்ந்தார். ஓவியர் வேலை தரித்திரமான தொழில். என அவருடைய பாட்டனார் தடுத்த பிறகு விந்தனின் நண்பர் ராஜாபாதர். என்பவர் மூலம் தமிழரசு. அச்சகத்தில் அச்சுக்கோர்க்கும் தொழிலாளியாக பணியில் சேர்ந்தார். புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் தமிழுக்கும் அமுதென்று பேர். என்ற கவிதையை முதன் முதலாக அச்சுக் கோர்த்தவர் மக்கள் எழுத்தாளர் விந்தன்தான்.

www.tamilarangam.net



அச்சுக்கோர்க்கும் தொழிலில் நாள் ஒன்றுக்கு ஆறணா கூலிமட்டுமே பெற்றார். தமிழரசு அச்சகத்துக்குப் பின் ஆனந்தபோதினி, ' தாருல் இஸ்லாம்', போன்ற அச்சகங்களுக்கும் மாறி அனுபவம் மிக்க .அச்சுக்கோப்பாளராக. ஆனந்தவிகடன் அச்சகத்தில் சேர்ந்தார். அங்கு சேர்ந்த பிறகே விந்தன் எழுத ஆரம்பித்தார்.

சிக்கனத்தோடு இருந்து சிறிது பணம் சேமித்து வைத்தார். குடும்பத்திற்கு நிரந்தரமான வருவாய் வேண்டுமென்பதற்காக 'ராயல் ஓட்டல்' என்னும் பெயரில் மிலிட்டரி ஓட்டல் ஆரம்பித்து, அனுபவம் இல்லாததால் நட்டமடைந்தார். வேறுவழியின்றி வேலூருக்கு நடைபயணமாகவே சென்று அங்கு அச்சுத் தொழிலில் ஈடுபட்டார்.

விந்தனைப் பேராசிரியர் கல்கியிடம் அறிமுகப்படுத்தி பணிக்குச் சேர்த்தார் ராஜாபாதர். தமிழ் இலக்கிய உலகிற்கு கல்கிதான் விந்தனை அறிமுகப் படுத்தினார். விந்தனைத் துணையாசிரியராக் கியதோடு 'விஜி' என்று பெயர் வைத்துக்கொண்ட கோவிந்தன் பெயரை விந்தன் என்று மாற்றி கோவிந்தனை விந்தனாக்கினார் கல்கி. அப்பெயரே விந்தனுக்கு பாராட்டைப் பெற்றுதந்தது. கல்கி விந்தனுக்கு வாய்ப்பும், சுதந்திரமும் கொடுத்து வளர்த்தார். அதனால் கல்கியைத் தன் '.குரு'வாக விந்தன் ஏற்றுக் கொண்டார். விந்தனை துணையாசிரியராக .கல்கி. சேர்த்துக்கொண்டபோது 'ஒரு

www.tamilarangam.net



தொழிலாளி துணையாசிரியராவதா?' என ஒரு சிலர் கல்கியிடமே வாதாடி தோற்றுபோனார்கள்.

விந்தன் 'பொன்னி' இதழில் 'நக்கீரன்' என்ற பெயரில் 'கண்திறக்குமா?' என்ற நாவலை தொடர்கதையாக எழுதியபோது கல்கியிடம் பிடிபட்டார். தண்டனை என்ன தெரியுமா? 'கல்கி' இதழுக்கு தொடர்கதை ஒன்று எழுத வேண்டும் என்பதுதான். அதற்காக 'பாலும், பாவையும்' என்ற கதையை எழுதினார். இது மக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றது. விந்தன் எழுதிய முதல் சிறுகதை 'முல்லைக் கொடியா'. இது தமிழ் வளர்ச்சிக்கழகத்தின் முதல் பரிசை வென்றது. அக்கழகத்தில் பரிசு பெற்ற முதல் எழுத்தாளர் என்ற சிறப்பு விந்தனுக்குக் கிடைத்தது.

விந்தன் பத்திரிகை உலகில் வெற்றிகரமாக இருந்தபோதுதான் சினிமா ஆசை அவரைத் தொற்றிக் கொண்டது. 'பிரச்சினை மிகுந்த வாழ்க்கைக்கு சினிமாவே ஆறுதல் அளிக்கும்' என விந்தன் நம்பினார். பத்து ஆண்டுகளாகக் கல்கியில் துணை ஆசிரியராக இருந்ததை விட்டுவிட்டு ஏ.வி.எம். மின் கதை இலாகாவில் சேர்ந்தார். அங்கிருந்த கட்டுப்பாடுகள் ஒத்துவராததால் விலகி, சுதந்திர சினிமா எழுத்தாளராக முயன்றார். ஆனால் கிடைத்ததோ தோல்விதான். சிவாஜி, எம்.ஜி.ஆர் நடித்த 'கூண்டுக்கிளி' சிவாஜி நடித்த 'அன்பு' போன்ற சில படங்களுக்கு வசனமும், பாடல்களும் எழுதியிருக்கிறார் சகோதர எழுத்தாளர்களான ஜெயகாந்தன், சாண்டில்யன் போன்றோர் சிலரின் கதைகளைத் தொகுத்து

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வெளியிடுவதற்காகவே 'புத்தகப் பூங்கா' என்ற பதிப்பகத்தை ஆரம்பித்து நட்டமடைந்தார்.

தான் சேமித்து வைத்திருந்த சினிமா பணத்தில் 'மனிதன்' என்ற பத்திரிகையை ஆரம்பித்தார். ஒன்பது இதழ்களே வெளிவந்த மனிதன், விந்தனுக்கு பெரும் பண இழப்பை ஏற்படுத்திவிட்டு வெளிவராமல் நின்றது. சுயமரியாதை மிக்கவரான விந்தனுக்கு சினிமா ஒத்துவரவில்லை. இடையில் வந்த செல்வங்கள் வேகமாகப் போய்விட்டன. அதன் பின் 25 ஆண்டுகாலமாக செத்துச் செத்து பிழைக்க வேண்டிய நிலையில் விந்தன் தவித்தார். .வாழ்க்கையின் பிரச்சினைகளுக்கு இடையே பிறந்தும் வளரமுடியாத என் நாவல்களை சர்வ வல்லமை உள்ள காசால் தான் காப்பாற்ற முடியுமா? கடவுளே! உன்னால் காப்பாற்ற முடியாதா?. எனக் கலங்கி கண்ணீர் விட்டவர் விந்தன். வறுமை விந்தனைப் பிடித்தது. ஒருவேளை தேனீருக்கும் யோசிக்க வேண்டிய நிலை. விந்தனுக்கு உதவ வேண்டுமென்ற நோக்கத்தில் அவருக்குப் பத்திரிகைகளும், பதிப்பாளர்களும் பணம் கொடுத்து உதவி செய்தார்கள். ஆனால் விந்தனோ வறுமையின் பிடியில் சிக்கி, சிந்தனையை தொலைத்துவிட்டு கதை எழுத முடியாமல் கலங்கினார்.

விந்தன் சீர்கெட்டு வறுமை அடைந்தபின் அவருக்கு மறுவாழ்வளித்தவர். அப்போது தினமணிக்கதிர் ஆசிரியராக இருந்த 'சாவி' அவர்கள். தினமணிக் கதிரில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஏழு ஆண்டுகள் உதவி ஆசிரியராகப் பணியாற்றினார் விந்தன். விந்தன் ஓரளவு மனநிறைவோடு வாழச் சாவியே காரணம்.

'சேரிகள் நிறைந்த சென்னை மாநகரம்' என்ற தொடர் கட்டுரை சென்னை நகரின் அவலத்தை உலகுக்குக் காட்டியது. சிறைச்சாலை சிந்தனை என்ற தொடர் எம்.ஆர். ராதாவின் வாழ்க்கை வரலாற்றைக் காட்டியது. அவர் எழுதிய .வடம் பிடிக்க வாரீங்களா? என்ற கட்டுரை திருவாரூரில் ஓடாத தேரை ஓடவைத்த கலைஞரின் கலைப்பண்பையும், மனித நேயத்தையும் காண திருவாரூருக்கு வாரீங்களா? என்பதாக வாசகரை அழைத்தது கலைஞர் 'நெஞ்சுக்கு நீதி' என்ற தம் வாழ்க்கை வரலாற்றை தொடராக எழுத இசைந்தது அவர் விந்தனின் மேல் கொண்டிருந்த அன்பினால்தான். தியாகராஜ பாகவதரின் வாழ்க்கை வரலாற்றையும் விந்தன் எழுதினார்.

அவரது புரட்சி எழுத்துகள் தங்களைப் புண்படச் செய்ததாக குமுறியவர்களும், விந்தன் பணக்காரர்களை வெறுத்து ஒதுக்கியவர் என்ற பிறரின் புலம்பல்களும் அவரை ஒரு வட்டத்திற்குள் கொண்டு வந்து அடைத்தது. ஏற்கெனவே ஆஸ்துமா காற்றழுத்த நோய் போன்ற வற்றால் அவதிப்பட்டவிந்தன். தான்பெற்ற புகழையும் பணத்தையும் தக்கவைத்துக் கொள்ளத் தெரியாமல், தன் இறுதிக் காலத்தில் தன்னை நிலைநிறுத்திக் கொள்ளப் போராடினார்.

www.tamilarangam.net



விந்தன் விளம்பரங்களை வெறுத்தவர். கடைசிவரை தனியாக ஒரு புகைப்படம் கூட எடுத்துக் கொள்ளாதவர். எப்போதும் முரட்டுக்கதர் உடை அணிந்திருப்பவர். ராஜாஜி 'பஜகோவிந்தம்' என்ற நூலை எழுதி புராணத்தத்துவங்கள் சரி என்று நிலைநாட்ட முயன்றபோது, .பசிகோவிந்தம். எழுதி படிப்பாளர்களை சிந்திக்கத் தூண்டியவர். இத்தகைய சிறப்புமிக்க .விந்தன். வறுமையால் வாடி 1975 ஜூன் 30-ம் நாள் மாரடைப்பால் காலமானார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

28

# இளங்குமரனார்

(30–1–1930)

தமிழ்க்கடல் இளங்குமரனார் நெல்லை மாவட்டத்தில் சங்கரன்கோயில் அருகில் உள்ள வாழவந்தாள்புரம் என்னும் ஊரில் 30-1-1930ல் பிறந்தவர். இவரது பெற்றோர் படிக்கராமர் - வாழவந்தாள் அம்மையார். இளங்குமரனாரின் இயற்பெயர் கிருஷ்ணன்.

தனது பதினாறாம் வயதிலேயே 8-4-1946-ல் தொடக்கப்பள்ளி ஆசிரியராக பொறுப்பேற்று உயர்நிலைப்பள்ளி, மேனிலைப் பள்ளிகளில் ஐம்பதாண்டுகள் ஆசிரியப் பணியையும், மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் 'தமிழியல் புலம்' என்ற துறையில் ஆய்வாளராகவும் சிறந்து விளங்கியவர்.

கல்லூரி செல்லாமல் தானே முயன்று சென்னைப் பல்கலைக்கழகத்தில் 1951-ல் புலவர் தேர்வெழுதி முதலிடத்தில் தேர்வு பெற்றவர்.

'கிருஷ்ணன்' என்ற பெயரை 'இளங்குமரன்' என்று மாற்றிக் கொண்டார். பதினான்காம் வயதிலேயே கவிபாடும் ஆற்றல் கொண்ட இளங்குமரனார், பதினாறாம் வயதில் தமது ஊரில் சொந்தப் பள்ளியொன்றை நிறுவியுள்ளார்.

www.tamilarangam.net



குண்டலகேசி என்னும் இலக்கியத்தின் மூலக் கதையைத் தழுவி புதுக்காவியமாக குண்டலகேசியை 1127 பாடல்களில் படைத்து, 1959-ல் மதுரை அங்கயற்கண்ணி அம்மைத் திருக்கோயிலின் ஆயிரங்கால் மண்டபத்தில் அரங்கேற்றம் செய்தார். .காக்கைப் பாடினியம். என்ற இலக்கியத்தை நிறைவு செய்தார். இளங்குமரனார் எழுதிய திருக்குறள் கதைகளின் பத்துத் தொகுதிகள் மற்றும் திருக்குறள் கட்டுரைகள் ஆகியவை 1-12-1963ல் திண்டுக்கல் அருகேயுள்ள காந்தி கிராமத்தில் பண்டித ஜவகர்லால் நேரு அவர்களால் வெளியிடப் பட்டது. அந்த நிகழ்ச்சியின் போதுதான், இளங்குமரனார் பாரதியாரைப் பற்றிப் புகழ்ந்து பேசக்கேட்ட நேருஜி 'யார் இந்தப் பாரதியார்?' என்று கேட்டாராம். வங்காளத்தில் கீதாஞ்சலி எழுதி நோபல் பரிசு பெற்ற ரவீந்திரநாத் தாகூரை விடவும் சிறந்த தமிழ்க் கவிஞர் எங்கள் பாரதியார் என்று அவருக்கு தெளிவுபடுத்தியவர் இளங்குமரனார்.

இளங்குமரனார் இலக்கியத்தில் தொடாத துறைகள் இல்லை. பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட பாடல்களையும், இருநூற்று ஐம்பதுக்கும்மேற்பட்ட நூல்களையும் எழுதியுள்ளார். கவிதை நூல்கள், நாடக நூல்கள், வரலாற்று நூல்கள், சமூக நூல்கள், ஆராய்ச்சி நூல்கள் எனப் பலவகையும் இதில் அடங்கும்.

நாவலர் சோமசுந்தர பாரதியாரின் வாழ்க்கை வரலாற்றை நாவலரிடமே குறிப்புகள் கேட்டும், தொகுத்தும் எழுதி உலகுக்கு அளித்தவர் இளங்குமரனார்.

www.tamilarangam.net



இவருடைய நூல்களில் முன்னைத் தமிழகம் முதல் இன்றைய தமிழகம் வரையில் உள்ள சமுகம், பண்பாடு, வாழ்வியல் வரலாறு ஆகிய அனைத்தும் ரத்தினச் சுருக்கமாகவும் தெளிவாகவும் படம்பிடித்துக் காட்டப்பட்டுள்ளன. இளங்குமரனார் எழுதிய பல நூல்கள் பள்ளி மாணவர்களுக்குத் துணைப்பாட நூல்களாக வைக்கப்பட்டுள்ளன. இவருடைய நூல்களில் சிலவற்றைச் சிகாகோ பல்கலைக்கழகத்தில் படித்த 'ரிச்மென்' என்பவர் டாக்டர் பட்டத்திற்காக ஆய்வு செய்ததோடு ஆங்கிலத்திலும் மொழிபெயர்த்துள்ளார்.

தமிழ்க் காப்புக் கழகப் பொதுச்செயலாளர், மதுரை மாவட்ட தமிழாசிரியர் கழகச் செயலாளர், தேர்வுக்குழு அமைப்பாளர், தமிழ் தொண்டர் குழுவின் ஆய்வுரைஞர் போன்ற பொறுப்புகளை வகித்த இளங் குமரனாருக்கு, 'கழக இலக்கியச் செம்மல்', 'தமிழ்க் கடல்', 'புலவர் மணி', 'இலக்கியச் செம்மல்', போன்ற 20-க்கும் அதிகமான விருதுகளும், குன்றக்குடி அடிகளாரால் 'குறள் ஞாயிறு', என்ற பட்டமும் வழங்கப்பட்டன. 1976-ல் நல்லாசிரியர் விருதும் பெற்றவர்.

தாய் குழந்தைக்குப் பா( )ம், 'ஆராரோ ஆரிராரோ ஆராரோ' என்னும் தாலாட்டு வரியில் 'தாய் தான் அறிந்த கதைகளில் கேட்டும், படித்தும் அறிந்த இராமன், கண்ணன், விசயன், பாரி, ஓரி, வள்ளி, அல்லி போன்ற சிறந்தவர்கள் வரிசையில் தன் குழந்தை யாராக இருக்கும்?' என்று நினைத்து குழந்தையிடமே ஆவலுடன் ஆர் ஆரோ

www.tamilarangam.net



ஆர் இவரோ ஆர் ஆரோ என்று அடுக்கி வினவுகிறாள்.. என்று பொருள் கூறியவர் இவர்.

மறைமலையடிகள், தேவநேயப்பாவாணர், பேராசிரியர் சி. இலக்குவனார், திரு.வி.க. ஆகியோரை தம்முன்னோடிகளாகக் கொண்டவர். பாவாணரின் மொழி ஆராய்ச்சிக்கு அவரோடு உதவியதோடு, பாவாணரின் பெயரால் முதலில் ஆராய்ச்சி நூலகம் அமைத்தவரும் இளங்குமரனார்தான் திரு.வி.க.வின் தமிழ் நடையை விளக்கியிருப்பதோடு, தமிழில் நடை வகைகளை அடுக்கு நடை, அழுத்த நடை, இணைச் சொல் நடையென 56 நடைகளாக வகைப்படுத்தி, அந்நடைகளைத் தனது நூல்களிலும் எழுதியுள்ளார். இவருடைய வாழ்க்கையில் பெரும் பங்கு வகிப்பது திருக்குறள். பதினாறாம் வயதில் செல்வம் என்ற அம்மையாரை மணந்துகொண்டு 25-ம் வயதிலேயே பிரம்மச்சரிய விரதம் பூண்டவர். குறள் நெறிப்படி வாழ்க்கையை அமைத்துக் கொண்டதோடு திருக்குறள் பற்றி அறுபதுக்கும்மேற்பட்ட நூல்களையும் எழுதியுள்ளார்.

திருக்குறளையும், விஞ்ஞானத்தையும் இணைத்துச் சுற்றுப்புறச் சூழல், மாசுக்கட்டுப்பாடு போன்ற பல புத்தகங்களையும், ஒரு குறளுக்கு ஒரு நூல் என்று விளக்கமாகவும் எழுதியுள்ளார். இவரது 'தமிழ் இலக்கண வரலாறு' நூலுக்கு தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் தமிழன்னை விருதும், 'தனித்தமிழ் இயக்கம்' என்ற நூல் தமிழ் வளர்ச்சித் துறையின் விருதையும் பெற்றுள்ளன.

www.tamilarangam.net



திருக்குறளுக்கு வாழ்வியல் உரை என்ற தலைப்பில் இவர் எழுதியுள்ள விளக்கம் சிறப்பானது, புதுமையானது. புரட்சிகரமானது. அதனைப் படிப்போருக்குக் குறட்பா பற்றிய அனைத்து ஐயமும் நீங்கிவிடும்.

திருச்சியில் காவிரியின் கரையருகே திருவள்ளுவர் தவச்சாலையை நிறுவி அதை 'குறளாயம்' என்ற அமைப்பின் கிளையாக நடத்தி வருகிறார். இங்கு ஏழைகளுக்கு இலவசமாக இயற்கை மருத்துவம் செய்தல், தமிழ் ஆராய்ச்சி, வள்ளுவர் நெறியை வாழ்க்கை நெறியாக கற்றுத் தருவது ஆகியவை நடத்தப்பட்டு வருகிறது. குறளாயம் என்ற அமைப்பு சிறந்த அறிஞரும் இளங்குமரனாரின் நண்பருமான 'ஈரோடு வேலா' என்பவரால் நிறுவப்பட்டது. இசைஇறை சேரலாதன் போன்ற தமிழறிஞர்கள் குறளாயத்தில் உறுப்பினர்களாக இருந்து தமிழ் வளர்த்து வருகிறார்கள்.

நூற்றுக்கணக்கான தமிழ்த் திருமணங்களை நடத்தியும், தமிழ்த்துறையின் பல துறைகளில் முக்கியமான பொறுப்புகளையும் வகித்துவரும் இளங்குமரனார் தனது உழைப்பையே உயிர் மூச்சாகக் கொண்டவர். பிறரிடம் நன்கொடையாகவோ யாசித்தோ தமிழ் வளர்க்காதவர்.

தமிழை வளர்த்து தமிழுக்காகவே வாழ்ந்து வருகிறார் இளங்குமரனார். இவரை வளர்த்து இவராலும் வளர்ந்து வருகிறது தமிழ்!

www.tamilarangam.net

**29**

# அரிராம்சேட்

(9-4-1934)

இயேசு கிறிஸ்து மக்களுக்குத் தன்னை வெளிப்படுத்திக் கொண்டபோது அவருக்கு வயது முப்பது. விவேகானந்தர் உலகப் புகழ்பெற்ற போது அவருக்கு முப்பது வயது. ஆக, சான்றோர்கள்கூட தங்களை முப்பது வயதுக்குமேலேயே பிரசித்திப்படுத்திக் கொள்ள முடிந்திருக்கிறது. ஆனால் வெறும் இருபத்தொன்பது ஆண்டுகள் மட்டுமே உலகில் வாழ்ந்து, பல உலக நாடுகள்வரை புகழ்பரப்பி 'கொடைவள்ளல்' என்று புகழப்பெற்ற ஒரு தமிழர், நெல்லை மாவட்டம் முக்கூடல் என்ற ஊரில் வாழ்ந்திருக்கிறார். அவர்தான் அரிராம்சேட் அவர்கள்.

அரிராம்சேட் தமிழர் ஒரு தமிழர். 'சேட்.', என்ற மார்வாடி பெயர் அவர் பெயரோடு எப்படி வந்து ஒட்டிக்கொண்டது தெரியுமா?

முக்கூடலைச் சேர்ந்த சொக்கலிங்கம் என்பவர் தன் சிறுவயதிலேயே பம்பாய் சென்று, அங்கு பீடி சுற்றும் தொழிலில் சிறந்து விளங்கினார். பிறகு தனது சொந்த

www.tamilarangam.net



ஊரான முக்கூடலுக்குத் திரும்பியபோது தன்னை ஆளாக்கிய 'ராம்சேட்', என்பவருக்கு மரியாதை செய்யும் பொருட்டு தன் பெயருடன் 'ராம்சேட்' என்பதை இணைத்துக் கொண்டார். முக்கூடல் மக்கள் அவரை சொக்கலால் ராம்சேட் என்று மரியாதையுடன் அழைத்தனர். முக்கூடலுக்குப் பீடி சுற்றும் தொழிலை அறிமுகப்படுத்தி, ஏழை மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தியவர் சொக்கலால் சேட் அவருக்கு பார்வதி அம்மையார், பூவம்மாள் அம்மையார் என்ற இரு மனைவியர் உண்டு. இவர்கள் இல்லையென்று வந்தவர்களுக்கு இல்லை என்று கூறாமல் வெள்ளை உள்ளத்துடன் அள்ளித்தந்தவர்கள். அவர்களில் பார்வதி அம்மையாருக்குப் பிள்ளைப் பேறில்லை. பூவம்மாள் அம்மையாரின் திருமகனாக 9-4-1934-ல் அரிராம் சேட் பிறந்தார். இயற்பெயர் சோமசுந்தர்லால்.

சுறுசுறுப்பும், வீரமும், வள்ளல் தனமும் உடைய அரிராம் சேட் அவர்கள் இளம் வயதிலேயே (22-5-1942-ல்) தந்தையை இழந்தார். தன் தந்தை முக்கூடலில் நிறுவிய ஆரம்பப் பாடசாலையில் பயின்று பின், சென்னையில் படிப்பதற்காக அனுப்பப்பட்டார். ஆனால் அங்குப் படிக்காமல் தன் சொந்த ஊருக்குத் திரும்பினார்.

யானையேற்றம், குதிரையேற்றம், வேட்டை யாடுதல், துப்பாக்கிச் சுடுதல் போன்றவற்றில் சிறந்து விளங்கியதோடு, சிறுவயதிலேயே தனது தந்தையாரின்

www.tamilarangam.net



பீடி கம்பெனிகளின் பொறுப்பை ஏற்றார். அதுவரை குக்கிராமமாக இருந்த முக்கூடல் அவரது முயற்சியால் நகரமானது.

முக்கூடலில் உள்ள மக்களுக்குப் பீடித்தொழில் கற்றுக்கொடுத்தார். தொழிலாளிகளுக்கும், விற்பனை யாளர்களுக்கும் வருடத்தில் ஆறுமுறை போனஸ் கொடுத்தார். வரலாற்றில் இவரைப்போல தொழிலாளர்களை ஊக்குவிக்க இப்படிப்பட்ட போனஸ் மற்றும் சிறப்புப் பரிசுகளைக் கொடுத்தவர்கள் வேறுயாரும் இருக்கமுடியாது. முக்கூடல் மக்கள் இந்த இளைஞரை 'முதலாளி' என்று அழைத்தனர். முதலாளி என்றால் அது சேட் அவர்களை மட்டுமே குறிக்கும் சொல்லானது. தனது 17-வது வயதில் செல்வ சரோஜா என்ற அம்மையாரை மணந்தார். ருக்மணி என்ற இன்னொரு மனைவியாரும் உண்டு. இவர்களுக்குப் பிள்ளைகளும் வாய்த்தனர்.

அரிராம்சேட் அவர்கள் முக்கூடல் மக்களின் நலனில் அதிக அக்கறை கொண்டவர். கணக்கே இல்லாமல் அள்ளித் தருவார். பிள்ளைகள் படித்து முன்னேற வேண்டும் என்பதற்காக ஆரம்பப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக்கி, பதினோராம் வகுப்புவரை படிக்கும் அனைத்து மாணவர்களின் கல்விச் செலவையும் தானே ஏற்றுக்கொண்டார். சொக்கலால் ஞாபகார்த்த வாசக சாலை, சொக்கலால் சங்கீத சபா ஆகியவற்றை ஆரம்பித்து மக்களின் பொதுஅறிவையும், இசையறிவையும் வளர்த்து வந்தார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இரண்டு மூட்டை நெல் முப்பது ரூபாயாக இருந்த காலத்திலேயே பாளையங்கோட்டை ஜான்ஸ் கல்லூரிக்கு 25 ஆயிரம் ரூபாய், பாலூர் சத்திரம் உயர்நிலைப்பள்ளிக்கு முப்பதாயிரம் ரூபாய், மாநில போலீஸ்காரர்களின் குழந்தைகள், கல்விநிதிக்காக பதினைந்தாயிரம் ரூபாய் என்று அந்தக் காலத்திலேயே அள்ளிக்கொடுத்து கல்விப்பணி செய்தார். பத்தாயிரம் ரூபாய் செலவில் பள்ளிமாணவர்கள் அனைவரையும், தன்னோடு இலங்கைக்குச் சுற்றுலா அழைத்துச் சென்று அவர்களை உற்சாகப்படுத்தி வந்தார்.

வட நாட்டில் பஞ்சம் ஏற்பட்டபோது, முன்னாள் ஜனாதிபதி டாக்டர் ராஜேந்திரபிரசாத் அவர்கள் பஞ்ச நிவாரண நிதி திரட்ட தமிழகம் வந்தார்கள். முக்கூடலுக்கு அவரை வரவழைத்து ஒரு பெருந்தொகையை அரிராம்சேட் கொடுத்தார். இந்தியாமீது சீனா படையெடுத்தபோது, நம் நாட்டின் பாதுகாப்புக்காக 80 ஆயிரம் ரூபாயும், நெல்லையில் பெண்கள் ஆசிரமம் அமைக்கத் தனது ஏராளமான நிலத்தையும் கொடுத்தார். அரிராம் சேட் அவர்கள் கொடையுணர்வு மட்டுமின்றி இசை உணர்வும் அதிகம் உடையவர். சிறுவயது முதற்கொண்டே தியாகராஜ பாகவதரிடம் நன் மதிப்பு உடையவர். தியாகராஜபாகவதரும், அரிராம்சேட் அவர்களும் இணைந்து ஆயிரக்கணக்கான கச்சேரிகளை செய்திருக்கிறார்கள்.

இசைத்திறன் அதிகஅளவு வாய்க்கப்பெற்றும், இவை தன் குரு பாகவதர் போட்டபிச்சையால் வந்தது என்பார்.

www.tamilarangam.net



கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன், பாகவதர், நடிகர் திலகம் சிவாஜி கணேசன் ஆகியோருடன் சிறந்த நட்புக்கொண்டு விளங்கிய சேட் அவர்கள், தன் ஊர் மக்களைச் சந்தோஷப்படுத்துவதற்காக அக்காலத்தில் புகழ்பெற்ற சினிமாக் கலைஞர்களையெல்லாம் அழைத்து வந்து நிகழ்ச்சிகள் நடத்துவார்.

பாகவதரும், சிவாஜிகணேசனும் முதல் த வையாக முக்கூடலுக்கு நிகழ்ச்சி நடத்த்வந்தபோது, வள்ளலிடம் 'எங்களுக்கு பணமே வேண்டாம் தங்கள் நட்பு ஒன்றுமட்டும் இருந்தால் போதும்' என்று இருவரும் கூறினார்களாம். தன்னை யாராவது தங்கள் இல்லத்திற்கு கச்சேரி நடத்த அழைத்தால் பெரிய கலைக்குழுவினருடன் சேட் போவார். இசை நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தவர்களிடம் பணம் வாங்காமல், அவர்களுக்குப் பணம் கொடுத்து, வாழும் முறைபற்றி அறிவுறுத்திவிட்டு வருவார். கிறிஸ்தவர்களின் கீர்த்தனைகளில் ஒன்றான 'தேன் இனிமையிலும் இயேசுவின் நாமம் திவ்விய மதுரமாமே' என்ற பாடல் அரிராம் அவர்கள் அளித்துள்ள இறவாத இசைப்பாடலாகும். அவரது இசையை ரசித்த முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் நல்லிசைப்புலவர் என்றும், 'இசைத்தென்றல்' என்று பாகவதரும் பாராட்டியுள்ளார்கள். 'இன்னிசை இளவரசு' என்ற பட்டமும் - அவருக்கு அளிக்கப்பட்டது. நெல்லை மாவட்டத்தில் இசைக் கலையை வளர்க்க 'சொக்கலால் சங்கீத சபா' வை நிறுவியதோடு, இசை வல்லுநர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கணபதியாபிள்ளை என்பவரையும் தனது குருவாகக் கொண்டார்.

எளிய மக்கள் பயன்பெறும் விதத்தில் பெரிய இலவச மருத்துவமனையையும், 'சொக்கலால்' மருத்துவ மனையையும் நிறுவினார். மக்களுக்கு விளையாட்டுத் துறையில் நல்ல பயிற்சி தந்து போட்டிகளையும் பரிசுகளையும் கொடுத்தார். பார்த்த உடனேயே மற்றவர்களை எடைபோடும் திறன் பெற்ற அரிராம் சேட் அவர்களை மக்கள், 'பீடிச் சக்கரவர்த்தி' என்று புகழ்ந்தார்கள். அவரது சொல்லுக்கு கட்டுப்பட்டு ஒட்டுமொத்தமாக செயல்பட்டார்கள். தேர்தல் சமயங்களிலும் அவர் சொல்லும் வேட்பாளர்களைத்தான் மக்கள் ஆதரிப்பார்கள். அவர் வார்த்தையின் காரணமாகப் பெரிய கட்சிகள் தோல்வியுறுவதும், சுயேட்சைகள் சுலபமாக வெற்றி அடைவதும் இயல்பாக நடந்தன. அரிராம் சேட் அவர்கள் மத நல்லிணக்கம் உள்ளவர். அவரிடம் எப்போதும் பகவத்கீதை, பைபிள், திருக்குர்ஆன் முதலியவை இருக்கும். இவற்றைப் படித்தும், பாதுகாத்தும் வந்ததோடு, சமய வேறுபாடு கருதாமல் மக்களுக்கு உதவி செய்து வந்தார்.

பெருந்தலைவர் காமராஜர், பக்தவச்சலம், டி.டி கிருஷ்ணமாச்சாரி, பி.டி. ராஜன் போன்ற தலைவர்களுடன் அரிராம் சேட் நெருங்கிப் பழகினார். அந்தக் காலத்திலேயே தமிழகம் அறிந்த வள்ளலாக விளங்கிய அரிராம் சேட்டின் வியாபாரம் கடல் கடந்து பல நாடுகளில் பரவியிருந்தது.

www.tamilarangam.net



இவை தவிர அநேக காரியங்களையும், புகழ்களையும் தனது 29 ஆண்டுகளில் பெற்ற கொடைவள்ளல் அரிராம்சேட் அவர்கள் பஞ்சாலை ஒன்று நிறுவுவதற்காக அரசிடமிருந்து அனுமதி பெற்றார். தன் கம்பெனி ஊழியர்களுக்கு 18 மாதச் சம்பள போனஸை வழங்குவதாக அறிவித்தார். ஆனால் அதற்குள் திடீர் உடல்நலக்குறைவு ஏற்பட்டு பாளையங்கோட்டை மருத்துவமனையில் 9-2-1964-ல் இயற்கை எய்தினார். அவருடைய நினைவுச் சின்னம் சொக்கலால்புரம் என்னும் இடத்தில் அமைந்துள்ளது. அரிராம் சேட்டை இன்றும் முக்கூடல் மக்கள் தெய்வமாக வழிபட்டு வருவதை, அவருடைய சமாதிக்கு நூற்றுக்கணக்கானவர்கள் சென்று வருவதில் இருந்தே அறிந்து கொள்ளலாம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

30

# 'அப்பா' நா. அருணாசலம்

(12-5-1940)

தமிழின உணர்வையே தன் மூச்சாகக் கொண்டிருக்கும் தமிழ்ப்புரவலர் நா. அருணாச்சலம் மனிதர்களுள் வித்தியாசமானவர். இவர் தமிழர்கள் அனைவராலும் அறியப்பட வேண்டிய அரியமனிதர்.

தஞ்சை திருக்கண்ணபுரம் என்ற ஊரில் வறுமைமிகுந்த விவசாயக்குடும்பத்தில் ஞானம்பாள்-நாராயணசாமி தம்பதியினருக்கு 12-5-1940-ல் பிறந்த அருணாசலம், ஆரம்பப்பள்ளி ஆசிரியரான தனது மூத்த அண்ணனால் வளர்த்தெடுக்கப்பட்டு திருக்கண்ணபுரம், முத்துப்பேட்டை நன்னிலம், ஆகிய ஊர்களில் படித்தார். இத்தனை ஊர்களில் அவர் படித்த பள்ளிப்படிப்பு பத்தாம் வகுப்புவரையில்தான்.

சிறு வயதிலேயே நாத்திகரான இவர் 1958-ல் திருக்கண்ணபுரம் கோயிலில் வசூல் மானியம் வேலை கிடைத்தது. இது தவிர 'மாவட்ட காங்கிரஸ் கமிட்டி' தலைவராகவும், எம்.எல். ஏ- வுமாக இருந்த எம். டி. தியாகராஜப் பிள்ளையிடம் ஆபிஸ் பையனாகவும்,

www.tamilarangam.net



கோயில் நிலங்களைப் பயிரிட்டுத் தந்து சம்பளம் பெறுபவராகவும் குடும்பத்தை நடத்த கொத்தனாரிடம் சித்தாள் வேலையையும் பார்த்து முடித்தவர் அருணாசலம் அவர்கள். திருமருகல் பஞ்சாயத்து தலைவர் நாராயண சாமிப்பிள்ளை அவர்கள் மூலம் திருமருகல் பஞ்சாயத்து யூனியன் அலுவலகத்தில் 72 ரூபாய் சம்பளத்தில் உதவியாளர், அதே அலுவலகத்தில் காசாளர் போன்றச் சிறு வேலைகளைச் செய்தவர். அடுத்தவர்களின் உதவியை அனாவசியமாகப் பெறாமல் முயன்று தேர்வாணைக்குழுத் தேர்வு எழுதி வருவாய்த் துறையில் எழுத்தராக 1965-ம் ஆண்டு 90 ரூபாய் சம்பளத்தில் செங்கல்பட்டு கோட்டாட்சியர் அலுவலகத்தில் பணியில் சேர்ந்தார்.

தனது திறமையால் தாசில்தாராக உயர்ந்து, பதினான்கு வருடகாலங்களாக வசூல் செய்யப்படாத நிலுவைகளையெல்லாம் ஒரே நாளில் வசூலித்துக் காட்டி சாதனைகளையெல்லாம் செய்து, மாந்தருள் வித்தியாச மானவராக வாழ்ந்து காட்ட வேண்டும் என்பதற்காக விருப்ப ஓய்வு பெற்று சுய தொழில் மூலம் முன்னேறியவர் இவர்.

சிறுவயதில் நேர்ந்த வறுமையும், உழைப்பின் உயர்வினால் ஏற்பட்ட வசதியும் அவரை எந்த நிலையிலும் குழப்பியதே இல்லை. கொள்கையில் பிறழாதவர் அவர். அன்றைக்கும் இன்றைக்கும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பெரியார்தான் அவரது தலைவர். உழைப்பதற் கேற்றவாறு வசதிகளைப் பெருக்கிக் கொள்பவர். பிழைப்பதற்கேற்றவாறு கொள்கைகளை மாற்றிக் கொள்ளாதவர். தன்னோடு பழகும் அனைவரையுமே அவ்வாறே இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பவர்.

அரசு வேலையை விட்டுவிட்டு நிலம் வாங்கி விற்கும் இடைத்தரகராக முயன்று, 1986-ல் இரண்டு தட்டச்சு எந்திரம், ஒரு நகலெடுக்கும் எந்திரத்தை வைத்துக்கொண்டு மாணவர் நகலகம் என்ற பெயரில் சிறு நிறுவனத்தை ஆரம்பித்து இன்று பல இடங்களில் கிளைகளை உருவாக்கியிருக்கிறார்.

எந்தப் பெரிய எதிர் பார்ப்பும் இல்லாமல், சுய தொழில் செய்ய வேண்டுமென்பதற்காக அரசாங்கப் பணிக்கு இரண்டு வருடம் விடுப்புப் போட்டு தன்னம்பிக்கையோடு தொழில் தொடங்கியவர் இவர் ஒருவராகத்தான் இருக்க முடியும். தனது வளர்ச்சியை, தொழிலைப் பெருக்க பயன்படுத்திக் கொள்ளாமல் தமிழுக்காகச் செலவிடுவதில் நிம்மதி காண்கிறார் இவர்.

இவரது தொழில் வெற்றிக்குக் காரணம் அருணாசலம் அவர்களின் விடா முயற்சி மற்றுமுள்ள ; தங்களை நம்பி பொறுப்பை ஒப்படைத்துவிட்டு சுதந்திரமாகச் செயல்படப் பணிக்கும் அப்பாவிடம் உண்மையாக நடந்து கொள்ள வேண்டும் என நினைக்கும் இவரது

www.tamilarangam.net



பிள்ளைகள்; அதாவது இவரிடம் பணிபுரிபவர்கள் அவர்களது உழைப்புக்கேற்ற சம்பளம் கொடுக்காமல் அவர்களின் தேவைக்கேற்ற சம்பளம் தருகிறார். இவருடைய தொழிலகத்தில் உலகில் வேறு எங்கும் காண இயலாத இன்னொரு சிறப்பம்சம் தெழிலாளர்களுக்கும் முதலாளிக்கும் வேறுபாடு இல்லாமல் குடும்பமாக இணைந்து பணிபுரிவதுதான்.

அவரிடம் பணிபுரிபவர்களும் அவரைத் தெரிந்தவர் களும் இவரை அப்பா என்றே அழைக்கிறார்கள். அப்பா அலுவலகத்தில் இருந்தாலும் இல்லாமல் போனாலும் வேலைகள் தடைப்படுவதே இல்லை. இவர் தொழிலாளர்கள் மீது வைத்துள்ள அதே அளவு நம்பிக்கையைக் காப்பாற்றும் அவர்களுக்கு வசதிகளைப் பெருக்குவதிலும் அவர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதிலும் இவர் தந்தையராகவே செயல்பட்டு வருகிறார்.

சென்னைப் பல்கலைக்கழகத்தில் எம்.பில் பட்டத்திற்கான ஆராய்ச்சிக் கட்டுரையைச் சமர்ப்பிக்க வந்த விஜயவாடா மாணவி சென்னை வந்தபோதுதான் தெரிந்தது தான், கம்ப்யூட்டரில் பதிவு செய்த தகவல்கள் எதுவும் பதிவுச்சுருளில் (டிஸ்க்கில்) பதிவாகவில்லை என்பது! கையெழுத்துப் பிரதி மாத்திரமே கைவசம் உள்ள நிலையில் சிலநூறு பக்கங்கள் கொண்ட அந்த ஆராய்ச்சிக் கட்டுரையை எப்படி ஒரே நாளில் உருவாக்குவது?

www.tamilarangam.net



திகைத்தபடி நிராதரவான நிலையில் உதவி கேட்டு அலைந்து பார்த்தார். ஒரு ஆராய்ச்சிக் கட்டுரையை ஒரே நாளில் புத்தகமாக்குவது எளிதான காரியமா?

இரண்டு மணி அளவில் அடையாறு மாணவர் நகலகத்திற்கு வருகை தந்து விவரம் சொல்லி எப்படியாவது நீங்கள்தான் உதவ வேண்டும் என்று உருகி நின்றார். அப்பா இல்லை. உங்களுக்கு எப்படி உதவுவது என்ற கேள்விக் குறியுடன் அந்த மாணவியின் பரிதாபமான முகத்தைப் பார்த்துக் கொண்டிராமல் அவருக்கு உதவ நினைக்கிற பணியாளர்களுக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. அப்பா இருந்தால் என்ன செய்வார்? எப்படிச் செயல்படுவார் என்பதை யூகித்துக் கொண்ட அவர்கள், சிறிதும் தயங்காமல் ஒவ்வொருவரும் மாணவியிடமிருந்த ஆராய்ச்சிக் கட்டுரையின் கைப்பிரதியின் சில பக்கங்களை எடுத்து கம்ப்யூட்டரில் தட்டச்சு செய்கிறார்கள். அவசர அவசரமாகப் பிழை திருத்தம் பார்க்கப்படுகிறது. அப்போதே ஒவ்வொரு பக்கங்களும் ஒன்று சேர்க்கப்பட்டு அட்டையிடப்பட்ட புத்தகமாக ஐந்து மணிக்குள் அந்த மாணவியின் கைகளில் கொடுக்கப்படுகிறது. அதை அன்றே பல்கலைக்கழகத்தில் சேர்ப்பித்து சான்று பெறுகிறார் அந்த மாணவி.

இப்படி ஒரே நாளில் செய்து தங்கள் நிறுவனத்திற்கு நல்ல பெயரை அவர்கள் ஈட்டித்தரக் காரணம் முதலாளி தொழிலாளி வேறுபாடில்லாமல் ஒரே குடும்பத்தினராய் இருந்து அவர்கள் பணி செய்வதுதான்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பணியாளர்களைத் தங்கள் பிள்ளைகளாகக் கருதுதல் அவர்களுக்குத் திருமணம் செய்தல், வீட்டுக்குத் தேவையானவைகளை முன்னின்று வாங்கித் தருதல் போன்ற தொழிலாளர்களின் ஒவ்வொரு சிறு விஷயத்திலும் அவர்தான் கவனம் செலுத்தி பொறுப்பேற்று நடத்துகிறார். இதில் வியாபார நோக்கமே இல்லாததுதான் சிறப்பம்சம். எதிர் கடையில் டீ போடும் பையன்கூட இவரை அப்பா என்றுதான் அழைக்கிறான். அவனைத் தனியாகக் கூப்பிட்டு, ''இங்கு அப்பா என்பது பிசினஸ் டிரேட் மார்க் மாதிரிதானே?'' என்று கேட்டால், ''இது குடும்பம் சார், இவரைத் தெரிந்த அனைவருக்குமே இவர் அப்பாதான். அப்படித்தான் நாங்கள் கூப்பிடுகிறோம். அவரும் அப்படித்தான் எங்களிடமும் நடந்து கொள்கிறார்'' என்கிறான். அவனது திருமணமும் அப்பாவின் தலைமையில்தான்.

இப்படிப்பட்ட முதலாளி-தொழிலாளர் குடும்பம் பேச்சளவில் எளிதாகத் தெரியலாம். முதலாளியோடு நேர் நின்று பேசுவதும், உரிமை கொண்டாடுவதும் சாத்தியமில்லாத இந்தக் காலத்தில் ஒரு புதிய அத்தியாயத்தையே உருவாக்கியிருக்கிறார் நா. அருணாசலம். இது வித்தியாசமானதுதானே!

1990-ல் இவருடைய நிறுவனம் வளர்ந்து இவரிடம் ஒரு பெரிய கணிசமான தொகை சேர்ந்தது. ஏற்கெனவே மேலோங்கியிருந்த தமிழின உணர்வு காரணமாகத்

www.tamilarangam.net



தமிழுக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்று வாய்ப்புத் தேடி அலைந்தார்.

செங்கற்பட்டில் இவர் பணிபுரிந்தபோது, பாவலர் நெருப்புத்துளிக் கவிஞர் திருக்கழுக்குன்றம் பல்லவன் அவர்களின் பழக்கம் ஏற்பட்டது. பல்லவனிடமிருந்த சுயமரியாதைக் கருத்துக்களும், தமிழபிமானமும் இவருக்குள் ஏற்கெனவே இருந்த தமிழ்த் தொண்டென்ற ஆர்வத்துக்குள் தொற்றிக் கொண்டன. இவர் உழைத்து வளர்ந்தபோது கூடவே வளர்ந்து, தமிழுக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்ற தாக்கத்தை அந்த ஆர்வமே ஏற்படுத்தியது.

பிராமணர்கள் சமஸ்கிருதத்தில் பாடல்களைப் பாடி பக்தி என்ற பெயரில் சமஸ்கிருதத்தை வளர்க்கிறார்கள். தமிழர்கள் அதை உணராமலும், பொருள் விளங்காமலும் அவ்விசைக்கு தலையாட்டிக் கொண்டிருக்கிறார்கள். இதை மாற்றி தமிழிலேயே தனிப்பாடல்களை, தமிழிசையைக் கொண்டு வந்தால் என்ன என்று பெரியார் பாணியில் யோசித்த அருணாசலம் அவர்கள், பாவலர் பல்லவனின் ஆலோசனையின் பேரில் 'தந்தை பெரியார் தமிழ் இசை மன்றம்' தொடங்கி தமிழிசைக்கு மறுமலர்ச்சி கொடுக்க முடிவு செய்தார். இதற்குத் துணையாக இருந்தவர்கள் கலைமாமணி முத்துக்கூத்தன், ஏழிசைத் தென்றல் காளீஸ்வரன் ஆகியோர் தமிழிசை மன்றத்தின் ஒரே நோக்கம் முத்தமிழில் இசைத்தமிழை மீட்டெடுத்தல்தான்.

www.tamilarangam.net



மார்கழி மாதம் முழுவதும் சமஸ்கிருதத்தில் பிராமணர்கள் இசைப்பாடல்களைப் பாடுகிறார்கள். இதுபோல தைத்திங்கள் வருகிறதல்லவா. தமிழர் திருநாளைத் தாங்கிவரும் அந்த மாதத்தில் எங்கும் தனித்தமிழ்ப் பாடல்களே பாடப்பட வழிவகை செய்துள்ளார் இவர். இது தவிர வெறும் புராணப்பாடல்களை மட்டுமே பாடிக்கொண்டிராமல் சமுதாய மறுமலர்ச்சிப் பாடல்கள், பெண்விடுதலை, மொழி வளர்ச்சி தொடர்பான பாடல்களை மேடைகளில் பாடி தமிழர்களிடையே விழிப்புணர்வு ஊட்டும் பணியை தமிழிசை மன்றத்தின் மூலம் செய்து வருகிறார்.

இதுவரை தமிழிசை மன்றத்தின் மூலம் இசை முழக்கம் செய்தவர்கள் அத்தனைபேரும் பிராமணர் அல்லாதவர்களே, அவர்கள் பாடுவதற்கு மேடை பக்கவாத்தியங்கள், பாடுவதற்கு சன்மானம், பாராட்டு, பொற்கிழி போன்ற பல வசதிகளை இம்மன்றத்தின் மூலம் செய்து வருகிறார்.

இதுவரை மேடையில் பாடி தமிழிசை விருது பெற்றவர்கள் புஷ்பவனம் குப்புசாமி, டி.எல். மகராசன், டி.கே.எஸ். கலைவாணன், கழுகுமலைக் கந்தசாமி, திருப்பாம்பரம்சண்முகசுந்தரம், தாராபுரம் சுந்தரராஜன், டி.கே. கலா, பிரபாவதி, கோடிலிங்கம், சீர்காழி சிவ சிதம்பரம் போன்ற பலர்.

தமிழர்கள் சாதி-மத-கட்சி வேறுபாடுகளை வளர்த்துக்கொண்டு பிரிந்து வேறுபாட்டுடன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வாழ்வதைக் கண்டு மனம் வருந்தும் அருணாசலம், தமிழால் அவர்களை ஒன்று சேர்க்கும் முயற்சியால் 'தமிழ்ச்சான்றோர் பேரவை' என்ற அமைப்பை நிறுவினார்.

நவம்பர் முதல்நாள் தமிழகம் தனி மாநிலமான நாள். அந்த நாளை ஆண்டுதோறும் தமிழகப் பெருவிழாவாகக் கொண்டாடி வருகிறது இப்பேரவை. உலகம் முழுவதிலும் இருந்து தமிழ்ச் சான்றோர்கள் இதில் கலந்து கொள்கிறார்கள்.

இது தவிர மாதந்தோறும் திங்கள் தொடர் கூட்டத்தை தலைநகரத்திலும், முக்கிய நகரங்களிலும் நடத்தி வருகிறார்கள். பல்துறை அறிஞர்கள் இதில் பங்காற்றி அறிவை விவாதிக்கிறார்கள். பகுத்தறிவுக் கொள்கைகள் பறை சாற்றப்படுகிறது. தமிழ்ச் சான்றோர்களின் சொற்பொழிவுகளைக் காதால் கேட்டு அதை அப்படியே விட்டுவிடாமல் வரலாறாக்கும் முயற்சியில் தமிழ்ச் சான்றோர் செய்தி மடலாக அச்சிட்டுத் தமிழகம் முழுவதும் இலவசமாகத் தருகிறார்.

மாணவர் புத்தகப் பண்ணை என்ற பதிப்பகத்தை நிறுவி தமிழில் அறிவார்ந்த நூல்களான திருக்குறள், பேராசிரியர் மதிவாணன் அவர்களின் நெடுநாளைய ஆராய்ச்சியான இன்டுஸ் ஸ்கிரிப்ட் ஆப் ட்ராவிடன் லாங்வேஜஸ் (Indus script of Dravidian Languages) போன்றவற்றைப் பதிப்பித்து வெளியிட்டுள்ளார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



''நந்தன் வழி'' என்ற சமுதாய-அரசியல் இதழை மாதமிரு முறை வெளியிட்டு வருகிறார்.

சென்னையில் உள்ள பல்லாயிரக்கணக்கான தொழிலதிபர்களோடு ஒப்பிடும்போது அருணாசலம் அவ்வளவு பெரிய செல்வந்தர் என்று சொல்ல முடியாது. ஆனால் சம்பாதிக்கும் பணத்தில் இரண்டில் ஒரு பகுதியைத் தமிழுக்கும் மொழிக்கும் செலவழித்து வருகிறார். நலிந்த தமிழறிஞர்களுக்கு அவர்கள் கேட்காமலேயே ஒரு தொகையை ஊதியமாகக் கொடுத்து வருகிறார். கல்வியில், நீதிமன்றத்தில், கோயிலில் மற்றும் அனைத்துத் துறைகளிலும் அன்னைத்தமிழ் அரியணை ஏறவேண்டும் என்ற ஆவல்மிக்கவர் இவர்.

தொழிலாளர்களுக்கும், தமிழுக்கும் தொண்டாற்றுவதாக மக்களையும், அரசையும், தங்களையும் கூட ஏமாற்றிக்கொள்ளும் சில தொழிலதிபர்கள் வகையைச் சேர்ந்தவர் இவரல்லர். நலத்தின்கண் நாரின்மை தோன்றின் அவனைக் குலத்தின்கண் அஞ்சப்படும் என்று குறள் காட்டும் கயவர்களின் வழியையும் சேர்ந்தவரல்ல. இவர் குடிப்பெருமை மிக்கவர்

450 தொழிலாளர்களுக்கு மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு செலவழித்து எஞ்சிய பணத்தில் எளிமையாக வாழும் சாதாரணத் தொழிலாளியான இவரது நிர்வாக உதவிக்கும் சமூகப்பணிக்கும் இவரது

www.tamilarangam.net



மகனே பெரும்ளவில் துணைபுரிகிறார். அறிவார்ந்த ஒரே மகனைப் பெற்று 68-ம் குறளை நிறைவு செய்த மகிழ்ச்சியில் வாழும் அருணாசலத்தின் ஒரே கொள்கை 'தமிழால் ஒன்றுபடுவோம் என்பதே'!

இது எப்படிச் சாத்தியம்?

ஒட்டுமொத்தமாக உலக மாந்தர் இனம் ஒற்றுமையாக இருப்பதே அனைவரின் நோக்கம், எதிர்பார்ப்பு, முடிந்ததா? இல்லை. உலகம் இனத்தால், மொழியால், மதத்தால் பிரிந்துகிடக்கிறது. இன்னும் சற்று ஆழமாகப் பார்த்தால் அரசியல் கட்சிகளாலும் பிரிந்துவிட்டார்கள். இவர்களை இணைப்பது என்பது எளிமையான செயல் அல்ல. ஆனால் முயற்சிப்பதற்கு எந்தத் தடையும் இல்லை அல்லவா! 'நம்மை இணைப்பது நம் மொழி ஒன்றுமட்டும்தான் என்பதால்தான் 'தமிழால் ஒன்றுபடுவோம்' என்கிறார் இவர்.

www.tamilarangam.net

**31**

# மேகலிங்கம் சுப்பிரமணியன்

(பதிப்பகத் தமிழ்ப்பணி)

[4-2-1943]

பெரும்பாலான ஊனமுற்றவர்கள் தாழ்வு மனப்பான்மையின் காரணமாகத் தங்கள் சொந்த முயற்சியில் நிற்கவும் முடியாமல், சமூகத்தோடு ஒன்றியும் வாழ முடியாமல் விரக்தி நிலையில் வாழ்க்கையை நடத்துகிறார்கள். ஆனால் சாதனைகளைப் படைப்பதற்கு ஊனம் ஒரு தடையே அல்ல என்பதை நிரூபிக்க வாழ்க்கைப் போராட்டத்தில் எதிர்நீச்சல் போட்டு, வாழ்க்கையிலும், சமூக நிலையிலும் உயர்பவர்கள் வெகுசிலரே! அவர்களில் முக்கியமானவர் மேகலிங்கம் சுப்பிரமணியன்.

இளம்பிள்ளைவாதத்தால் இரண்டு கால்களும் முடமான நிலையிலும் தனது அறிவாலும் உழைப்பாலும் உயர்ந்து, இந்தியாவின் முன்னணிப் பதிப்பகங்களில் ஒன்றான நியூ செஞ்சுரி புக் ஹவுசின் செயலாளராகச் சிறப்புடன் பணியாற்றுகிறார்.

இவரது திறமைகளைப் பாராட்டி 1998-ஆம் ஆண்டு 'உடல் ஊனமுற்றோரில் திறமையான பணியாளர்' என்ற

www.tamilarangam.net



திட்டத்தின் கீழ் தேசிய விருதும், மாநில அரசின் விருதும் வழங்கப்பட்டுள்ளன.

இவரது வாழ்க்கை வரலாறு படிப்பவர்களுக்கு ஒரு பாடமாகவும், முன்னேற வேண்டும் என்ற இலட்சியத்திற்குப் படிக்கட்டுகளாகவும் அமையும்.

இந்திய வரலாற்றில் எட்டையபுரம் என்ற ஊர் மிகவும் புகழ்பெற்றது. இங்குதான் மகாகவி பாரதியார் பிறந்தார், சீறாப்புராணம் எழுதிய உமறுப்புலவரின் சமாதியும் சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான முத்துசாமி தீட்சிதரின் சமாதியும் உள்ளன. சுதந்திரப் போராட்டத்தின் முதல் களப்பலியெனப் புகழப்படும் வீரபாண்டிய கட்டபொம்மனைக் காட்டிக் கொடுத்ததாக கூறப்படுவதும் இவ்வூரை ஆண்ட எட்டையப்பர் என்ற மன்னர்தான். இப்படிப்பட்ட சரித்திரச் சான்றுமிக்க ஊரில் நெசவாளர் தொழில் செய்துவந்த மேகலிங்கம்-அங்கம்மாள் என்னும் தம்பதியருக்கு 4-2-1943-ஆம் ஆண்டு எட்டாவது மகனாக சுப்பிரமணியன் பிறந்தார்.

மேகலிங்கம் எட்டையபுரத்தில் நிலச்சுவான்-தாரராகவும் பெருந்தன வணிகராகவும் நல்ல வசதிகளுடன் வாழ்ந்தவர். சூழ்ச்சியாளர்கள் சிலரின் சதிச் செயல்களால் தனது செல்வங்கள் அத்தனையும் இழந்து ஏழ்மை நிலைமை அடைந்தார். ஆனாலும் மனம் தளராமல் வாழ்க்கைப் போராட்டத்தைச் சந்தித்து மக்களை வளர்த்தார்.

www.tamilarangam.net



பிறக்கும்போது மற்ற குழந்தைகளைப் போலவே படுசுட்டியாக இருந்த சுப்பிரமணியன் இரண்டு வயதாகும் நிலையில் தெருவில் விளையாடிக் கொண்டிருந்தார். இவரை ஒரு மாடு விரட்டவே அலறியபடி ஓடிக் கழிவுநீர் தொட்டி ஒன்றில் விழுந்துவிட்டார். தொடர்ந்து காய்ச்சலடித்தது. நோய் குணமானபின் ஓர் அதிர்ச்சி! சுப்பிரமணியனால் எழுந்து நிற்கவோ நடக்கவோ இயலாத நிலை ஏற்பட்டது.

இளம்பிள்ளைவாதத் தடுப்பு மருந்தான போலியோ சொட்டுமருந்துகள் இல்லாத அந்தக் காலத்தில், அங்கம்மாள் அம்மையார் தனது மகனுக்கு நாட்டு வைத்தியங்களைச் செய்தார். எந்த மருந்தாலும் குணமாக்க முடியாத அந்நோய், இந்தியாவின் ஆறுகோடி ஊனமுற்றோரில் ஒருவராக அவரும் இருக்கவேண்டிய நிலையை ஏற்படுத்தியது.

ஐந்து வயதானபோது சுப்பிரமணியன் எட்டையபுரத்தில் உள்ள மாரியப்ப நாடார் தர்ம வித்தியாசாலைப் பள்ளியில் சேர்க்கப்பட்டார். இளம் வயதிலேயே இவரது பேச்சுத் திறனும், குணநலன்களும் இவர் வயதொத்த பிள்ளைகளைக் கவரவே, அச்சிறுவர்கள் எப்போதும் சுப்பிரமணியனுடனேயே இருந்தார்கள். அச்சிறுவர்களுக்குத் தலைவன்போல் நடந்துகொண்ட சுப்பிரமணியனை, ஒவ்வொரு சிறுவனும் தனது முதுகில் சுமந்துகொண்டு பள்ளிக்குச் செல்வது வழக்கம். போகும் வழியில் தவறு செய்யும்

www.tamilarangam.net



சிறுவர்களைச் சிறிய கம்பினால் அடிக்கும் 'அதிகாரமும்' சிறுவர்களால் இவருக்கு வழங்கப்பட்டிருந்தது.

தெருப்பிள்ளைகள் எப்போதும் இவரைச் சுற்றியே வட்டமடிப்பதைப் பார்க்கும் பெரியவர்களில் சிலர். ''இந்த நொண்டிப் பயலிடம் அப்படி என்ன இருக்கிறதோ தெரியவில்லை, இப்படிப் பிள்ளைகள் கூட்டம் மொய்க்கிறதே' என்று எரிச்சலுடனும், வியப்புடனும் கூறுவார்கள்.

எட்டையபுரம் மன்னர் உயர்நிலைப் பள்ளியில் சுப்பிரமணியன் சேர்ந்தார். அப்பள்ளியில் மாணவர்களுக்கு 'ஒன்று-இரண்டு-மூன்று' என்ற எண்களை சொல்லித் தரும்போது 'எட்டு' என்பதற்குப் பதில் 'மகாராஜா' என்று கூறிவிட்டு ஒன்பது, பத்து என்று தொடருவார்கள். 'எட்டையப்பர்' மன்னரின் பெயரில் 'எட்டு' அடங்குவதால் அதை மகாராஜா என்பார்கள்.

அப்பள்ளியில் படித்த ஆரம்ப நாட்களில் சக மாணவர்களின் கேலிக்கும் கிண்டலுக்கும் ஆளாகியிருக்கிறார் இவர்! சிலர் இவரது ஊன்று கோலையும் மூன்று சக்கரசைக்கிளையும் பிடுங்கிக் கொண்டு இவரைத் தெருவில் உருட்டிவிடுவார்கள். எழுந்திருக்க முடியாமல் புழுவைப் போலத் துடிக்கும் சுப்பிரமணியனைப் பார்த்து கை கொட்டிச் சிரிப்பார்கள். இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் அன்றாட நிகழ்ச்சிகளில் ஒன்றாகி விட்டதால், சுப்பிரமணியன் இதைப் பற்றி எப்போதும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கவலைப்பட்டதே இல்லை. மாறாகத் தனது கவனத்தை படிப்பில் செலுத்தி, படிப்பு, பேச்சுப் போட்டி, கவிதைப் போட்டி, மாணாக்கர்களுக்குத் தலைமை தாங்குதல் என அத்தனையிலும் முதல் மாணவராகத் திகழ்ந்தார். ஊனத்தை ஒரு பொருட்டாக இவர் மதித்ததே இல்லை.

பள்ளிப் படிப்பு முடிந்ததும் தூத்துக்குடி வ.உ.சி. கல்லூரியில் வணிகவியல் பட்டப் படிப்பில் சேர்ந்தார். கல்விக் கட்டணங்களைச் செலுத்த இயலாமல் சிரமப்பட்ட நிலையில், கல்லூரி முதல்வர் அ.சீனிவாச ராகவன் இவரை அன்புடனும் பரிவுடனும் கவனித்து ஊனமுற்றோருக்கான உதவித்தொகை போன்றவற்றைப் பெற்றுத் தந்தார். இதனால் சுப்பிரமணியன் 1968-ஆம் ஆண்டில் தனது பட்டப்படிப்பை முடித்தார்.

இவர் வ.உ.சி. கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த காலத்தில் இந்தி எதிர்ப்புப் போராட்டம் தீவிரமாக நடந்து கொண்டிருந்தது. சுப்பிரமணியன் முன்னின்று எட்டையபுரம் அனைத்துக் கல்லூரி மாணவர் சங்கத்தை ஆரம்பித்தார். அச்சங்கத்தின் மூலம் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டதோடு எட்டையபுரம் 'தாலுகா' அந்தஸ்து பெறக் காரணமானார். பாரதி பெயரில் நெசவு ஆலைகள், பெண்கள் கல்லூரி, பெண்களுக்குக் கல்லூரிகளில் முன்னுரிமை போன்றவற்றை வலியுறுத்தி கோரிக்கைகளை எழுப்பினார். இக்கோரிக்கைகளை அப்போதைய தமிழக முதல்வர் அறிஞர் அண்ணா

www.tamilarangam.net



அவர்களுக்கும் அனுப்பிவைத்தார். பெருந்தன்மை மிக்க அண்ணா அவர்கள் சுப்பிரமணியனின் கோரிக்கைகளுக்குத் தமது கைப்படப் பதில் எழுதி வாழ்த்தும் தெரிவித்தார்.

சுப்பிரமணியனுக்குத் தமிழகத்தின் தலைநகரான சென்னையைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை ஏற்பட்டது. கூடவே தனித்தேர்வு ஒன்றும் சென்னையில் எழுதவேண்டி இருந்ததால் சென்னைக்கு வந்தார்.

ஏற்கெனவே பொதுவுடைமைக் கொள்கையின்பால் ஈர்ப்புக் கொண்டிருந்த சுப்பிரமணியன், நியூ செஞ்சுரி புக் ஹவுசின் தலைவராக இருந்த ப. மாணிக்கம் அவர்களைச் சந்தித்து, தனது நிலையைக் கூறித் தனக்கு ஒரு வேலை தரவேண்டும் எனக்கேட்டார். பழகுவதற்கும், பிறருக்கு உதவுவதற்கும், பிறருக்காகவுமே வாழ்ந்த ப. மாணிக்கம் அவர்கள் சுப்பிரமணியனைக் 'கணக்கர்' பதவியில் மாதம் 120 ரூபாய் சம்பளத்திற்குச் சேர்த்துக் கொண்டார்.

சுப்பிரமணியன் நியூ செஞ்சுரி புக் ஹவுசில் வேலைக்குச் சேர்ந்த சில நாட்களிலேயே, தலைமைச் செயலகத்தில் எழுத்தர் பணி கிடைத்தது. வாழ்க்கைக்கு உத்தரவாதமுள்ள இப்பணியை விட்டுவிட வேண்டாம் என சுப்பிரமணியனின் நண்பர்கள் வற்புறுத்தினர். சுப்பிரமணியனும் அப்படித்தான் சிந்தித்துக் கொண்டிருந்தார். ஆனால் நியூ செஞ்சுரி புக் ஹவுசின் நிர்வாக இயக்குனரான திரு. ஆர். இராதாகிருஷ்ணமூர்த்தி அவர்கள்

www.tamilarangam.net



சுப்பிரமணியனை அழைத்து, 'இந்தத் துறையிலேயே கடினமாக உழை, எதிர் காலத்தில் மிகச் சிறந்த நிலைக்கு வருவாய். எழுத்தராகச் சேர்ந்து எழுத்தராகவே காலம் தள்ளி, காணாமல் போவதை விட, உழைப்பால் உயர்ந்து உலகறிந்த நபராக வாழ்ந்து காட்டுவதுதான் சிறந்தது' என அறிவுறுத்தினார்.

இருதலைக் கொள்ளி எறும்பு போன்ற நிலையில் இருந்த சுப்பிரமணியன், இராதாகிருஷ்ணமூர்த்தியின் அறிவுரையைச் சிந்திக்க ஆரம்பித்தார். இராதா கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தந்தை நிலையிலிருந்து அடுத்தவர்களுக்கு ஆலோசனைகளையும், உதவி களையும் வழங்கும் பண்பாளர். அடுத்தவர்களை வாழ வைக்க வேண்டும் என்று மட்டுமே சிந்திக்கும் உயர் நெறியாளர். தான் கெட்டுப்போக அவர் விட்டுவிடமாட்டார் என்ற முடிவுக்கு வந்த சுப்பிரமணியன் நியூ செஞ்சுரி புக் ஹவுசிலே தொடர்ந்து பணியில் நீடித்தார்.

1990-ஆம் ஆண்டுக்கு முன் ரஷ்ய நாட்டு உதவியுடன் தமிழில் மலிவு விலையில் தரமான நூல்கள் பலவற்றை வெளியிட்டு தமிழர்களிடம் எழுத்தார் வத்தையும் கல்வி மேம்பாட்டையும் உருவாக்கிய ஒரே நிறுவனம் என்றால் அது நியூ செஞ்சுரி புக் ஹவுசாகத்தான் இருக்க வேண்டும்.

எல்லாரும் தமிழில் அறிவியல் நூல்கள் வெளியிடத் தயங்கிய காலத்திலேயே விவசாயம், மருத்துவம்,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தொழில்நுட்பம், அறிவியல், குழந்தை நூல்கள் என அனைத்துத் தரப்பினரும் எளிய முறையில் விளங்கிக்கொண்டு படிக்கும் வகையிலும், மலிவு விலையிலும் நூல்களை வெளியிட்டு வந்தது இந்நிறுவனம். தமிழகத்தில் முதன் முதலாக நடமாடும் நூல் விற்பனை நிலையத்தையும், புத்தக நிறுவனத்தின் சார்பில் இலவச மருத்துவமனை, மேல்நிலைப் பள்ளி, குழந்தைகள் காப்பகம் போன்றவற்றையும் நடத்தி வரும் ஒரே நிறுவனம் இதுதான்! தமிழகத்தில் இதற்கு 20 கிளைகள் உள்ளன.

நியூ செஞ்சுரி நிறுவனத்தில் நூற்று இருபது ரூபாய் சம்பளத்தில் கீழ்நிலைப் பணியாளராகப் பணியில் சேர்ந்து தனது உழைப்பு, நேர்மை, திறமை ஆகியவற்றின் காரணமாக விரைவில் முன்னுக்கு வந்தார் சுப்பிரமணியன். மேலதிகாரிகளின் நன்மதிப்பும், பொது மக்களின் தோழமையும் இவருக்கு இயல்பாகவே கிடைத்தன. உத்தரப் பிரதேசத்திலுள்ள நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் கிளை அலுவலகத்துக்கு மாற்றப்பட்ட போது, மொழி தெரியாத நிலையிலும், சாதுர்யமாகச் செயல்பட்டு, புத்தக விற்பனையைப் பன்மடங்காகப் பெருக்கினார். சோவியத் ரஷ்யாவுக்குச் சென்று பன்னாட்டுப் புத்தக விற்பனையில் பயிற்சி பெற்று தாயகம் திரும்பினார்.

1986-ஆம் ஆண்டு ஜனசக்தி, தாமரை ஆகிய இதழ்களின் பொதுமேலாளராக பதவி உயர்வு பெற்ற

www.tamilarangam.net



சுப்பிரமணியன், 1992-ஆம் ஆண்டு நியூ செஞ்சுரி புக் ஹவுசின் செயலாளராகப் பொறுப்பேற்றார்.

உலகிலேயே மருத்துவமும் படிப்பும்தான் உன்னதமானவை என்ற கருத்தில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டவரான சுப்பிரமணியன், நூல் வெளியீடுகளைத் தீவிரப்படுத்தி அதிகப் படிப்பாளிகளை உருவாக்கத் திட்டமிட்டார். இதற்காக இரவு பகல் பாராது திட்டங்களைத் தயாரித்துச் செயலாக்கினார்.

சோவியத் யூனியன் தகர்வுக்குப் பிறகு பொருளாதார நெருக்கடியில் சிக்கிக் கொண்ட நியூ செஞ்சுரி புக் ஹவுஸை மீண்டும் வளப்படுத்த வேண்டுமானால், அதிக அளவில் வாடிக்கையாளர்களைப் படிக்க வைக்க வேண்டும். இதற்குத் தரமான பல்துறை நூல்கள் மலிவு விலையில் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். பிற நிறுவனங்களுடன் இணைந்து செயல்படுவது, புத்தகக்கண்காட்சி போன்றவற்றை நடத்தி விற்பனையைப் பெருக்குவது என்பன இவரது திட்டங்களில் அடங்கும்.

டெல்லியில் உள்ள அரசு நிறுவனங்கள் பலவற்றுடன் தொடர்பு கொண்டு நிறுவனத்தின் நூல் விற்பனை, மொழியாக்கம், பதிப்பகத்துறைக்கு அவசியமான தேவைகளை நிறைவேற்றுதல் மூலம் தரமான நூல்களைக் குறைந்த விலையில் வெளியிட்டார். உலக சுகாதார நிறுவனம், மைய அரசின் பதிப்பகங்கள், தேசியப் புத்தக அறக்கட்டளை, தேசிய கல்வி ஆராய்ச்சி

www.tamilarangam.net



மற்றும் பயிற்சி நிறுவனம், இந்திய வரலாற்று ஆய்வுக் கழகம், தமிழக அரசு வெளியிடும் அனைத்துத் தமிழ் நூல்கள் ஆகியவற்றின் நூல் விற்பனை உரிமையையும் தஞ்சை, சென்னை, காமராசர், பாரதிதாசன் பல்கலைக்கழகங்களின் நூல்களின் விற்பனை உரிமையையும் பெற்றார்.

மைய அரசு நிறுவனங்கள் பலவற்றுடன் இணைந்து தமிழில் அறிவியல் நூல்களையும், பாட நூல்களையும் பதிப்பிக்க உதவினார். இதனோடு தமது நிறுவனம் வெளியிட்ட பல புத்தகங்களின் தரத்தை எடுத்துக்காட்டி பல்வேறு கல்வி நிலையங்கள் அவற்றைப் பாட நூல்களாக வைக்கும் தகுதியை ஏற்படுத்தினார்.

அறிவொளி இயக்கத்திற்காகவும் நூல்களைப் பதிப்பித்து அளித்தார். நியூ செஞ்சுரி வெல்பேர் சொசைட்டி, தென்னிந்திய ஆய்வுக் கழகம், இந்திய செஞ்சிலுவைச் சங்கம் ஆகிய பொதுநல அமைப்புகளுடன் இணைந்து கல்வி, மருத்துவம், உணவு வழங்கல் போன்றவற்றிற்கும் அரசு மானியத்தோடு நூல்களைப் பதிப்பித்தார்.

டாக்டர் அம்பேத்கரின் எழுத்துக்கள் மற்றும் சொற்பொழிவுகளைத் தமிழில் வெளியிடவும், விற்பனை செய்யவும் முயற்சிகளை மேற்கொண்டார். புரட்சிகரமான சாதனைகள் மூலம் நியூ செஞ்சுரி புக் ஹவுசை வெற்றிகரமாக இயங்கும் நிறுவனமாகக் குறைந்த காலத்தில் உயர்த்தினார்.

www.tamilarangam.net



தங்களைப் போன்ற பெரிய புத்தக நிறுவனத்தார்களைப் போலவே, சிறிய பதிப்பகத்தினர்கள் பதிப்பிக்கும் நூல்களும் பெரிய அளவில் மக்களைப் போய்ச் சேரவேண்டும் என்ற நோக்கத்துடன் தமிழகத்தில் சிறிய மற்றும் நடுத்தரமான 250 பதிப்பகங்களை ஒன்றிணைக்கும் வகையில் 'தமிழ்ப் புத்தகத் திருவிழா'வை முன்னின்று நடத்தினார். இந்தியாவில் மட்டுமன்றி அயல்நாடுகளுக்கும் பிற பதிப்பகங்களின் நூல்களையும் எடுத்துச் சென்று விற்பனை செய்தளித்தார்.

ஒருமுறை இலங்கையில் புத்தகக் கண்காட்சி நடந்தபோது நியூ செஞ்சுரியின் புத்தகங்கள் சென்னையிலிருந்து கப்பல் மூலமாக இலங்கைக்கு எடுத்துச் செல்லப்பட்டன. நூல்கள் இலங்கையை அடையும் முன்பே கண்காட்சிக்கான தேதி முடிந்துவிட்டது. கொண்டு சென்ற நூல்களைத் திரும்பவும் இந்தியா எடுத்துவர வேண்டிய நிலையில் இருந்த சுப்பிரமணியன், தனது நிலையை இலங்கை அரசிடம் முறையிட்டுத் தனியாக புத்தகக் கண்காட்சி நடத்த அனுமதி கேட்டார். பல இடையூறுகளுக்குப் பிறகு அனுமதி கிடைத்தது. தனது இலக்கைவிட அதிக தொகைக்கு நூல்களை விற்றுச் சாதனையுடன் இந்தியா திரும்பினார்.

நீண்ட காலமாகத் தனது நிறுவனத்தின் வளர்ச்சியை மட்டும் கவனத்தில் கொண்டு உழைத்து வந்த சுப்பிரமணியன் தனது ஒவ்வொரு அசைவிலும் தனது

www.tamilarangam.net



நிறுவனத்திற்கு ஏதாவது ஆதாயம் கிடைக்குமா என்பதையே யோசித்தார். தனது வளர்ச்சியைவிட தனது நிறுவனத்தின் வளர்ச்சியை மட்டுமே சிந்திக்கும் பண்பாளர் இவர்.

பல ஆண்டுகளுக்கு முன்பு மேலாண்மை இயக்குநர் இராதாகிருஷ்ணமூர்த்தி கூறியதைப் போல, பலரால் பேசப்படும் நிலைக்கு மட்டுமல்லாமல்; தமிழக அரசும், இந்திய அரசும் பாராட்டும் நிலைக்கும் கௌரவிக்கும் நிலைக்கும் உயர்ந்தார்.

உடல் ஊனத்தை ஒரு பொருட்டாக நினைக்காமல் உழைப்புக்கு முக்கியத்துவம் தந்து உழைப்பாளிகளுக்கு முன்னோடியாகத் திகழும் இவரைப் பாராட்டி இந்திய அரசு 1998-ஆம் ஆண்டுக்கான 'உடல் ஊனமுற்றோரில் திறமையான பணியாளர்' என்ற திட்டத்தின் கீழ் தேசிய விருதும் அளித்தது. மாநில அரசும் விருதளித்தது. இது தவிர, பல சர்வதேச புத்தக விருதுகளும் இவரை வந்தடைந்தன, தான் மட்டுமின்றி தன்னை நம்பும் படைப்பாளர்களும் விருதுபெற வேண்டுமென்ற நோக்கத்துடன் நூல்களைப் பதிப்பித்துப் பலர் பல்துறை விருதுகள் பெறவும் காரணமானவர் சுப்பிரமணியன்.

தனது சம்பளத்தில் பெரும்பகுதியை ஏழைகளுக்கு அளித்துவரும் இவர், 12-12-1999 அன்று எத்திராஜ் கல்லூரி மாணவர்கள் நடத்திய நாட்டுநலப்பணி நிறைவு விழாவில் கலந்து கொண்டு, நியூ செஞ்சுரி வெல்பேர் சொசைட்டி நடத்தும் நியூ செஞ்சுரி மேனிலைப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பள்ளியின் ஊனமுற்ற மாணவர்கள் நலனுக்கு, ஜனாதிபதி அளித்த விருதுத்தொகை பத்தாயிரம் ரூபாயையும் அளித்தார். மாநில அரசின் விருதுப் பணத்தையும் இதே பள்ளிக்கு அளித்தார்.

வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் நன்மையைச் செய்ய தயங்கக் கூடாது என்பதைக் கொள்கையாகக் கொண்ட சுப்பிரமணியன், இளம்வயதில் வாழ்க்கையின் பெரும்பகுதியைப் பணிக்கு அர்ப்பணித்துக் கொண்டதால், திருமணம் செய்து கொள்ளாமல் வாழ்ந்தார். இவரது கடைசித் தம்பியர் அகால மரணமடைந்து, அவரது துணைவியார் துணையின்றி வாழும் நிலை ஏற்பட்ட சமயத்தில், சுப்பிரமணியனின் தாயார் அவருக்கு மறுமணம் செய்துவைக்க உத்வேகமானார். விதவை வாழ்விலிருந்து விடுபட வைத்து மணம் செய்து வாழ்வளிப்பது நல்லது என்று மகனிடம் கூறினார்.

தனிமையாக வாழ்ந்து வாழ்நாளை வீணாக்குவதை விட தொண்டுள்ளம் கொண்ட தூயவருக்குக் கால்களாக இருந்து சேவையாற்றுவது மேலானது என்ற உறுதிகொண்டு அவரைத் திருமணம் செய்துகொள்ள முத்துலட்சுமி அம்மையார் ஒப்புக் கொண்டார். சமுதாயத்தால் புறக்கணிக்கப்படும் கொடுமைகளில் உடல் ஊனமும், விதவை நிலையும் பெரும்பங்கு வகிப்பவை. இந்நிலையை மாற்றி ஒருவருக்குத் துணையாக இன்னொருவர் வாழ வேண்டுமென்ற நோக்கத்துடன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இருவரும் திருமணம் செய்துகொண்டு இல்லறம் நடத்தினார்கள்.

கணவனுக்கு மனைவி ஊன்றுகோலாகவும் உறுதுணையாகவும் இருந்தார். மனைவியாக மட்டுமல்லாமல் தாயாகவும் இருந்து தனது கணவனை ஒரு குழந்தையைப் போலவும் பாவித்துப் பராமரித்து வந்தார். சில நேரங்களில் மனைவி வடிவில் இன்னொரு தாய் நமக்கு அவதரித்திருக்கிறார் என்று கூட மேகலிங்கம் சுப்பிரமணியன் வியந்திருக்கிறார். தனது கணவனை ஒரு சாதனையாளராகப் பார்க்க வேண்டுமென்பதில் ஆர்வம் கொண்டார். அதற்காகவே பிள்ளைப் பேற்றை விரும்பாமல் தனது கணவனுக்குத் தாயாக விளங்குகிறார். ஒரு ஆணின் வெற்றிக்குப் பின் ஒரு பெண் இருக்கிறாள் என்ற மொழிக்கு எடுத்துக்காட்டானவர் முத்துலட்சுமி அம்மையார்!

இதுதவிர தந்தையில்லாத, தாயால் காப்பாற்ற முடியாத வறுமையிலுள்ள குழந்தைகளுக்குத் தையல் வேலை கற்றுக் கொடுத்து பெரிய நிறுவனங்களில் அதிகச் சம்பளத்தோடு வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்து நல்ல கணவனைத் தேர்ந்தெடுத்து திருமணமும் செய்து வைத்திருக்கிறார். வயிறு வாடி வந்த வயோதிகப் பெண்களுக்கு உணவு கொடுத்து உபசரிப்பவர்; கணவனால் கைவிடப்பட்டவர்களுக்கு அடைக்கலம் கொடுப்பவர்; மனச்சுமையை இறக்கிவைக்க வரும் முதியோர்களை முகம் கோணாமல் உபசரித்து

www.tamilarangam.net



அவர்களுக்கு வடிகாலாக இருப்பவர். வேலையில்லாமல் சமூகவிரோதச் செயல்களில் ஈடுபட்டவர்களைக்கூட அழைத்து, அரவணைத்து கைத்தொழிலைக் கற்றுக் கொடுத்து புதிய வாழ்க்கை கொடுப்பவர்; வசிப்பதற்கு வீடு இல்லாத ஆதரவற்றவரை ஆதரித்துத் தனது வீட்டில் தங்கச் செய்து உதவி செய்பவர்.

சுற்றம் நலம்பெற வேண்டும் என்று மனைவி கருதுகிறார். நிறுவனம் வளம்பெற வேண்டும் என்று கணவன் கருதுகிறார். இவர்கள் இருவரும் கருத்தொருமித்த தம்பதியினர்.

இல்லறத்தில் இத்தம்பதியினர் பிள்ளைபெற்றுக் கொள்ளவில்லை என்றாலும், ஆயிரக்கணக்கான புத்தகக் குழந்தைகளைப் பெற்று உலகம் முழுவதும் உலாவ விட்டிருக்கிறார்.

இத்தகைய எளிய, நேர்மையான, தூய்மையான, சிறந்த பண்பாளரின் வாழ்க்கை தாழ்வு மனப் பான்மையால் நிலை குன்றாமல் கவனித்துக் கொண்டவர். அவரைச் செயல்பட வைத்த மேலாண்மை இயக்குநர் இராதாகிருஷ்ணமூர்த்தி என்று நன்றியோடும் பெருமையோடும் கூறிக் கொள்கிறார்.

www.tamilarangam.net

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்